235

சென்னை ராஜதானி

# பூகோள சாஸ்திரம்

235

ஐந்தாம் வகுப்பு

3165
OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
12 OCT 1938

ஆரணி போர்டு ஹைஸ்கூல்
தலைமை உபாத்தியாயர்
S. சுப்பிரமணிய அய்யர், B. A., L. T.,
எழுதியது.

3165
3236

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் பெற்றது.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

மதுரை & சென்னை.

காபி ரைட்] 1938. [விலை அணா 7.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 OCT 1968
MADRAS

சென்னை ராஜதானி

# பூகோள சாஸ்திரம்

First Edition — 1933.
Reprinted — 1934.
do. — 1938.

சென்னை ராஜதானி

# பூகோள சாஸ்திரம்

ஐந்தாம் வகுப்பு

915.482 (1)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 OCT 1938
MADRAS

3201

ஆரணி போர்டு ஹைஸ்கூல்
தலைமை உபாத்தியாயர்
S. சுப்பிரமணிய ஐயர். B. A., L. T.,
எழுதியது.

**Approved by the Text-Book Committee, Madras.**
**(Vide page 114. of the Fort. St. George Gazette, Datde 10-5-38.)**

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
மதுரை & சென்னை.

காபி ரைட்] 1938. [விலை அணா 7.

Printed at
The Easen Printing Works,
MADURA.

# முகவுரை.

இந்தப் பூகோள சாஸ்திரமானது சென்னைத் துரைத் தனத்தாரால் எலிமெண்டரி, செகண்டரி பாடசாலை உபாத்தியாயர்களுக்காகக் குறிப்பு விவரங்களைக் காட்டும் விதிகளை அநுசரித்துச் சிறு பிள்ளைகள் எளிதில் கற்கு மாறு மிகவும் சுலப நடையில் எழுதப்பட்டுள்ளது.

சென்னை ராஜதானியில் பூகோள விஷயங்களைப் பல பிரிவுகளாகப் பிரித்து, அவைகளை ஒழுங்கே சொல்ல வேண்டிய இடங்களில் சொல்லியும் ஆங்காங்கு விஷயங் களையும் பெயர் விவரங்களையும் நன்கு மனதில் பதித்துக் கொள்ளும் மாதிரியாக ஏராளமாகப் படங்களையும் அமைத்துப் பிரயாசையையும், பொருட்செலவையும் கருதாமல் வெளியிட்டிருக்கிறது.

முதல் பாகத்தில் பொது விஷயங்களை நன்கு விளக்கி இருக்கிறது. பூமி, சூர்யன், சந்திரன், நக்ஷத்திரங்களைப் பற்றியும், திசைகள், திசை அறிதல் முதலிய விஷயங்களைப்பற்றியும், நிலம், நீர் முதலியவைகள், பூமி மேற்பரப்பு, சீதோஷ்ண மண்டலங்கள், காற்று, மழை முதலிய சகலவிஷயங்களைப்பற்றியும் அதிகமாக விரித்துக் கூறாமல் போதுமான அளவு சுருக்கப்பட்டிருக்கிறது.

ராஜதானியின் பூகோள சம்பந்தமான விஷயங்களைப் பொதுமத்திய முறைகளை அனுசரித்துத் தக்கபடி பிரித்துத் தொகுத்தும், பிள்ளைகள் தெரிந்து கொள்ள வேண்டியவைகள் எல்லாவற்றையும் தெரிவித்தும், அனுபோகத்திற்கு ஏற்றவாறு இப்புத்தகம் தயார் செய்யப்பட்டிருக்கிறது.

இதைக் கண்ணுறும் ஆசிரியர்கள் அனைவரும் இதை நன்கு மதித்துப் பாடப் புத்தகமாக ஏற்படுத்துவார்களென்று நினைக்கிறேன்.

இதில் ஏதேனும் குற்றம் குறை இருப்பின் அதை எனக்குத் தெரிவிக்கும் நண்பருக்கு எனது மனமார்ந்த வந்தனத்தை முன்னரே அளிக்கின்றேன்.

ஆசிரியன்.

# பொருள் அடக்கம்.


| பாடம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| | முதற் பாகம். | |
| 1. | பொது விஷயங்கள் ... | 1 |
| 2. | திசைகளும் திசை அறிதலும் ... | 6 |
| 3. | பூமியும் கிரகங்களும் ... | 9 |
| 4. | நிலமும் நீரும் ... | 15 |
| 5. | பூமியின் மேற்பரப்பு ... | 17 |
| 6. | பூமியும் சீதோஷ்ண மண்டலங்களும் | 21 |
| 7. | பூமியும் காற்றும் மழையும் ... | 23 |
| 8. | நதிகளும் ஏரிகளும் ... | 26 |
| 9. | பூமியும் மனித ஜாதியார்களும் ... | 29 |
| 10. | இந்தியா எல்லைகளும் இயற்கைப் பாகங்களும் | 30 |
| | இரண்டாம் பாகம். | |
| 11. | சென்னை ராஜதானி, எல்லைகளும் பிரிவுகளும் | 36 |
| 12. | ஷை தீவுகளும் மலைகளும் ... | 38 |
| 13. | மலைகளும் சமவெளிகளும் .... | 41 |
| 14. | நதிகளும் ஏரிகளும் I ... | 43 |
| 15. | ஷை II ... | 49 |
| 16. | சீதோஷ்ண ஸ்திதியும் மழையும் ... | 58 |
| 17. | நீர்ப்பாய்ச்சல் ஆதாரங்கள் ... | 62 |
| 18. | சமவெளிகளும்விளைபொருள்களும்... | 64 |
| 19. | மலைப்பிரதேசங்களும் விளைபொருள்களும் | 68 |
| 20. | காடுகளும் விளைபொருள்களும் ... | 70 |
| 21. | சுரங்கங்களும் விளைபொருள்களும்... | 71 |

| பாடம். | விஷயம். | | பக்கம். |
|---|---|---|---|
| 22. | தொழில்களும் வியாபாரங்களும் I | | 73 |
| 23. | ஷை ஷை II | .... | 75 |
| 24. | ஷை ஷை III | ... | 76 |
| 25. | போக்குவரவு சாதனங்கள் | ... | 79 |
| 26. | ஷை 2 கால்வாய்களும் கழிகளும் | | 81 |
| 27. | ஷை 3 நதிகளும் வண்டி ரஸ்தாக்களும் | | 83 |
| 28. | ஜனங்களும் பாஷைகளும் | ... | 84 |
| 29. | சரித்திரமும் தற்கால அரசாட்சியும் | | 86 |
| 30. | ஜில்லாக்களும் பட்டணங்களும் 1 | | 88 |
| 31. | ஷை 2 | ... | 90 |
| 32. | ஷை 3 | ... | 94 |
| 33. | ஷை 4 | ... | 100 |
| 34. | ஷை 5 | ... | 104 |
| 35. | ஷை 6 | ... | 111 |
| 36. | ஷை 7 | .... | 119 |
| 37. | ஷை 8 | .... | 122 |
| 38. | சுதேச இராஜ்யங்களும் ஜமீன்களும் 1 | | 124 |
| 39. | ஷை 2 | .... | 127 |
| 40. | ஷை 3 | ... | 129 |
| 41. | சென்னை ராஜதானியில் உள்ள முக்கிய பட்டணங்கள் | | 131 |
| | வினாக்கள் | ... | 133 |

சென்னை
ராஜதானி
வங்காளக்
குடாக்கடல்
அரபிக்கடல்
இந்து
ஸமுத்திரம்
லங்கை
சென்னபட்டணம்
மைஸூர்
பெங்களூர்
மைஸூர்
பம்பாய்
ராஜ்யம்
ஹைதராபாத்
நைஜாம் ராஜ்யம்
மதுரை
புதுச்சேரி
நாகபட்டணம்
கொழும்பு
காலி
கொச்சி
ஆலப்புழை
கொல்லம்
திருவனந்தபுரம்
பெரியாறு
பொன்னானி
பெப்பூர்
கள்ளிக்கோட்டை
தலைச்சேரி
கன்னனூர்
உடுப்பி
விருதுநகர்
ஸ்ரீவில்லிபுத்தூர்
ராமநாதபுரம்
தூத்துக்குடி
திருச்செந்தூர்
நாகர்கோவில்
பாம்பன்
திண்டுக்கல்
திருச்சி
கோயமுத்தூர்
சேலம்
திருவாரூர்
விழுப்புரம்
கர்நூல்
பல்லாரி
பெத்ராசலம்
விஜயநகரம்
விசாகப்பட்டணம்
காக்கிநாடா
ராஜமஹேந்திரவரம்
மசிலிப்பட்டணம்
நெல்லூர்
கோதாவரி
பரலாகிமிடி
ஜெயபுரம்
ஒரிஸ்ஸா
சென்னை ராஜ்யத்தில் வழங்கும்
பாஷைகளை நூற்றுக்கு இத்தனை
பேர் பேசுகிறார்கள் என்பது.
தமிழ்
தெலுங்கு
மலையாளம்
கன்னடம்
துருவம்
கொங்கணி
மஹாராஷ்
41%
ராஜ்யத்தின் எல்லை
பிரிவுகளின் எல்லைகள்
பட்டணங்கள் 100,000 பேர்களுக்கு மேல்
50,000-100,000
20,000-50,000
10,000-20,000
10,000 கீழ்
76
78
80
82
84
20
18
16
14
12
10
8
6

# சென்னை ராஜதானி

# பூகோள சாஸ்திரம்.

## முதற்பாகம்.

## பொது விஷயங்கள்.

### பாடம் 1.

### பூமி, சூரியன், நக்ஷத்திரங்கள்.

பூகோளசாஸ்திரமாவது பூமியையும் அதிலுள்ள வஸ்துக்களையும் பற்றிக் கூறும் நூல். வஸ்துக்கள் இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள் என இருவகைப் படும். இயற்கைப் பொருள்கள் கடவுளால் உண்டாக்கப் பட்டவை. செயற்கைப் பொருள்கள் அவ்வப்போது மனிதரால் உண்டாக்கப்பட்டவை.

நாம் வசிக்கும் பூமியையும் அதிலுள்ள வஸ்துக்களையும் பற்றி அறிந்து கொள்வதற்காக நாம் பூகோளசாஸ்திரத்தைப் படிப்பது அதிக அவசியம்.

### வானமும், பூமியும்.

நாம் வானத்தை அண்ணாந்து பார்க்கும்போது, அது நீல நிறமுள்ளதாய் நமது கண்களுக்குத் தோன்றுகிறது. ஆகாயத்தில் மேகங்கள் அசைவாடுவதையும், அவற்றிற்கு மேல் அதிக உயரத்தில் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் முதலிய வானஜோதிகளையும் நாம் பார்க்கிறோம். அவற்றுள் சூரியனே பிரதான ஜோதியாகும்.

## சூரியன்.

அதிகாலையில் சூரியன் உதயமாவதை நாள்தோறும் நாம் பார்க்கிறோம். அது வெகுதூரத்தில் பூமியிலிருந்து வெளிக்கிளம்பி வருவதுபோல் நமக்குத் தோன்றுகிறது. பிறகு அது கொஞ்சங்கொஞ்சமாய் உயர ஏறி மத்தியானம் நமது தலைக்கு நேராக வந்து மாலையில் அஸ்தமிக்கிறதாகக் காணப்படுகிறது. இரவில் அது காணப்படாமையால் இரவு இருட்டாயிருக்கிறது. அது மறுபடியும் மறுநாள் காலையில் தோன்றுகிறது. இதனால் சூரியன் பூமியைச் சுற்றிவருவதாக நமது முன்னோர்கள் நினைத்தார்கள். ஆனால் தற்காலத்தில் வான சாஸ்திரிகள் நன்றாய் ஆராய்ந்தறிந்து பூமி சூரியனைச் சுற்றி வருவதாகக் கண்டறிந்திருக்கிறார்கள். சூரியன் அதிகப் பெரிதான ஒரு அக்கினிக் கோளம். அது அதிக ஒளியை உடையதாதலால் நாம் அதைக் கண்ணால் பார்த்தால் நமது கண்கள் கூசும். இது ஒரே இடத்தில் நிலையாயிருக்கிறது. இது எப்போதும் வட்ட வடிவமாகக் காணப்படும். இதன் வடிவம் மாறுகிறதில்லை சூரியனிடத்திலிருந்து பூமி வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் பெறுகின்றது. சூரியன் இல்லா விட்டால் வெளிச்சம் கிடையாது. மழை பெய்யாது. பிராணிகளும் செடிகளும் பிழைத்திருக்கமாட்டா. சூரியனுடைய வெளிச்சத்துக்கு வெயில் என்று பெயர்.

## சந்திரன்.

சூரியனைப் போல் சந்திரனும் ஒரு கோளம். இது சூரியனைவிட அநேக லக்ஷ மடங்கு சிறியது. சந்திரனுக்கு இயற்கையாக வெளிச்சமில்லை. சூரியனைப்போல் சந்திரனும் தன் ஒளிகொண்டு பிரகாசிக்குமானால் எந்த நேரத்திலும் வட்ட வடிவமாகத் தோன்றும். அது பூமியைப்போல் சூரியனிடமிருந்து ஒளியையும் உஷ்ணத்தையும் பெறுகின்றது. பின், தான் பெற்ற ஒளியைப் பிரதிபிம்பிக்கிறது. அதனால் சந்திர வெளிச்சம் குளிர்ச்சியாகவும் சுகமாகவுமிருக்கின்றது. சந்திர வெளிச்சத்துக்கு நிலவு என்று பெயர். சந்திரன் பார்வைக்குச் சூரியனளவு காணப்பட்டாலும் அது சிறிது. சூரியனைவிட நமக்கு அதிக சமீபத்திலிருக்கின்றது. சந்திரன் பூமியைச் சுற்றுகிறது. சந்திரன் தன்னையும் சுற்றிக்கொண்டு பூமியை ஒரு தடவை சுற்ற 4 வாரம் அல்லது 28 நாளாகிறது. இதை நாம் ஒரு மாதம் என்கிறோம். சந்திரன் உருண்டையாயிருப்பதால், சூரிய வெளிச்சம் அதன் மீது ஒரு பாதியில்தான் விழுகிறது. சந்திரன் பூமியைச் சுற்றி ஓடும்போது இதன் வெளிச்சம் பட்ட பாகம் நமக்குச் சில



வேளைகளில் தெரிகிறது. அதன் மற்ற பாகம் தெரிகிற தில்லை. சந்திரன் மீது சூரிய வெளிச்சம் படும் பாகம் பல சமயங்களில் பல வடிவுள்ளதாகத் தோற்றுகிறது. சந்தி ரன் மாதத்தில் ஒரே நாளில் பூர்ண வட்டமாகக் காணப் படும். அத்தினத்திற்குப் பௌர்ணமி என்று பெயர். இத் தினத்தில் இரவு முழுதும் சந்திரன் பிரகாசிக்கும். பௌர் ணமிக்கு மறுதினம் முதல் 14 தினம்வரை சந்திரன் நாள் ஒன்றுக்கு 2 நாழிகை விதம் நேரங்கழித்து உதயமாவ தோடு வடிவத்திலும் குறைந்துகொண்டேவரும். பதினைந் தாம் நாள் சந்திரன் நமது கண்களுக்குத் தெரியாது. அன் றிரவு முழுதும் இருளாகவே இருக்கும். அத்தினத்திற்கு அமாவாசை என்று பெயர். அமாவாசைக்கு அடுத்த நாளிலும் சந்திரன் காணப்படுவதில்லை. மூன்றும் நாள் சந்திரனின் உருவம் ஒரு வளைந்த கோடுபோல் மேற்குத் திசையில் காணப்பட்டு நாளுக்கு நாள் வளர்ந்து பதினைந் தாம் நாள் மறுபடியும் பூர்ண வட்டமாகக் காணப்படும். அமாவாசைமுதல்பௌர்ணமிவரை சந்திரனுடையஉருவம் பருத்துவரும். இப்பதினைந்து தினங்களுக்கும் வளர்பிறை என்று பெயர். இக்கால அளவிற்குப்பூர்வபட்சம் அல்லது சுக்கிலபட்சம் என்றும் சொல்லுவதுண்டு. அப்படியே பௌர்ணமி முதல் அமாவாசை வரை சந்திரனுடைய உரு வம் குறைந்து கொண்டே வருவதால் இந்தப் பதினைந்து தினங்களுக்கும் தேய்பிறை என்று பெயர். இக்கால அள விற்கு அமரபக்ஷம் அல்லது கிருஷ்ணபக்ஷம் என்றும் சொல்லுவதுண்டு.

உண்மையில் சந்திரன் வளர்வதும் இல்லை, தேய்வதும் இல்லை. அது எப்போதும் ஒரே தன்மையாகவே இருக்கிறது. சந்திரனின் வெளிச்சமான பாகம் கூடுவதாலும் குறைவதாலும் இவ்வகை வித்தியாசம் காணப்படுகிறது.

## நக்ஷத்திரங்கள்.

சூரியனையும் சந்திரனையுந்தவிர, மப்புமந்தாரமில்லாத இரவில் வயிரக்கற்களைப்போல் ஆகாயத்தில் பிரகாசிக்கிற எண்ணுக்கடங்காத பல ஜோதிகளை நாம் பார்க்கிறோம். அவைகளுக்கு நக்ஷத்திரங்கள் என்று பெயர். இரவில் காணப்படும் திரளான நக்ஷத்திரங்கள் பகலிலும் இருக்கின்றன. ஆயினும் சூரிய ஒளி அதிகப் பிரகாசமாயிருக்கிறதால் அவைகளை நாம் பகலில் பார்க்க முடியவில்லை. சந்திரன் பிரகாசிக்கும் இரவிலுங்கூட அவைகளில் அநேகம் நமக்குத் தெரிகிறதில்லை. நக்ஷத்திரங்கள் சுயம்பிரகாசமுள்ள பெரிய கோளங்கள். நக்ஷத்திரங்கள் அதனதன் ஸ்தானத்தில் நிலை பெற்றிருக்கின்றன. அவை இடம் விட்டு இடம் மாறுகிறதில்லை. இவை பளிச் பளிச் என்று மினுமினுத்துக் கொண்டே பிரகாசிக்கும்.

நமது முன்னோர்கள் நக்ஷத்திரங்களை 27 மண்டலங்களாகப் பிரித்து அவை ஒவ்வொன்றுக்கும் பெயரிட்டிருக்கிறார்கள். மேற்கூறிய நக்ஷத்திரங்களைத் தவிர வடக்கில் துருவ நக்ஷத்திரமும், சப்தரிஷி என்று சொல்லப்பட்ட 7 நக்ஷத்திரக் கூட்டமும் காணப்படும்.

இவ்வேழு நக்ஷத்திரங்களில் இரண்டிற்குக் குறிகாட்டிகள் என்று பெயர். இவை துருவ நக்ஷத்திரம் இருக்கும் திசையைக் காட்டுகின்றன. இவ்விரு நக்ஷத்திரங்களையும் இணைக்கும் நேர் கோட்டின் அளவைப்போல் 7 மடங்கு தூரத்தில் அக்கோட்டின் திசையிலேயே துருவ நக்ஷத்திரம் காணப்படும். துருவ நக்ஷத்திரம் மாறாமல் எப்போதும் வட திசையிலேயே காணப்படும். ஆகவே துருவ நக்ஷத்திரம் காணப்படும் திசை வடக்கு. வட திசையை அறிந்த பிறகு மற்றதிசைகளை அறிவது சுலபம். இரவில் இவ்வாறாகத் திசைகளை நாம் தெரிந்து கொள்கிறோம்.




பாடம் 2.

## திசைகளும், திசை அறிதலும்.

அதிகாலையில் சூரியன் உதிக்கிறதை நீங்கள் தினந்தோறும் பார்க்கிறீர்கள். எந்தத் திசையில் சூரியன் உதிக்கிறதோ அந்தத் திசைதான் கிழக்கு. அது அஸ்தமிக்கும் திசைதான் மேற்கு. சூரியன் உதித்திருக்கையில் நீங்கள் சூரியனை நோக்கி நிற்கும்பொழுது உங்கள் வலது கைப் பக்கம் தெற்கு. இடது கைப் பக்கம் வடக்கு.

இம் முக்கிய திசைகள் நான்கும் நீங்கலாக வேறு சில உபதிசைகளும் உண்டு. அவைகள் அடியில் கூறப்பட்

டிருக்கிறபடி வடக்குக்கும் கிழக்குக்கும் மத்தியில் இருப்பது வடகிழக்கு.




கிழக்குக்கும் தெற்குக்கும் நடுவே உள்ளது தென்கிழக்கு, தெற்குக்கும் மேற்குக்கும் மத்தியிலிருப்பது தென்மேற்கு. மேற்குக்கும் வடக்குக்கும் நடுவே உள்ளது வடமேற்கு என்பனவாம். இவைகளையும் சேர்த்து ஆகத்திசைகள் எட்டு என்பர்.

## படத்தில் திசைகளை அறிதல்.

நீங்கள் ஒரு படத்தைநோக்கி நிற்கும் போது திசைகள் மாறும். அதாவது:- அப்படத்தின் தலைப்பக்கம் வடக்கு. அதன் அடிப்பக்கம் தெற்கு. வலது கைப்பக்கம் கிழக்கு. இடது கைப்பக்கம் மேற்கு.



## திசை அறி கருவி.



எந்நேரத்திலும் எவ்விடத்திலும் திசை அறிவதற்கு ஒரு கருவி உண்டு. அதில் காந்த ஊசி ஒன்றுண்டு. அது இரும்பை இழுக்கக்கூடியது. ஊசியின் ஒரு நுனியில் ஒருவித அடையாளம் இருக்கும். அந்த ஊசியின் நடுவில் ஒரு கயிற்றைக் கட்டித் தொங்கவிட்டால் அடையாளமுள்ள நுனி எப்போதும் வடதிசையையே காட்டி நிற்கும். அதை நாம் எப்படி அசைத்து விட்டாலும் அது ஆடி ஆடித் திரும்பி, அதன் அடையாளமுள்ள நுனி வட திசையை நோக்கி நிற்கும்.

காம்பஸ் என்பது கைக் கெடிகாரம்போல் இருக்கும். அதன் உருவத்தைப் படத்தில் பாருங்கள். கெடிகாரம் காலம் காட்டும். காம்பஸ் திசைகளைக் காட்டும். கடிகாரத்தில் நேரங் காட்டும் கருவிக்கு முள் என்று பெயர். காம்பஸில் திசை காட்டும் கருவிக்கு ஊசி என்றுபெயர். காம்பஸில் உள்ள ஊசியின் ஒரு நுனி எப்போதும் வட திசையையே காட்டிக்கொண்டிருக்கும்.



## பாடம் 3.

## பூமியும், கிரஹங்களும்.

கிரஹங்கள் நக்ஷத்திரங்களைப்போல் ஒரே இடத்தில் நிலையாயிராமல் சூரியனைச் சுற்றி வரும் கோளங்கள். இவை நக்ஷத்திரங்களைப் போல் மின்னி மின்னிப் பிரகாசியாமல் ஒரே விதமாய் ஒளி வீசும்.

சூரியனைச் சுற்றியோடும் கிரஹங்களாவன:—புதன், சுக்கிரன், பூமி, அங்காரகன் அல்லது செவ்வாய், குரு அல்லது வியாழன், சனி, யுரானஸ், நெப்டியூன்.

### பூமி.

நாம் வசிக்கும் பூமியானது கிரஹங்களுள் ஒன்று.




அது கிச்சிலிப் பழம்போல் உருண்டை வடிவமாக இருக்கிறது. இப் பூமியின் சுற்றளவு 24, 856 மைல். அதின் குறுக்களவு 8, 912 மைல். இவ்வளவு பெரிய உருண்டையின் ஒரு சிறிய பாகத்தை நாம் பார்த்துப் பூமி தட்டையாய் இருக்கிறதென்று நினைக்கிறோம். இது சரியன்று. பூமியின் வடிவம் உருண்டை என்பதை நாம் சில உதாரணங்களினால் அறிந்து கொள்ளலாம்.

**1.** ஒருவன் சமுத்திரக் கரையில் நின்றுகொண்டு வெகு தூரத்திலிருந்து கரைமுகமாக வரும் ஒரு கப்பலைப்



பார்த்தால் அவனுக்கு அதன் உச்சிப் பாகம் முதலில் தெரியும். கரைக்குச் சமீபிக்க, சமீபிக்க அதன் அடிப்பாகம் தெரியும். பூமி தட்டையாயிருந்தால் ஆரம்பத்திலேயே கப்பல் முழுவதும் அதே உருவமாகத் தெரியவேண்டும்.

**2.** பூமியைச் சுற்றி ஒருவன் பிரயாணம் செய்துகொண்டே போனால் அவன் எவ்விடத்தில் இருந்து புறப்பட்டானோ அதே இடத்தில் திரும்ப வந்து சேருவான்.

**3.** பூமியில் எல்லா விடங்களிலும் நேரங்கள் மாறுபடுகின்றன. சென்னையில் பகல் 12 மணியாயிருக்கும் போது கல்கத்தாவிலிருப்பவர்களுக்குப் பகல் 12½ மணியாயும், பம்பாயில் இருப்பவர்களுக்குப் பகல் 11½ மணியாயும் இருக்கிறது. பூமி தட்டையாயிருந்தால் இவ்விதமாக நேரம் மாறுபடாது.

**4.** பூமி தட்டையாயிருந்தால்

நன்ருய்த் தெரியும். ஆனுல் இப்போது பூமியின் அந்தங்களில் உள்ளவர்களுக்கு எல்லா நக்ஷத்திரங்களும் தெரியாததால் பூமி உருண்டை என்பது நன்ருகத் தெரிகிறது.




சூரியன் காலையில் கிழக்கில், உதித்து, மேற்கில் அஸ்தமிக்கிறதை நாம் நாள்தோறும் பார்க்கிருேம். வாஸ்தவத்தில் நகருவன சூரியனல்ல. பூமிதான் நகருகிறது. பூமி மணி ஒன்றுக்கு ஏறக்குறைய 1000 மைல் வீதம் மேற்கிலிருந்து கிழக்கு முகமாய்ச் சுழலுகிறது. இவ்வாறு பூமி தன்னை ஒரு தடவை சுற்ற 24 மணி அதாவது ஒரு நாளாகும். இப்படிப் பூமி சுழலும்போது பூமி உருண்டையின் ஒரு பாதி சூரியனுக் கெதிரிலும், மறுபாதி, இருட்டிலும் இருக்கும். பூமி சூரியனுக்கெதிரிலிருக்கும்காலத்தைப்பகல் என்றும், இருட்டிலிருக்கும் காலத்தை இரவு என்றும் சொல்கிருேம். ஒரு பகல் ஒரு இரவு சேர்ந்தது ஒருநாள்.

பூமி சுழலும்போது அதன் மத்தியில் சுழலாமல் இருக்கும் பாகத்திற்குப் பூமியின் அச்சு என்று பெயர். இது சற்றுச் சாய்வாக இருக்கும். இந்த அச்சின் ஒரு நுனி வட

திசையிலிருக்கும் துருவநக்ஷத்திரத்திற்கு நேராக இருக்கும் பூமியின் அச்சின் இரு நுனிகளுக்கும் வட துருவம் தென் துருவம் என்று பெயர். பூமியின் அச்சை அக்ஷரேகை என்றும் சொல்வதுண்டு. பூமியின் வட துருவத்துக்கும்




தென் துருவத்துக்கும் மத்தியில் பூமியின் மேற்பரப்பில் பூமி உருண்டையைச் சுற்றி ஒரு கோடு இருப்பதாக எண்ணிக் கொள்ளுவோம். இக்கோட்டிற்குப் பூமத்திய ரேகை அல்லது நிரக்ஷரேகை என்று பெயர்.

பூமி சூரியனைச் சுற்றி ஓடும் பாதைக்குச் சூரிய வீதி என்று பெயர். இவ்வீதி முட்டை வடிவமானது. இதன் சுற்றளவு 56 கோடி மைல். இம்மஹா தூரத்தைப் பூமி $365\frac{1}{4}$ நாட்களுக்கு ஒரு தடவை சுற்றி வருகிறது. $365\frac{1}{4}$ நாட்கள் கொண்டது ஒரு வருஷம்.

பூமி தன்னைத்தான் சுற்றுவதால் இரவும், பகலும், சூரியனைச் சுற்றுவதால் வருஷமும், சந்திரன் பூமியைச் சுற்றுவதால் மாதமும் உண்டாகிறது. 12 மாதங்கள் கொண்டது ஒருவருஷம். ஒருமாதத்துக்கு 30 நாட்கள். மாதத்தின் ஒரு நாள் ஒரு தேதி.

சூரியன் நமக்கு வடக்கில் சில மாதங்களும், தெற்கில் சில மாதங்களும் காணப்படும். சூரியன் டிசம்பர் மீ 21வ முதல் ஜூன்மீ 21வ முடிய அதாவது தைமீ முதல் ஆனிமீ முடிய வடதிசையில் காணப்படும். இக்காலத்துக்கு உத்தராயணம் என்று பெயர். ஜூன்மீ 21வ முதல் டிசம்பர் 21வ முடிய அதாவது ஆடிமீ முதல் மார்கழிமீ முடியத் தென்திசையில் காணப்படும். இக்காலத்துக்குத் தக்ஷிணாயணம் என்று பெயர்.

## கிரஹணங்கள்.

பூமி சூரியனைச் சுற்றிவருங் காலத்தில், சில சமயம் பூமிக்கும் சூரியனுக்கும் நடுவில் பூமியைச் சுற்றும் சந்திரன் வந்து, சூரியவெளிச்சம் கொஞ்சமோ அல்லது அதிகமோ பூமியின்மேல் விழாதபடி சூரியனை மறைக்கின்றது.




சூரிய வெளிச்சம் தோன்றாத இடங்களில் வசிப்பவர் இந்த மறைதலைச் சூரியகிரஹணம் என்று சொல்லுவார்கள். சூரிய கிரஹணம் அமாவாசை யன்றுதான் உண்டாகும்.

சூரியனைச் சுற்றிப் பூமியும், பூமியைச் சுற்றிச் சந்திரனும் வரும்போது சில காலத்தில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவில் பூமி வருகின்றது. அப்போது பூமியின் நிழல் சந்திரன் மேல் விழுகின்றது.




அப்போது சந்திரன் இருளடைவதால் அது நமது கண்களுக்குத் தோன்றுவதில்லை. சந்திரன் நமது கண்ணுக்குத் தெரியாமல் மறையுங்காலத்திற்குச் சந்திர கிரஹணம் என்று சொல்லப்படுகிறது. சந்திரகிரஹணம் பௌர்ணமியன்றுதான் உண்டாகும்.

சந்திரனின்மீது விழும் பூமியின் நிழல் வட்டமாயிருப்பதால் பூமி உருண்டை என்பது நிச்சயம்.

## பாடம் 4.

## நிலமும் நீரும்.




பூமியானது நிலமும் நீரும் சேர்ந்த ஒரு பெரிய கோளம் பூமியின்மேற்பரப்பில் கால்பாகம் நிலமும், முக்கால் பாகம் நீருமாக இருக்கிறது. நிலப்பாகத்தை 5 பெரிய பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு நிலப் பிரிவிற்கும் கண்டம் என்றுபெயர். அவ்வாறே நீர்ப்பாகத்தையும் 5 பெரிய பாகங்களாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு நீர்ப்பிரிவுக்கும் சமுத்திரம் என்று பெயர்.

இப்பூமியின் உருண்டை வடிவத்தைக் காகிதத்தில் வரைந்தால் அதின் ஒரு பாதியின் உருவந்தான் படத்தில் காட்டியபடி வட்டமாய்த்தெரியும்.

பூமியின் உருண்டை வடிவத்தின் இரண்டு பாதிகளையும் காட்டவேண்டுமானால் தனித் தனியாய்த்தான் மறுபக்கத்திலுள்ள படத்தில் காட்டியபடி காட்டமுடியும்.

படத்திலுள்ள இடது பக்கப் பாதியைப் பூமியினுடைய மேல்பாதி உருண்டை என்றும், வலது பக்கப் பாதியைப் பூமியின் கீழ்பாதி உருண்டை என்றும் சொல்வார்கள். மேல்பாதி உருண்டையைக் குடகோளார்த்தம்

என்பதுமுண்டு. [குடக்கு=மேற்கு, கோளம்=உருண்டை, அர்த்தம்=பாதி, அதாவது மேற்குப்பாதி உருண்டை.] கீழ் பாதி உருண்டையைக் குணகோளார்த்தம் என்பதுமுண்டு. [குணக்கு=கிழக்கு, கோளம்=உருண்டை, அர்த்தம்=பாதி, அதாவது கிழக்குப் பாதி உருண்டை.]




## கண்டங்கள்.

குடகோளார்த்தத்தில் அமெரிக்காக் கண்டமும், குணகோளார்த்தத்தில் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஓஷியேனியாக் கண்டங்களும் இருக்கின்றன. கண்டங்கள் எல்லாவற்றிலும் பெரியது ஆசியா. சிறியதும் நாகரிகமுள்ளதும் ஜன நெருக்க மானதும் ஐரோப்பா. அமெரிக்காக் கண்டம் புதிதாகச் சில நூற்றுண்டுகளுக்கு முன் கண்டறியப்பட்டபடியால் அதைப் புதிய உலகம் என்பார்கள். ஆப்பிரிக்காக் கண்டத்தை இருண்ட கண்டம் என்பார்கள். ஓஷியேனியாக் கண்டம் பல தீவுகள் அடங்கியது.

## சமுத்திரம்.

ஆசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் மத்தியிலிருப்பது பசிப்பிக் மஹா சமுத்திரம்.

ஐரோப்பா, ஆப்பிரிக்கா அமெரிக்கா இவைகளுக்கு இடையிலிருப்பது அட்லாண்டிக் மஹா சமுத்திரம். ஆப்பிரிக்காவுக்குக் கிழக்கேயும், ஆசியாவுக்குத் தெற்கேயும், ஓஷியேனியா கண்டத்துக்கு மேற்கேயும் இருப்பது இந்துமஹா சமுத்திரம்.

வட துருவத்தின் சமீபத்தில் ஆர்டிக் மஹா சமுத்திரம் அல்லது வட சமுத்திரம் இருக்கிறது. தென் துருவத்தின் சமீபத்தில் அன்டார்டிக் மஹா சமுத்திரம் அல்லது தென் சமுத்திரம் இருக்கிறது.

சூரியவெளிச்சம் வட சமுத்திரத்திலும் தென்சமுத்திரத்திலும் படாமையால் அங்குள்ள ஜலம் உறைந்து பனிக்கட்டியாக இருக்கிறது. சமுத்திரங்கள் எல்லாவற்றிலும் அதிக விஸ்தீரணமுள்ளதும் ஆழமுள்ளதுமாயிருப்பது மஹா சமுத்திரம்.

## பாடம் 5.

## பூமியின் மேற்பரப்பு.

பூமியின் சில பாகங்கள் மேடாக இருக்கின்றன. மேடான பாகத்துக்குக் குன்று என்றும் அதிகமாக உயர்ந்த இடங்களுக்கு மலை என்றும் பெயர்.

குன்று:—குன்று என்பது அதிக உயரமில்லாத ஒரு சிறு தனி மலை. இது சுமார் 1500 அடி உயரமிருக்கும். சில குன்றுகள் பாறைகளாயும், சில மண்ணும் கற்களும்

கலந்து சுற்றிலுமுள்ள நிலத்தைவிட உயரமாயுமிருக்கும். ஒரு குன்று அல்லது மலையின் உயரத்தை அதன் அடியிலிருந்து உச்சிவரை கணக்கிடுகிறதில்லை. சமுத்திரத்தின் நீர்மட்டம் எப்போதும் சமமாயிருப்பதால் குன்று அல்லது மலையின் உயரத்தைச் சமுத்திர நீர்மட்டத்தைக் கொண்டு கணக்கிடுகிறார்கள்.

மலை:—மலை குன்றைவிட அதிக உயரமானது. மலையின் உச்சிக்குச் சிகரமென்றும், அடிப்பாகத்துக்கு அடிவாரம் என்றும், மலையின் பக்கங்களுக்கு மலைச்சரிவுகள் என்றும் பெயர். இரண்டு மலைகளுக்கு நடுவில் உள்ள பிரதேசத்துக்குப் பள்ளத்தாக்கு என்றும், மலைகளில் போக்குவரவுக்குப் பாதை ஏற்பட்டிருந்தால் கணவாய் என்றும் பெயர். சில இடங்களில் வெகுதூரம்வரை மலைகளும் குன்றுகளும் அடி ஒன்றாய்ச் சேர்ந்து சிகரங்கள் பிரிந்து நிற்கும். இதற்கு மலைத்தொடர் என்று பெயர். மலைகள் அநேகம் கூட்டம் கூட்டமாய்ச் சேர்ந்திருக்கும். இவைகளுக்கு மலைக்கூட்டம் என்று பெயர்.

சமவெளி:—அதிக மேடு பள்ளமில்லாமல் மட்டமாய் இருக்கிற பூமிக்குச் சமவெளி என்று பெயர். இது சமுத்திர மட்டத்துக்கு மேல் சற்றேறக்குறைய 500 அடிவரையில் உயரமுள்ளது.

பீடபூமி:—இது சமுத்திர மட்டத்துக்கு மேல் அதிகமாய் உயர்ந்து, மட்டமாக இருக்கும் பூமி. இது சில இடங்களில் உயர்ந்தும் சில இடங்களில் தாழ்ந்தும் இருக்கும். சுற்றி மலைகள் அடர்ந்து நெருங்கி உள்ள இடங்களில் இத்தகைய பீடபூமி விசேஷமாய் உண்டு.



கோடைக்கானல்.

மலைகளின் உபயோகங்கள்.

1. மழைக்கு ஆதாரமாய் இருக்கின்றன.

2. கட்டடங்கள் கட்டுவதற்கு வேண்டிய கற்களும், பாத்திரங்கள் செய்யக்கூடிய மாக்கற்களும், சந்தனம் அரைக்கக்கூடிய கற்களும் கிடைக்கின்றன.

3. மலைச்சரிவுகளில் உள்ள நாடுகளில் உத்திரங்களுக்கு ஆகக்கூடிய பெரிய மரங்கள் வளர்கின்றன.

4. மருந்துக்கு வேண்டிய அநேக விதமான பச்சிலை மூலிகைகள் உண்டாகின்றன.

5. மலைகளில் சில இடங்களில் பொன், வெள்ளி, நிலக்கரி, இரும்பு, சீமைச் சுண்ணும்பு, முதலியனவும் கிடைக்கின்றன.

6. தேன், மெழுகு முதலியவை ஏராளமாய் அகப்படுகின்றன. பலவகைக் கனிகள் காய்கறிகள் விளைகின்றன. விறகுகள் ஏராளமாய்க் கிடைக்கின்றன.

7. காற்று ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்துக்குப் போகாதபடி தடை செய்யும்.

8. ஒருதேசத்துக்கும் மற்றொரு தேசத்துக்கும் எல்லையாக அமைந்திருக்கின்றன.

9. சத்துருக்கள் அயல் தேசத்திலிருந்து உள்ளே பிரவேசிக்காதபடி தடுக்கின்றன.

10. மலைச் சரிவுகளில் உள்ள காடுகளை வெட்டிச் சீர்திருத்திக் காப்பி, தேயிலை, ரப்பர் முதலிய பலவகைப் பொருள்களைப் பயிரிடுகிறார்கள்.

11. கோடை காலத்தில் மலை உச்சி குளிர்ச்சியாய் இருக்குமாதலால் பிரபுக்கள் குளிர்ச்சிக்காக வசிக்கக் கூடிய வாசஸ்தானமாகின்றன.

12. மலைகளில் பெய்யும் மழைஜலத்தால் நதிகள் உற்பத்தியாகின்றன. சில நதிகள் மலைகளிலுள்ள நீரூற்றுக்களிலுமிருந்து உற்பத்தியாகின்றன.

13. மலைச் சரிவுகளிலுள்ள அடர்ந்த காடுகள் கரடி, புலி, சிங்கம் முதலிய மாமிச பக்ஷணிகளும், யானை, மான், முதலிய சாகபக்ஷணிகளும், பலவகைப் பக்ஷி ஜாதிகளும், பலவகை ஊரும் பிராணிகளும் ஆகிய உயிர்ப் பிராணிகள் வசிக்கத்தக்க இடமாயிருக்கின்றன.

## சமுத்திரம்.

பூமியின் மேற்பரப்பில் உள்ள பள்ளத்தில் உப்புநீர் வியாபித்துச் சமுத்திரம் உண்டாயிற்று என்கிறார்கள்.

சமுத்திரம்:—கண்ணுக்கு எட்டாத அளவு பரவியும் உப்பு நீருள்ளதுமான ஜலபாகம்.

கடல்:—இது சமுத்திரத்தைப் பார்க்கிலும் சற்றுச் சிறிதாகப் பரவி இருக்கிற உப்புநீர்ப்பாகம்.

## சமுத்திரத்தின் உபயோகம்.

1. சமுத்திர நீரிலிருந்து நமது உணவுக்கு வேண்டிய உப்பு கிடைக்கின்றது.

2. சமுத்திரத்திலுள்ள நீர் சூரிய வெப்பத்தினுல் நீராவியாகி மழையாகப் பெய்கிறது.

3. ஒரு இடத்திலிருந்து மற்ருெரு இடத்துக்குக் கப்பல் மார்க்கமாய்ப்போக்கு வரத்து செய்யவும்சாமான்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யவும் அநுகூலமாயிருக்கிறது.

4. முத்து, பவளம் முதலிய விலையுயர்ந்த பொருள்கள் கிடைக்கக்கூடிய இடமாயிருக்கிறது.

5. நிலத்திலுள்ள பிராணிகளைப்போல் நீரில் வாழக்கூடிய பலவித பிராணிகளுக்கு வாசஸ்தானமா யிருக்கிறது.

6. சுற்றிலும் சமுத்திரமுள்ள தேசத்தின் மீது சத்துருக்கள் திடீரெனப் போக முடியாது.

7. சமுத்திரத்திலிருந்து வீசும் காற்று க்ஷயரோகி முதலிய வியாதியஸ்தருக்குக் குணத்தையும் பொதுவாக உடம்புக்குச் சுகத்தையும் தரக்கூடியதா யிருக்கிறது.

சமுத்திரம் தவிர ஜல பாகங்களைக் கூட்டும் ஜல சந்திகளும், நிலத்தால் சூழப்பட்டுள்ள சிறிய ஜலபாகங்களாகிய வளைகுடாக்களும், நிலத்தில் பிரவேசிக்கும் கடல் பாகங்களாகிய விரிகுடாக்களும், இருக்கின்றன.

பாடம் 6

## பூமியும் சீதோஷ்ண மண்டலங்களும்.

பூமி ஒரு பந்துபோல் உருண்டை வடிவமென்றும், அதனுடைய வட நுனியும் தென் நுனியும் சற்றுத் தட்

டையா யிருக்கின்றன வென்றும், கூறியுள்ளோம். வட நுனிக்குவட துருவமென்றும், தென் நுனிக்குத் தென் துருவம் என்றும் சொல்கிறோம். பூமியைச் சுற்றி நடுமத்தியில் கிழக்கு மேற்காக ஒரு கோடு அல்லதுரேகை இருப்பதாகப் பாவிப்போம். அந்தக் கோட்டுக்கு நிரக்ஷரேகை அல்லது ஆங்கிலத்தில் 'ஈக்வேடர்' என்று சொல்லப்படும். இந்தக் கோட்டுக்கு அருகில் இருபக்கங்களிலும் பிரதிதினமும் சூரிய கிரணங்கள் பகலில் செங்குத்தாகவே விழுகின்றன. ஆகையால், அப்பிரதேசங்கள் உஷ்ணமண்டலம் என்று சொல்லப்படுகின்றன. அதற்கப்பால் வடக்கிலும் தெற்கிலும் சூரிய கிரணங்கள் சற்றுச் சாய்வாக விழுகிறபடியால் உஷ்ணம் அப்பிரதேசங்களில்குறையும். வடதுருவத்துக்கும்தக்ஷிணதுருவத்துக்கும்அருகிலுள்ளபிரதேசங்களில் சூரிய கிரணங்கள் முற்றிலும் சாய்வாக விழுகின்றமையால் அவைகளுக்குச் சீதமண்டல மென்று பெயர். ஆகவே, நிரக்ஷரேகைக்கு வடக்கிலும் தெற்கிலும் உஷ்ணமண்டலப் பிரதேசங்களும், அதற்கப்பால் உஷ்ணம்சற்றுக் குறைந்தவிடங்களில்சமசீதோஷ்ணமண்டலங்களும், அதற்கப்பால் சீதளமண்டலங்களும் இருக்கின்றன. உஷ்ணமண்டலத்தில் தென்னை, பலா, பனை, முதலிய விருக்ஷங்களும், மிளகு, இலவங்கம் முதலிய வாசனைத் திரவியங்களும், காப்பிக்கொட்டை, தேயிலை நெல் முதலியவைகளும் விசேஷமாய்ப் பயிராகின்றன. இவைகள் தவிரக் கொடிய மிருகங்களாகிய யானை, சிங்கம், புலி, கரடி முதலியவைகளும், பலவகைக் குரங்குகளும், பலவிதப் பக்ஷிகளும் காணப்படுகின்றன. சம சீதோஷ்ண மண்டலத்தில் நெல், தேயிலை, பழவர்க்கங்களும், பருத்தி, புகையிலை, சோளம், கம்பு முதலியவைகளும், ஆடு, மாடு, குதிரை, மான் முதலிய

மிருகங்களும் காணப்படுகின்றன. சீதமண்டலத்தில், கஸ கஸா என்ற ஓர்வித சிறிய விருக்ஷங்களும், பலவகையான பூண்டுகளும், திமிங்கிலம், வாத்து, வெண்கரடி முதலிய பல ஜீவஜந்துக்களும் காணப்படுகின்றன.

## பாடம் 7.

## பூமியும், காற்றும், மழையும்.

காற்றை நாம் பார்க்க முடியாதாயினும் நம்முடைய தேகத்தின் மீதும் நம்மைச் சுற்றியுள்ள வஸ்துக்கள் மீதும் காற்று வீசும்போது அறிகிறோம். ஒரு ரப்பர் பையில் காற்றைவிட்டு இறுக்கக் கட்டிக் கொஞ்சம் உஷ்ணப்படுத்தினால் காற்று உஷ்ணப்பட்டுப் பை உப்பும். அதிகமாக உஷ்ணப்படுத்தினால் பை கிழிந்துவிடும். அதேமாதிரி வேறொரு பையில் காற்றைவிட்டுக் குளிரச்செய்தால் காற்றுக் குறுகிப் பை சுருங்கி விடும். ஆகவே, காற்று உஷ்ணத்தினால் லேசாகிப் பரவுகிறது. குளிர்ச்சிபட்டால் காற்றுக் குறுகிவிடுகிறது. உஷ்ணம் அடைந்த காற்று மேலே கிளம்பிப் பரவுகிறது. அந்தக் காலியான விடத்துக்குக் குளிர்ந்த காற்று வந்து சேருகிறது. பூமியானது உஷ்ணமும் குளிர்ச்சியும் விரைவில் அடைந்து விடுகிறது. நீரோ உஷ்ணமடைவதற்கும் குளிர்ச்சியடைவதற்கும் பூமியைவிட நேரம் பிடிக்கும். பகலில் பூமியானது கடலைவிடச் சீக்கிரத்தில் உஷ்ணமடைகிறபடியால் அதன் மீதுள்ள காற்றானது வெப்பம் அடைந்து உயரக் கிளம்பிப் பரவ ஆரம்பிக்கிறது. அந்தக் காலியானவிடத்துக்குச் சமுத்திரத்திலிருந்து குளிர்ந்த காற்று வந்து சேருகிறது. ஆகையால், சமுத்திரத்துக் கருகில் வசிப்பவர்களுக்குப் பகலில் குளிர்ந்த காற்று வீசுகிறது. அதேமாதிரி, இராக்காலத்தில் பூமியானது கடலை

விடச் சீக்கிரத்தில் குளிர்ச்சியடைகிறது. கடலில் உள்ள உஷ்ணக் காற்று மேலே கிளம்பிப் பரவ, பூமியின் மீதுள்ள குளிர்ந்த காற்று கடல்மீது வீசுகிறது. கடலிலிருந்து பூமியின்மீது வீசும் காற்றுக்குக் கடல்காற்று என்றும், நிலத்தினின்று கடல் மார்க்கமாய் வீசுங்காற்றுக்கு நிலக்காற்று என்றும் சொல்லப்படுகிறது. கடற் கரைக்குச் சமீபமான பிரதேசங்களில் பகலில் கடற்காற்றும், இரவில் நிலக்காற்




றும் அடிக்கின்றன. ஆகையால், கோடை காலத்திலும் மழை காலத்திலும் அப் பிரதேசங்கள் அதிக உஷ்ணமும் குளிருமில்லாமல் சம சிதோஷ்ண ஸ்திதியை அடைந்திருக்கும், பிரதிதினமும் கடற்காற்றும் நிலக்காற்றும் வீசுகின்றன. இதைப் போலக் குறித்த காலங்களில் அல்லது பருவங்களில் வீசும் காற்றுக்குப் பருவக்காற்று என்று பெயர். அதற்கு ஆங்கிலத்தில் 'மான்ஸூன்' என்று சொல்லப்படு

கிறது. நம்முடைய ராஜதானியிலும் இந்தியாவின் மற்ற பாகங்களிலும் இந்தப் பருவக்காற்றில் மழை பெய்கிறது. இந்தியாவில் கோடை காலத்தில் தென்மேற்கிலிருந்து பருவக்காற்று வீசுகிறது. இதற்குத் தென்மேற்குப் பருவக் காற்று என்று பெயர். அதுபோலவே மழை காலத்தில் வடக்கிலிருந்து பருவக்காற்று வீசுகிறது. இதற்கு வடகிழக்குப் பருவக்காற்று என்று பெயர்.

மழை எப்படி உண்டாகிறது என்று சற்றுக்கவனிப் போம். ஒரு பாண்டத்தில் தண்ணீரை விட்டுக் காய்ச்சினால் அது ஆவியாகமாறி மேலே செல்லுகிறது. இந்த ஆவி குளிர்ந்து மேகமாக மாறுகிறது. இதேமாதிரி சமுத்திரம் ஆறு முதலிய இடங்களில் உள்ள நீரானது சூரிய வெப்பத் தினால் ஆவியாகமாறி மேலே கிளம்பிக் குளிர்ச்சியடைந்து

காற்றும், மேகமும், மழையும்.

மேகமாகிறது. சமுத்திரத்திலிருந்துவீசுங்காற்றானதுமேகங் களைக் கொணர்ந்து மழையை உண்டாக்குகிறது. நம் முடைய இராஜதானியில் கோடைகாலத்தில்தென்மேற்குப் பருவக் காற்றினாலும், மழை காலத்தில் வடகிழக்குப் பருவக்காற்றினாலும் மழை பெய்கிறது என்று முன்னரே

கூறியிருக்கிறோம். மேகத்தோடு வரும் காற்றை மலைகள் தடுக்கின்றன. மலைகளின்சமீபத்தில் உள்ள பிரதேசங்களில் மற்ற விடங்களை விட மழை விசேஷமாய்ப் பெய்கிறது.

ஓரிடத்தில் பெய்யும் மழையின் அளவைக் கண்டு பிடிக்க ஒரு கருவி இருக்கிறது. அதன்படத்தைப் பாருங்கள். இந்தக் கருவியில் உள்ள ஒரு பெரிய பாத்திரத்தில் புனல் ஒன்று இருக்கிறது. மழை ஜலமானது பெரிய பாத்திரத்தி லிருந்து புனல் மூலமாய் ஒரு சிறிய பாத்திரத்தில் செல்லும். இந்நீரை அளக்க ஒரு கருவியுண்டு. அதில் 50 கோடுகள் காணலாம். ஒவ்வொரு கோடும் ஒரு சேண்ட் என்று நாம் கொள்ளவேண்டும். 100 செண்ட்கள் சேர்ந்து ஒரு அங்குலமாகும். புட்டியில் உள்ள மழைநீரை இக்கருவியினால் அளந்து பார்த்தால் பெய்த மழையின் அளவு இவ்வளவு என்று தெரியும்.




## பாடம் 8.

## நதிகளும் ஏரிகளும்.

நதிகள் எப்படி உண்டாகின்றன? மலைகளின் உயரமான இடங்களில் உறைந்திருக்கும் பனிக்கட்டிகள் சூரிய வெப்பத்தால் கரைந்து மலைச் சரிவுகளின் வழியாக ஓடி வருகிறது. மலைகளின் மீது பெய்யும் மழையும் இதே மாதிரி சிறு அருவிகளாகச் சாய்வான பக்கங்கள் வழியாக

ஓடி ஒன்ருகச் சேர்ந்து பெரியநதிகளாக ஆகிவிடுகின்றன. ஒரு பெரிய நதியில் சிறு நதிகள் கூடுகின்றன. இந்நதிகளுக்கு உபநதிகள் என்று பெயர். ஒரு பெரிய நதியினின்றும் பிரிந்துபோகும் சிறு நதிகளுக்குக் கிளைநதிகள் என்று பெயர். ஒரு நதி ஓடும் முகமாக நாம் நின்ருல், நமது வலதுகைப்பக்கத்திலிருக்கும் கரைக்கு வலதுகரையென்றும், இடதுகைப்பக்கத்திலிருக்கும் கரைக்குஇடதுகரை யென்றம் சொல்லப்படும். மலையினின்றும்நதி விழும்



போது அதற்கு அருவி யென்றும், சமுத்திரத்தில் ஒரு நதி விழுமிடத்திற்கு முகத்துவாரமென்றும் சொல்லுகிருேம். சமமான பூமியில் ஓடும்போது நதியின் வேகம் குறைகிறது. நதியில் பிரவாகம் போகும்போது அது மண்ணையும் சிறு கல் துண்டுகளையும் அடித்துக்கொண்டு போய் முகத்துவாரத்தில் தள்ளுகிறது. ஆறு முகத்துவாரத்தை நெருங்கும்

போது அது கிளைகளாகப் பிரிகிறபடியால் திட்டுகள் உண்டாகின்றன. இத்திட்டுகள் பிரவாகத்தில் அடித்துக் கொண்டு போகப்பட்ட மண்ணும், கல்லும் சேர்வதினால் ஆகின்றன. இத்திட்டுகள் அதிக செழிப்புள்ளவை. இவைகளுக்குக் கழிமுக நிலங்கள் அல்லது "டேல்டாக்கள்" என்று பெயர்.

## நதியின் உபயோகங்கள்.

நதிகள் பானத்துக்கு நல்ல நீர் கொடுக்கின்றன. நதிகளின் குறுக்கே அணைகள் கட்டி அவைகளின் நீரை வாய்க்கால்களில் திருப்பி ஏரிகளுக்குக் கொண்டுபோய் நிரப்புகிறார்கள். இந்த நீர் பாசானத்துக்கு உபயோகப்படுகிறது. ஆழமான நதிகளில் படகுகள் ஓடுகின்றன. அவைகளில் மனிதர்கள் ஓரிடத்திலிருந்து வேறு ஓரிடத்திற்குப் பிரயாணம் செய்கிறார்கள். சாமான்களும் கொண்டு போகப்படுகின்றன. சில நதிகள் புண்ய நதிகளாகக் கொண்டாடப்படுகின்றன. இந்தியாவின் வட பாகத்தில் கங்கையும் தென் பாகத்தில் காவேரியும் விசேஷமான புண்ய நதிகளாக மதிக்கப்பட்டு வருகின்றன.

ஏரிகள்:—நான்கு பக்கங்களிலும் நிலத்தால் சூழப்பட்டிருக்கும் நீர்நிலைகள். அவைகளில் சில ஏரிகளின் நீர் உப்பாய் இருக்கும். சில ஏரிகளின் நீர் நன்றாய் இருக்கும். நம்முடைய இராஜதானியில் காணப்படும் ஏரிகள் சிறியவைகளாயும் நிலப் பாய்ச்சலுக்கு ஆதாரமானவைகளாயும் இருக்கின்றன. காவேரிபாக்கம் ஏரி. மாமண்டூர் ஏரி முதலியன மிகப் பெரிய ஏரிகளாக இருக்கின்றன.




பாடம் 9.

## பூமியும் மனித ஜாதியார்களும்.

பூமியில் பற்பல ஜாதியார்கள் வசிக்கிறார்கள். அவர்கள் உருவத்திலும், நிறத்திலும் நாகரிகத்திலும் வித்தியாசப்படுகிறார்கள். அவர்களில் நீக்ரோ ஜாதியார் என்பவர் ஆப்ரிக்காக் கண்டத்தில் வசிக்கிறார்கள். அவர்கள் சப்பை மூக்கும், தடித்த உதடும், சுருட்டைமயிரும் உள்ளவர்கள். இவர்கள் அதிக கறுப்பு நிறமுள்ளவர்கள்.

மஞ்சள் நிறமுள்ள ஜாதியார் ஆசியாக் கண்டத்தில் வடக்குப் பாகங்களிலும், கிழக்குப் பாகங்களிலும் வசிக்

கிறார்கள். இவர்கள், தட்டை முகமும், சிறிய தலையும், கரடுமுரடான மயிரும் உடையவர்களா யிருக்கிறார்கள்.

வெள்ளை நிறமுள்ள ஜாதியார் ஐரோப்பாக்கண்டத்தி லும் ஆசியாக்கண்டத்தின் தெற்கு, மேற்குப் பாகங்களி லும் அமெரிக்காவிலும் காணப்படுகிறார்கள். இவர்களில் ஒரு வகையினருக்கு ஆரியர்கள் என்று பெயர்.

சிவப்பு நிறமுள்ள ஒரு ஜாதியார் தென் அமெரிக்கா வில் காணப்படுகிறார்கள். அவர்கள் தாமிர வர்ணமும், நீண்ட கன்னமும், நீண்ட மயிரும் உடையவர்கள்.

ஆசியாக் கண்டத்தின் தென்கிழக்கிலுள்ள தீவுகளில் பழுப்பு நிறமுடைய ஜாதியார் வசிக்கிறார்கள். இவர்கள் முகம் தட்டையாயும், தேகம் அழுத்தமாயும், நிறம் ஓர் வகையான பழுப்பாயும் இருக்கின்றன.

முன்னே கூறிய ஜாதியார்களுள் வெள்ளை நிறமுள்ள வர்கள் புத்திகூர்மை; தேகவலி, வியாபாரம், சாஸ்திரப் பயிற்சி நாகரிகம் முதலியவைகளில் மேன்மைப்பட்டவர்கள்.

பாடம் 10.

## இந்தியா எல்லைகளும் இயற்கைப் பாகங்களும்.

### இந்தியாவின் இயற்கை அமைப்பு.

இந்தியா நாம் வசிக்கும் தேசம். இது ஆசியாக் கண் டத்திலுள்ள தேசங்களில் ஒன்று. அதன் மூன்று பக்கத் திலும் ஜலம் சூழ்ந்திருக்கிறபடியால் அதற்குத் தீபகற்பம் என்று பெயர். வடக்கே இமயமலைகளும், கிழக்கே பர்மா தேசத்து மலைகளும் வங்காளக் குடாக்கடலும், தெற்கே இந்துமகா சமுத்திரமும், மேற்கே அராபிக்கடலும், பெலு

ஸிஸ்தான் ஆப்கானிஸ்தான் தேசங்களும் இருக்கின்றன. இந்தியா ஐரோப்பாக்கண்டத்தின் மூன்றில் ஒரு பாகத்தை விடப் பெரியது. இதன் விஸ்தீரணம் 15 லக்ஷம் சதுர மைல். ஜனத்தொகை 31,50.00,000. அதாவது உலகத்தின் மொத்த ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பாகம்.


ஆப்கானிஸ்தானம்
திபேத்து
ராஜபுதன
பாலைவனம்
விந்தியமலை
தக்ஷிண
பீடபூமி
வடபெண்ணையாறு
பாலாறு
தென்பெண்ணையாறு
காவேரிநதி
இந்துதேசம்
இயற்கை அமைப்பு
இங்கிலீஷ் மைல்

இந்தியா தேசத்தை மூன்று பிரதேசங்களாகப் பிரிக்க லாம். அவை (1) இமயமலைப் பிரதேசம் (2) கங்கையும் ஸிந்தும் பாயும் சமவெளி, அதாவது இந்துஸ்தானம். (3) தக்காணம். இம் மூன்று பிரதேசங்களும் இந்தியாவில் இயற்கையா யமைந்துள்ள பாகங்களாகும்.

இமயமலை உலகத்தில் உள்ள எல்லா மலைகளினும் அதிக உயரமுள்ளது. அது மூன்று தொடர்கள் சேர்ந் தது. வடிவத்தில் அரிவாளைப்போன்றது. இம்மலை கிழக்கு மேற்காய் ஓடுகிறது. இதன் நீளம் 1,750 மைல். அகலம் சுமார் 200 மைல். இம்மலையின் கிழக்குப் பாகத்தில் அதிக மழை பெய்கிறது. இங்கு பெய்கிற மழையைப்போல் அவ்வளவு மழை மற்றெவ்விடங்களிலும் பெய்வதில்லை. இம்மலைத் தொடரின் மேற்கே மழை குறைவு. இம்மலைத் தொடரின் மத்தியில் பனிக்கட்டிகள் நிறைந்துள்ள பள்ளத் தாக்குகள் இருக்கின்றன. மலைகளின் சிகரங்களில் எப் போதும் பனி நிறைந்திருக்கிறது. சிகரங்களுள், எவரஸ்ட் என்ற சிகரமும், கஞ்சின்ஜிங்கா என்ற சிகரமும் மிகவும் உன்னதமானவை. எவரஸ்ட் 29,002 அடி உயரமும், கஞ் சின்ஜிங்கா 28,177 அடி உயரமும் உள்ளவை. இந்தியாவின் வடபாகத்தில் உள்ள பெரிய நதிகளாகிய கங்கை, பிரம புத்திரா, சிந்து முதலியவை இந்த இமயமலையில் உற்பத்தி யாகின்றன. இம்மலையானது அயல் நாட்டார் இந்தியாவின் மீது படையெடுத்து வாராதபடி காக்கிறது.

கங்கையும் ஸிந்துவும் பாயும் சமவெளி. இந்தப் பிர தேசத்தில் கங்கை ஸிந்து ஆகிய நதிகள் பாய்கின்றன. இது தாழ்ந்த பூமி, கங்கை, ஸிந்து ஆகிய நதிகளும் அவை

களின் உபநதிகளும் அடித்துக்கொண்டு வரும் மணலும் மண்ணும் சேர்ந்து இச்சமவெளி உண்டாயிற்று. இந்தப் பிரதேசம் செழிப்பிலும் ஜனத் தொகையிலும் சிறந்தது. இந்தியாவில் உள்ள நதிகளில் மிகவும் முக்கியமானதும், இந்துக்களுக்குப் புண்ணிய நதியுமாகிய கங்கை இமய மலையில் உற்பத்தியாகி மலையின்மீது ஓடிப்பிறகு சமவெளியில் வெகு தூரம் செல்கிறது. யமுனாநதி கங்கையின் உபநதிகளில் ஒன்று. வங்காளக் குடாக்கடலில் விழுமுன் கங்கை அனேக கிளைகளாகப் பிரிகிறது. இக்கிளைகளில் ஹூக்லி முக்கியமானது. இக்கிளைகளின் இடையில் டெல்டாக்கள் அல்லது கழிமுக நிலங்கள் இருக்கின்றன. கங்கா நதி பாயும் இடங்களில் நெல்லும் சணலும் விசேஷமாகப் பயிரிடப்படுகின்றன. கங்கை நதியில் சிறு கப்பல்கள், படகுகள் முதலியவை போக்குவரவு அதிகம். கங்காயமுனா நதிக் கரைகளில் பிரசித்திபெற்ற பட்டணங்கள் இருக்கின்றன. கங்கை நதியின் மேல் புண்ணிய ஸ்தலமாகிய காசி நகர் இருக்கிறது. கங்கை வங்காளக் குடாக்கடலில் விழுவதற்குமுன் அத்துடன் பிரமபுத்திரா நதி கலக்கிறது. இது அதிக நீளமும் வேகமும் உள்ளது.

ஸிந்து நதி இமயமலையில் உற்பத்தியாகி நேர் தெற்கு முகமாக ஓடி அராபிக்கடலில் விழுகிறது. இந்த நதிக்குப் பல உபநதிகள் இருக்கின்றன. அவற்றுள், ஜீலம், சீனப், ரவி, பியாஸ், சட்லஜ் முக்கியமானவை. ஸிந்து நதியும் அதன் உபநதிகளும் பாயும் பிரதேசங்களுக்குப் பஞ்சாப் என்று பெயர். அராபிக்கடலில் பிரவேசிப்பதற்கு முன் இந்நதி அநேக கிளைகளாகப் பிரிகிறது. இக் கிளைகளின் நடுவில் டெல்டாக்கள் உண்டாயிருக்கின்றன. ஸிந்து நதி பாய்ச்சலில் கோதுமை விசேஷமாய்ப் பயிராகிறது.

கங்கை நதிக்கும், சிந்து நதிக்கும் இடையிலுள்ள பூமிக்குத் தான் கங்கையும் சிந்துவும் பாயும் சமவெளி என்று பெயர்.

இந்தியாவின் மூன்றுவது பாகம் தக்காணம் அல்லது தக்ஷண தேசம். இப்பாகம் விந்தியமலைக்குத் தெற்கே யுள்ளது. இம்மலைக்குத் தெற்கில் சாத்புரா என்னும் ஒரு மலைத்தொடர் இருக்கிறது. விந்திய பர்வதத்துக்கும், சாத்புரா மலைத்தொடருக்கும் மத்தியில் ஒரு பள்ளத்தாக்கு இருக்கிறது. அதில் நர்மதை நதி பாய்கிறது. சாத்புரா மலைக்குத் தெற்கில் பாயும் தப்திநதியும், நர்மதா நதியும் மேற்கே ஓடி அராபிக் கடலில் விழுகின்றன. இவ்விரண்டு நதிகளும் கிழக்கில் தோன்றி மேற்கே செல்வதால் அவை களுக்கு நதங்கள் அல்லது ஆண் நதிகள் என்று பெயர். விந்திய பர்வதத்துக்கும் கிழக்கு மலைத்தொடருக்கும் மத்தியில் முக்கோணவடிவமாயுள்ள பீடபூமிக்குத் தக்ஷண பீடபூமி என்று பெயர். அதற்கு வடக்கில் உள்ள மத்திய இந்தியா பீடபூமியைவிட இது பெரியது. தக்ஷண பீட பூமி மேற்கில் உயர்ந்தும், கிழக்கில் தாழ்ந்தும் இருக்கிற படியால் அங்குள்ள நதிகளெல்லாம் மேற்குத் தொடரில் உற்பத்தியாகிக் கிழக்கு மலைத்தொடர் மூலமாகச்சென்று வங்காளக் குடாக்கடலில் விழுகின்றன. இப் பிரதேசத்தில் உள்ள முக்கிய நதிகள் மஹாநதி, கோதாவரி, கிருஷ்ணு, காவேரி முதலியவை. தக்ஷண பீடபூமியில் பருத்தி அதிக மாய் விளைகிறது. கிழக்கு மலைத் தொடருக்கும் சமுத்தி ரத்துக்கும் மத்தியிலும், மேற்கு மலைத் தொடருக்கும்சமுத் திரத்துக்கும் மத்தியிலும் சமவெளிகள் இருக்கின்றன.

# இரண்டாம் பாகம்.

## பாடம் 11.

## சென்னை ராஜதானி
## எல்லைகளும் பிரிவுகளும்.

இந்த ராஜதானி இந்தியாவின் தென் பாகத்தில் இருக்கிறது. இதனுடைய முக்கிய பட்டணம் சென்னை. இந்த ராஜதானி மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப் பட்டிருக்கிறது. ஆகையால் இது ஒரு தீபகற்பம். இதற்கு வடமேற்கில் பம்பாய் ராஜதானியும் வடக்கில் மத்திய மாகாணங்களும் நிஜாம் இராஜ்யமும் வடகிழக்கில் ஒரிஸாவும், கிழக்கில் வங்காள விரிகுடாவும், தெற்கில் இந்து மஹா சமுத்திரமும், மேற்கில் அராபிக் கடலும் இருக்கின்றன.

சென்னை ராஜதானியின் பரப்பு சுமார் 142 ஆயிரம் சதுர மைல். வடகிழக்குக் கோடி முதல், தென்மேற்குக் கோடிவரையில் உள்ள நீளம் 950 மைல். கிழக்கு மேற்காக அதிக அகலமாயுள்ள பாகத்தின் நீளம் 450 மைல். இந்த ராஜதானியின் கடற்கரையின் நீளம் சுமார் 1,800 மைல்.

### பிரிவுகள்

இந்த ராஜதானியை மலைப் பிரதேசம், தாழ்ந்த சமவெளி, மேட்டுப்பூமி அல்லது பீடபூமி என மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். மலை நாடானது கிழக்கு மேற்குச் சமுத்திரக் கரைகள் ஓரமாய்த் தெற்கு வடக்காகப் பரவி யிருக்கிறது. இந்த மலைகளுக்கும் சமுத்திரத்துக்கும் மத்தியில் இருப்பது சமவெளி. மேற்கிலும் கிழக்கிலும் உள்ள

மலைத்தொடர்களின் நடுவில் இருப்பது பீடபூமி. இயற்கை யாய்த் தோன்றியுள்ள இந்த மூன்று பிரிவுகளையும் நான்கு பாகங்களாகவும் பிரிக்கலாம்.

சென்னை ராஜதானியிலுள்ள ஜில்லாக்கள்.

1. ஏஜன்ஸி பிரதேசம். இந்தப் பாகம் கஞ்சம் விசாகபட்டணம், கோதாவரி, ஆகிய ஜில்லாக்களின் மேற்கில் உள்ள ஒரு மலைப்பிரதேசம்.

2. கிழக்குக்கரைப் பிரதேசம். இந்தப்பாகம் வடக்கு, தெற்கு, மத்தியபாகம் ஆகிய மூன்று பாகங்கள் சேர்ந்து கஞ்சம் ஜில்லா முதல் திருநெல்வேலி ஜில்லா வரையில் 19 ஜில்லாக்களும் புதுக்கோட்டை ராஜ்ஜியமும் அடங்கியது.

3. பீடபூமிப் பிரதேசம். இந்தப்பாகத்தில் கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தபுரம் ஆகிய நான்கு ஜில்லாக்களும் பங்கனபல்லி, சாந்தூர் என்ற சுதேச ராஜ்ஜியங்களும் அடங்கியுள்ளன.

4. மேற்குக்கரைப்பிரதேசம். நீலகிரி, மலையாளம், அஞ்சங்கோ, தென் கன்னடம் ஆகிய ஜில்லாக்களோடு திருவாங்கூர், கொச்சி, குடகு முதலிய ராஜ்யங்களும் இதில் அடங்கியுள்ளன.

## பாடம் 12.

## சென்னை ராஜதானி தீவுகளும் மலைகளும்.

இந்த ராஜதானியைச் சேர்ந்த தீவுகளில் இலங்கை இராமேசுவரம் லக்ஷதீவுகள், அந்தமான் தீவுகள் முக்கியமானவை. இவை தவிர முதல் தீவு, நம்பிக்கைத் தீவு, ஸ்ரீஹரிக்கோட்டைத் தீவு முதலிய சிறிய தீவுகளும் இருக்கின்றன. இராமேசுவரம் தீவு சென்னை ராஜதானிக்கும் இலங்கைத் தீவுக்கும் மத்தியில் இருக்கிறது. லக்ஷதீவுகள் அராபிக்கடலில் இருக்கின்றன. இத்தீவுகளில் முகமதியர்கள் விசேஷமாய் வசிக்கிறார்கள். இவைகளில் எங்கே

பார்த்தாலும் தென்னைமரம் ஏராளமாய் வளருகிறது. அந்தமான் தீவுகள் வங்காளக் குடாக்கடலில் இருக்கின்றன.

மலைகள். சென்னை ராஜ்யத்தின் கிழக்கே, தெற்கு வடக்காய் வியாபித்திருக்கும் மலைத்தொடர்களுக்குக் கிழக்குத் தொடர்ச்சி மலை என்றும், மேற்கே சமுத்திரத்துக்குச் சமீபமாய்த் தெற்கு வடக்காய் வியாபித்திருக்கும் மலைகளுக்கு மேற்குத்தொடர்ச்சிமலை என்றும் சொல்லப்படும். மேற்குத் தொடர்ச்சி மலை பம்பாய் ராஜதானியில் ஆரம்பித்துச் சென்னை ராஜதானியின் மேற்குப் பக்கத்தில் சமுத்திரத்துக்குச் சமீபமாய்த் தென் கன்னடம், குடகு, மலையாளம், கோயம்புத்தூர். கொச்சி, திருவாங்கூர் ஆகிய நாடுகளின் மூலமாய்க் கன்னியாகுமரி வரையில் செல்லுகின்றது. மேற்குத் தொடர்ச்சி மலைக்கும், சமுத்திரத்துக்கும் இடையில் நெருக்கமான சமவெளி இருக்கிறது. ஆகையால் இந்தச் சமவெளியில் பாயும் நதிகள் சிறியவைகள். மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலையை விட உயரமானது. மேற்குத் தொடர்ச்சி மலையும் கிழக்குத் தொடர்ச்சி மலையும் நீலகிரி என்னுமிடத்தில் சந்திக்கின்றன. நீலகிரி வரையில் மேற்குத் தொடர்ச்சி மலையானது பின்னமில்லாமல் ஒரே தொடர்ச்சியாக ஓடுகின்றது. பிறகு கோயம்புத்தூர் ஜில்லாவில் பாலக்காட்டுக் கணவாய் என்ற ஒரு இடைவெளியில் உடைபடுகிறது. இதன் அகலம் சுமார் 25 மைல். இது சமுத்திர மட்டத்துக்கு 1,000 அடி உயரம் உள்ளது. இந்தக் கணவாய் மூலமாக மலையாளம், தென்கன்னடம் முதலிய பிரதேசங்களுக்கும் இந்த ராஜதானியின் கிழக்குப் பாகங்களுக்கும் போக்கு வரவு செய்வதற்குச் சாதகமாயிருக்கிறது.

மலையாளம், தென் கன்னடம் முதலிய நாடுகளுக்கு இந்தக் கணவாய் மூலமாய் ஒரு இருப்புப் பாதை ஓடுகிறது. இந்தக் கணவாய் மூலமாகத்தான் பருவக்காற்று மழையைக்கொண்டு வருகிறது. பாலக்காட்டுக் கணவாய்க்குத் தெற்கில் இம்மலைத் தொடருக்கு ஆனைமலை என்று பெயர். இம்மலையின் உயர்ந்த சிகரத்திற்கு ஆனை முடி என்று பெயர். ஆனைமலைக்குத் தெற்கில் மேற்குத் தொடர்ச்சிமலை திருவாங்கூர் ராஜ்யத்தில் சிறு குன்றுகளாகக் காணப்படுகின்றது. இவைகளுக்குத் திருவாங்கூர் மலைகளென்று பெயர் வழங்கி வருகின்றது. இம்மலைகளில் உள்ள கணவாய்கள் மூலமாகத் திருநெல்வேலி ஜில்லாவுக்கும், திருவாங்கூர் ராஜ்யத்துக்கும் போக்கு வரவு உண்டு. இந்த மேற்குத் தொடர்ச்சி மலையானது சிறு குன்றுகளாகக் காணப்படினும் இவை கன்யாகுமரி வரையில் வியாபித்திருக்கிறது. இவைகளின் தென் பாகத்துக்கு அகஸ்தியமலை என்று பெயர்.

மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து பிரிந்து வடகிழக்காய் மதுரை ஜில்லாவில் ஒரு மலை வியாபித்திருக்கிறது. இம்மலைக்குப் பழநிமலை என்று பெயர். இம்மலை மேற்குப் பழநி என்றும், கிழக்குப் பழநி என்றும் இரு பாகங்களாகப் பிரிக்கப்படுகிறது. மேற்குப் பழநி, கிழக்குப் பழநியைவிட உயரமுள்ளது. கோடைக்கானல் மலை மேற்குப் பழநியின் ஒரு பாகம். அது சமுத்திர மட்டத்துக்கு 7,200 அடி உயரமுள்ளது.

பாடம் 13.

## மலைகளும் சமவெளிகளும்.

கிழக்குத் தொடர்ச்சி மலை:—இது கஞ்சம் ஜில்லா முதல் நீலகிரி பீடபூமி வரையில் வியாபித்துப் பிறகு நீலகிரி என்னுமிடத்தில் மேற்குத்தொடர்ச்சி மலையோடு கூடுகிறது. இந்த மலை ஒரு தொடர்ச்சியாய் இல்லாமல் ஆங்காங்கு பின்னப்பட்டு இருக்கிறது. இது மேற்குத் தொடர்ச்சி மலையைவிட உயரத்தில் குறைந்தது. கிழக்குத் தொடர்ச்சி மலைக்கு, வெவ்வேறு ஜில்லாக்களில் வெவ்வேறு பெயர்கள் வழங்குகின்றன. கிழக்குத் தொடர்ச்சி மலையின் பாகங்களாவன:-சித்தூர் ஜில்லாவில் உள்ள நகரிமலைகளும், சேலம் ஜில்லாவில் உள்ள சேர்வராய மலைகளும், வட ஆற்காடு ஜில்லாவில் உள்ள ஜவ்வாது மலைகளும் தென்னாற்காடு ஜில்லாவில் உள்ள காளேரி மலைகளும், திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ள பச்சை மலைகளுமே. திருமலை அல்லது திருப்பதி மலையும் கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பாகமே.

### சமவெளிகள்.

கிழக்குத் தொடர்ச்சி மலைக்கும் சமுத்திரத்துக்கும் நடுவில் கர்நாடக சமவெளியும், மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் சமுத்திரத்துக்கும் நடுவில் கோங்கண சமவெளியும் உண்டு. கர்நாடக சமவெளி வடக்கே குறுகியும் தெற்கே அகன்றும் இருக்கிறது. இது கொங்கண சமவெளியைவிட விசாலமானது. கொங்கண சமவெளி என்பது இதைவிட அகலம் குறுகலானது.




சென்னராஜதானியின் மலைகளும் நதிகளும் ஏரிகளும்

15-ம் படம்.

## பாடம் 14.

## நதிகளும் ஏரிகளும்—1

நமது ராஜதானியின் மேற்குப்பாகம் உயர்ந்தும் கிழக்குப் பாகம் தாழ்ந்தும் இருக்கின்றன. ஆகையால், மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் பெரிய நதிகளெல்லாம் கிழக்கே ஓடி வங்காளக் குடாக்கடலில் விழுகின்றன. அந்நதியில் ஓடும் வழியில் உள்ள வண்டல் மண்ணை உருட்டிக் கொண்டு வந்து அரங்கங்களை அல்லது டெல்டாக்களை உண்டு பண்ணுகின்றன. இந்தப் பூமிகளெல்லாம் அதிக சத்துள்ளவை. ஆகையால் விவசாயத்துக்கு மிகவும் சிறந்தவைகள். இந்த ராஜதானியில் உள்ள நதிகளில் முக்கியமானவை கோதாவரி, கிருஷ்ணு, வடபெண்ணை, பாலாறு, தென்பெண்ணை, காவேரி, வைகை, தாம்பிரவருணி.

கோதாவரி, நதி மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது. பம்பாய் ராஜதானி, ஹைதராபாக்கம் ராஜ்யம் ஆகிய இவைகள் மூலமாய் ஓடி நம்முடைய ராஜதானியில் பிரவேசிக்கிறது. இங்கே அதனுடைய அகலம் குறைவாயிருப்பதால் ஆழமுள்ளது. இந்நதியின் அரங்கம் ராஜமகேந்திரத்துக் கருகில் ஆரம்பிக்கிறது. ராஜமகேந்திரத்தில் இந்நதியின் மீது ஒரு பெரிய வாராவதி கட்டப்பட்டிருக்கிறது. கோதாவரி நதி தவளேசுவரத்துக்கருகில் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து ஐந்து மைலுக்கப்பால் சமுத்திரத்தில் விழுகிறது. இந்நதி ஒரு புண்ய நதியாக மதிக்கப்படுகிறது. தவளேசுவரத்தில் இந்நதியில் ஒரு பெரிய அணை உண்டு. அதன் நீளம் 900 மைல். இதன் முக்கிய உபநதிகள் இந்திராவதி, பிரன்ஹிதா. முக்கிய கிளைநதிகள் கௌதம கோதாவரி, வசிஷ்ட கோதாவரி.




கிருஷ்ணா நதி மேற்குத் தொடர்ச்சி மலையில் மகா பலேசுவரம் என்னுமிடத்தில் உற்பத்தியாகிறது. பம்பாய் ராஜதானி ஹைதராபாக்கம் ராஜ்யம் ஆகிய இவைகள் மூலமாய் ஓடி நம்முடைய ராஜதானியின் சமவெளியில் பாய்ந்து வங்காளக் குடாக்கடலில் விழுகிறது. பேஜவாடா என்னும் இடத்தில் கிருஷ்ணா நதியின் மீது ஒரு பெரிய அணைக்கட்டுக் கட்டப்பட்டிருக்கிறது.



கிருஷ்ணாநதி அணைக்கட்டு.




இந்த அணைக்கட்டிலிருந்து இந்நதியின் அரங்கம் ஆரம்பிக்கிறது. கோதாவரி அரங்கத்துக்கும், கிருஷ்ணை அரங்கத்துக்கும் போக்குவரவு சௌகரியத்துக்காக ஒரு கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது. இதன் உபநதிகள் துங்கபத்ராவும் பீமாவும். கிருஷ்ணைநதியின் மொத்த நீளம் சற்றேறக்குறைய 800 மைல்,

வடபெண்ணையாறு:—இதற்கு உத்தரபினுகினி என்ற பெயரும் உண்டு. இது மைசூரில் பீடபூமியில் உற்பத்தியாகி வடக்கே திரும்பி மலைகளால் தடைபட்டுக் கிழக்கே திரும்பி அனந்தபுரம், கடப்பை ஜில்லாக்கள் வழியாக ஓடிக் கிழக்கு மலைத்தொடரைக் கடந்து நெல்லூர் ஜில்லாவில் பிரவேசிக்கிறது. நெல்லூர் ஜில்லாவில் அரங்கம் உண்டாகிறது. நெல்லூர் ஜில்லாவில் பெரிய அணைக்கட்டுகள் கட்டி நீரைத் தேக்கிவைத்து நிலப் பாய்ச்சலுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். இந்நதி நெல்லூருக்குச் சமீபத்தில் வங்காளக் குடாக்கடலில் வந்து விழுகிறது. இதன் நீளம் சற்றேறக்குறைய 350 மைல்.

பாலாறு:—இது மைசூர் ராஜ்யத்தில் நந்தி துர்க்கத்தில் உற்பத்தியாகித் தென்கிழக்கே ஓடிப் பிறகு வடகிழக்காய்ச் சேலம் ஜில்லாவில் ஜவ்வாதுமலை வரையில் போகிறது. அங்கிருந்து கிழக்கே திரும்பி வடஆர்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்களில் ஓடிச் சதுரங்கப் பட்டணத்துக் கருகில் கடலில் விழுகிறது. இதன் நீளம் 230மைல். மழைகாலம் தவிர மற்ற காலங்களில் இந்நதி வறண்டிருக்கும். இதன் மீது ஆற்காட்டுக்கு அருகில் ஒரு அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறது.

தென்பெண்ணை:—இதற்குத் தக்ஷிணபினுகினி என்று பெயரும் உண்டு. இதுவும் மைசூரில் உற்பத்தியாகின்றது. சேலம், தென்னாற்காடு ஜில்லாக்களின் வழியாக ஓடித் தேவனாம்பட்டணத்தில் வடக்கே கடலில் வந்து விழுகிறது. இதன் நீளம் சற்றேறக்குறைய 250 மைல்.




காவேரிப் பிரதேசம்

பாடம் 15.

## நதிகளும் ஏரிகளும்.—II

காவேரி—இதற்குத் தக்ஷிணகங்கை என்னும் பெயரும் உண்டு. இந்நதி குடகு தேசத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் தலைக்காவேரி என்ற இடத்தில் உற்பத்தியாகி மைசூர் ராஜ்யத்தில் பாய்ந்து மைசூர்ப்பட்டணத்துக்கருகே இரண்டு பாகங்களாகப் பிரிகிறது. இந்த இரண்டு பிரிவுகளுக்கும் நடுவில்தான் ஸ்ரீரங்கபட்டணம்



சிவசமுத்திர நீர்வீழ்ச்சி.

இருக்கிறது. பிறகு இந்நதி மைசூரைக் கடந்து கிழக்கு மலைத்தொடரைப் பிளந்துகொண்டு 300 அடி உயரத்திலிருந்து கீழே விழுகிறது. இந்த நீர் வீழ்ச்சிக்குச் சிவசமுத்திர நீர் வீழ்ச்சி என்று பெயர். இந்த நீர் வீழ்ச்சியின் ஆதரவால் மின்சாரசக்தி உண்டாக்கி, மைசூர், பங்களூர், முதலிய பெரிய பட்டணங்களுக்கு வெளிச்




சத்திற்கும் மற்ற கைத்தொழில்களுக்கும் உபயோகப் படுத்துகிறார்கள். பிறகு சேலம் கோயம்புத்தூர் ஜில்லாக்களில் இடையே எல்லையாக இது ஓடிக் கிழக்கு முகமாகத் திரும்பித் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் பாய்ந்து வங்காளக் குடாக்கடலில் விழுகிறது.

காவேரிக்கு உபநதிகள் பவானியும், நோய்யல், அமரா வதியுமாகும். காவேரி திருச்சிராப்பள்ளிக் கருகில் இரண்டு பிரிவுகளாகப் பிரிகிறது. வட பிரிவுக்குக் கோள்ளிடம் என்றும், தென் பிரிவுக்குக் காவேரி என்றும் பெயர். இப் பிரிவுகளுக்கு மத்தியில் ஸ்ரீரங்கம் என்ற தீவு இருக்கிறது. காவேரியின் ஜலம் கொள்ளிடத்தில் வீணாகப் போகாதபடி மேலணை என்ற ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. காவேரி புண்ய நதிகளில் ஒன்று. இந்நதியின் நீளம் 475 மைல். தஞ்சாவூர் ஜில்லாவில் காவேரியிலிருந்து வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, முடிகொண்டான். அரசலாறு, திருமலைராசன், வீரசோழன் என்ற பல கிளை நதிகள் பிரிந்து செல்லுகின்றன. இவைகள் அவ்வவ் வூரி லுள்ள நிலப்பாகங்களை வளம்பெறச் செழிப்பித்துக் கொண்டு செல்லுகின்றன. காவேரிப் பட்டணம் என் னும் இடத்தில் இந்நதி கடலில் விழுகிறது.

பவானி நதியில் வந்துசேரும் மோய்யாறு என்ற ஆற் றுக்கு அது உற்பத்தியாகும் இடத்தில் ஒரு நீர் வீழ்ச்சி உண்டு. அதிலிருந்தும் மின்சாரசக்தி உண்டுபண்ண ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. மொய்யாற்றுக் குத் தலைப்பில் பைகாரா என்ற பெயர் ஏற்பட்டிருந்தபடி யால் இந்த மின்சார வேலைகளுக்கும் நீர்வீழ்ச்சிக்கும் பைகாரா என்ற பெயரே ஏற்பட்டிருக்கிறது.




வைகை தாம்பிரபரணி பிரதேசங்கள்.

வைகை:—இது திருவாங்கூரில் ஏலமலையின் கிழக்குச் சரிவில் உற்பத்தியாகித் தென்கிழக்காய் ஓடி, மதுரை

ராமநாதபுரம் ஜில்லாக்களில் பாய்ந்து ராமேசுவரத்துக் கருகில் கடலில் விழுகிறது. இந்த நதிக்கரையிலே மதுரை என்ற புராதனபட்டணம் இருக்கிறது. கொடைக்கானல் முதலிய மலைகளின் மழைத் தண்ணீரெல்லாம் காலாக ஓடிவந்து இந்த நதியில் சேருகிறது.




பெரியாறு:—இது மேற்கு மலைத்தொடரில் உற்பத்தியாகி மேற்கே திருவாங்கூர் இராஜ்ஜியத்தில் ஓடி மேற்குச் சமுத்திரத்தில் விழுந்து வருகிறது. அதற்குக் குறுக்கே ஒரு அணை கட்டப்பட்டு அதன்நீர் வைகையின் உபநதியான சுருளிநதியின் வழியாக வைகைக்குக் கொண்டு வரப்படுகிறது. வைகை நதியில் நிலக்கோட்டைக்கு

அருகில் பேரணை என்ற அணைக்கட்டு கட்டிப் பெரியாற்றுக் கால்வாய் என்று சொல்லப்பட்ட வாக்ககால் மூலம்



பெரியாற்றில் குறுக்கு அணை.

மதுரைஜில்லாவில் ஏராளமாக நிலங்களை நஞ்சை சாகுபடிக் கேற்றவாறு கொண்டுவந்திருக்கிறார்கள்.

தாம்பிரபரணி:—இந்நதியின் நீரில் தாம்பிரத்தின் குணம் அமைந்திருக்கிறபடியால் இதற்கு அந்தப்பெயர் கிடைத்தது. திருவாங்கூரில் உள்ள அகஸ்திய மலையில் உற்பத்தியாகி, கிழக்கு முகமாய்த்திரும்பி திருநெல்வேலி ஜில்லாவில் பாய்ந்து மன்னார் வளைகுடாவில் போய் விழு கிறது. இந்நதி அம்பாசமுத்திரம் தாலுகாவில் மலையி

லிருந்து நீர் வீழ்ச்சியாக விழுகிறது. இதற்குப் பாவநாசம் நீர்வீழ்ச்சி என்று பெயர். இதன் முக்கியமான உபநதி



பாவநாசம்.

சிற்றாறு. இந்நதியும் திருவாங்கூர் மலையிலிருந்து தென் காசித் தாலூகாவில் ஒரு நீர் வீழ்ச்சியாக மலையிலிருந்து

சமவெளியில் விழுகிறது. இதற்குக் குற்றாலம் நீர்வீழ்ச்சி என்று பெயர். தாம்பிரபரணியின் மீது பன்னிரண்டு

குற்றால அருவி

அணைகள் கட்டப்பட்டு அதன் நீரைப் பல பாகமாகப் பிரித்து விளைநிலங்களுக்கு உபயோகப் படுத்தப் படுகிறது.

ஏரிகள்:—ஏரியென்றால் நான்கு புறத்திலும் நிலம் சூழ்ந்த பெரிய நீர் நிலை. சென்னை ராஜதானியில் அப் பேர்ப்பட்ட ஏரிகள் சிலவே. கோதாவரி கிருஷ்ணா அரங் கங்களுக்கு மத்தியில் உள்ள ஏரிக்குக் கோல்லேறு என்று பெயர். இதன் நீளம் 25 மைல். அகலம் 10 மைல். இதன் ஜலம் உப்பல்ல. சமுத்திர ஜலம் அதன் நீரோடு கலக்காதபடி அணைகள் போட்டுத் தடுத்திருக்கிறார்கள்.

சில்கா ஏரி:—இந்த ராஜதானியின் வடக்கில் கிழக் குக் கடற்கரையில் இருக்கிறது. அதன் நீர் உப்பு. நீளம் 44 மைல். கிழ்ப்புறத்தில் இதற்குக் கரையே இல்லை. ஏரி என்ற பெயர் இதற்குப் பொருந்துமா ?

பழவேற்காடு ஏரி:—சென்னைக்கு வடக்கே கிழக்குக் கரையில் இருக்கிறது. இதன் நீளம் 33 மைல். கடல் நீர் புரண்டு கூடுவதினால் இதுவும் ஏரியல்ல. இதன் நீர் உப்பு.

மேற்கூறிய ஏரிகள் தவிர நீர்ப்பாசானத்துக்காக உப யோகப்பட்டுவரும் ஏரிகள் பல உள. நம்முடைய ராஜ தானியில் மழைகாலங்களில்தான் மழை பெய்கிறபடியால் பாசானத்துக்கு வேண்டிய நீரைச் சேகரித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. நதிகளில் போகும் பிரவாகங்களை அணைகளினால் தடுத்துக் கால்வாய்கள் மூலமாய் ஏரிக்குக் கொண்டுபோய் நிரப்புகிறார்கள். நம்முடைய ராஜதானி யில் பாசானத்துக்கு உபயோகமுள்ள ஏரிகளில் முக்கிய மானவை—வடபெண்ணைக்கும், கிருஷ்ணா நதிக்கும் நடு வில் உள்ள கம்பம் ஏரியும், செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள செம்பரம்பாக்கத் தேரியும் தென்னேரியும், வட ஆற்காட்டில் காவேரிபாக்கத்தேரியும், மாமண்டூர் ஏரியுமே.

## பாடம் 16.

## சீதோஷ்ண ஸ்திதியும் மழையும்.

சீதோஷ்ணமென்றால் குளிர்ச்சியும் உஷ்ணமும் என்று கொள்ளவேண்டும். அதாவது சென்னை ராஜதானியின் சீதோஷ்ணஸ்திதி என்ன? அது உஷ்ணமுள்ள பிரதேசமா? அல்லது குளிர்ச்சியுள்ள பிரதேசமா? என்று ஆராய வேண்டும். சூரியனே உஷ்ணத்துக்குக் காரணமாதலால் நாம் வசிக்கும் தேசம் பூமத்தியரேகைக்கு எவ்வளவு சமீபமாயிருக்கிறதோ அவ்வளவு உஷ்ணமாயிருக்கும். நடுப்பகலில் நம்முடைய தலைக்குநேராகச் சூரியன் இருந்தால், அந்த இடம் சூரியனுக்குச் சமீபம் என்றும், அதிக உஷ்ணமுள்ளதென்றும் அறிந்து கொள்ளலாம். ஆயினும், ஓரிடத்தில் உள்ள உஷ்ணம் சில காரணங்களால் குறைவதுண்டு. அவையாவன:—அவ்விடத்தில் பூமி மேடாயிருத்தல், அவ்விடம் சமுத்திரத்துக்கும் சமீபமாயிருத்தல் அல்லது அவ்விடத்தில் சமுத்திரக் காற்று வீசுதல் என்பன. நீரைவிடப் பூமியானது சீக்கிரத்தில் உஷ்ணத்தையும் குளிர்ச்சியையும் அடைகிறது. மலையடிவாரங்களிலும் சமவெளிகளிலும் உள்ள இடங்களை விட மலைகள் மீதுள்ள இடங்கள் குளிர்ச்சியா யிருக்கின்றன. ஆகையால் கோடைகாலத்தில் நீலகிரி, கொடைக்கானல், சேர்வராயமலை முதலியவிடங்களுக்கு உத்தியோகஸ்தர்களும், தனவான்களும் போய்த் தங்குகிறார்கள். பகலில் பூமி உஷ்ணத்தை அடைவதுபோலக் கடல் அவ்வளவு உஷ்ணத்தை அடையாது. ஆகையால் கடலிலிருந்து அடிக்கும் காற்றானது குளிர்ச்சியாகவே இருக்கும். குளிர் காலத்தில் கடலிலிருந்து வீசுங்காற்றானது உஷ்ண




கோடை மழை.

மாயிருக்கும். ஆகையால் சமுத்திரக்கரை யோரத்தில் உள்ள இடங்கள் தோறும் கோடை காலத்திலும், குளிர் காலத்திலும் உள்நாட்டில் உள்ள விடங்களை விடச் சீதோஷ்ண நிலைமை மிகுந்தே இருக்கும்.

இந்த ராஜதானியில் மழையானது தென்மேற்குப் பருவக் காற்றாலும், வடகிழக்குப் பருவக் காற்றாலும் கொண்டுவரப்படுகிறது. தென்மேற்குப் பருவக் காற்று ஜூன் மாதம் முதல் அக்டோபர் மாதாரம்பம் வரையில் அடிக்கிறது. வடகிழக்குப் பருவக் காற்று அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையில் அடிக்கிறது. தென் மேற்குப் பருவக் காற்றானது இந்துமகா சமுத்திரத்தி லிருந்து மேற்குக் கரைப் பிரதேசம் வழியாய்ப் போகை யில் மேற்குத் தொடர்ச்சி மலையால் தடுக்கப்படுகிறது. அப்போது காற்று நீராவியில் கலந்துகொண்டு ஈரத்தை மேகமாக மாற்றி மேற்குக்கரைப் பிரதேசத்தில் மழை அதிகமாய்ப் பெய்யும்படி செய்கிறது. இந்தக் காற்றை மேற்குத் தொடர்ச்சிமலை தடுப்பதினால் சென்னை இராஜ தானியின் மற்ற பாகங்களுக்கு இந்தப் பருவக் காற்றால் பயன் இல்லை. ஆயினும் சில சமயங்களில் தென்மேற்குப் பருவக் காற்றானது பாலக்காட்டுக் கணவாய் வழியாய்க் கிழக்குக் கரைப் பிரதேசங்களுக்குச் செல்லுகிறபடியால் இப்பிரதேசங்களில் சில பாகங்களில் சொற்ப மழை பெய்கிறது. மேற்குக்கரைப் பிரதேசங்களில் வருஷத்தில் பெய்யும் சராசரி மழை ஏறக்குறைய 100 அங்குலத்துக்கு அதிக மென்றே சொல்லலாம்.

வடகிழக்குப் பருவக் காற்று வீசுங்காலத்தில் அதா வது அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையில்




குளிர் கால மழை.

இந்த ராஜதானியின் கிழக்குத் தெற்குப் பிரதேசங்களில் மழை அதிகம். இப்பிரதேசங்களில் வருஷத்தில் பெய்யும் சராசரி மழை 30 அங்குலத்துக்குக் குறையாமலும் 50 அங்குலத்துக்கு மேற்படாமலும் இருக்கிறது.

தக்ஷிண பீடபூமியாகிய கடப்பை, கர்நூல், பல்லாரி அனந்தபுரம் ஜில்லாக்களில், மேற்கூறிய இரண்டு பருவக் காற்றுகளினின்றும் பெய்யும் மழை அதிக சொல்பம். இப்பிரதேசத்தில் பெய்யும் வருஷ சராசரி மழை பத்து, அங்குலத்துக்குக் குறைவதில்லை; அதிகமானல் 30 அங்குலத்துக்கு மேற்படுவதில்லை.

## பாடம் 17.

## நீர்ப்பாய்ச்சல் ஆதாரங்கள்.

சென்னை இராஜதானியில் வருஷந்தோறும் சமமாக மழை பெய்து வருவதில்லை. மழைகாலங்களில்தான் அந்தந்த இடங்களில் மழை பெய்கிறது. மேலும், பலவிடங்களில், பெய்யும் மழை வருஷமுழுவதும் உதவும்படி சேர்த்துவைக்கவேண்டியிருக்கிறது. ஆகையால், ஏரிகளும், குளங்களும் நீர்ப்பாய்ச்சல் ஆதாரங்களாக உபயோகப்படுகின்றன. நதிகளினின்று கால்வாய்கள் மூலமாய் ஜலம் கொண்டுபோகப்பட்டு ஏரிகளும் குளங்களும் நிரப்பப்படுகின்றன. சில குளங்கள் அல்லது தாங்கல்கள் வேறு ஆதாரமில்லாமல் மழைகாலத்தாலேயே நிரம்புகின்றன. ஆகவே, மழை குறைவான பிரதேசங்களில், மழைஜலத்தைத் தேக்கி வைப்பதற்காக ராஜாங்கத்தார் ஏரிகள் வெட்டியிருக்கிறார்கள். செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள செம்பரம் பாக்கத்தேரியும். கர்நூல் ஜில்லாவில் உள்ள கம்பம் ஏரியும் இவைகளில் முக்கியமானவைகள்.

மேற்கூறிய ஏரிகளன்றி, மழை குறைவான இடங்களில் கிணறுகள் அல்லது துரவுகள் வெட்டப்பட்டு அவைகளினின்று கபிலே ஏற்றம் முதலிய கருவிகளைக் கொண்டு நிலங்களுக்கு நீர் பாய்ச்சப்படுகிறது. கிணற்றுநீர் நன்செய், தோட்டக்கால் சாகுபடி முதலியவைகளுக்கும் உபயோகப்படுகிறது. கோயம்புத்தூர், சேலம், வடஆற்காடு ஆகிய ஜில்லாக்களில் விசேஷமாய்க் கிணறுகள் சாகுபடிக்கு ஆகாரமாக உபயோகப்படுகின்றன.

இந்த ராஜதானியில் கோதாவரி நதிமுதல் தாம்பிரபரணி வரையில் உள்ள நதிகள் குறுக்கே அணைகள் போட்டுக் கால்வாய்கள் மூலமாய் நீரைப் பாய்ச்சலுக்கு உபயோகப் படுத்துகிறார்கள். கோதாவரி நதியின் மீது தவளேசுவரம் என்னுமிடத்தில் ஒரு பெரிய அணை கட்டி ஜலத்தைக் கால்வாய்களின் மூலமாய்க் கோதாவரி ஜில்லாவில் உள்ள பலவிடங்களுக்குக் கொண்டுபோய் விவசாயத்துக்கு உபயோகிக்கிறார்கள். கிருஷ்ணா நதியின் மீதும் பெஜவாடா என்னுமிடத்தில் ஒரு பெரிய அணைகட்டி ஜலத்தைக் கால்வாய்களின் மூலமாய் ஜில்லாவில் உள்ள பலவிடங்களுக்குக்கொண்டுபோய் விவசாயத்துக்கு உபயோகிக்கிறார்கள்.

பாலாற்றின் மீது ஆற்காட்டுக் கருகில் ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. அதன் நீரைக் கால்வாய்களின் மூலமாய் ஏரிகளுக்குக் கொண்டுபோய் நிரப்புகிறார்கள். இந்த அணைக்கட்டின் கீழ் உள்ள ஏரிகளில் முக்கியமானவை காவேரிப்பாக்கம் ஏரியும், தூசிமாமண்டூர் ஏரியுமாம்.

காவேரி நதியிலும் கொள்ளிட நதியிலும் அணைக்கட்டு கள் கட்டப்பட்டு ஜலத்தைக் கால்வாய்கள் மூலமாய்த் திருச் சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் பலவிடங்களுக்குக் கொண்டுபோய் விவசாயத்துக்கு உபயோகிக்கிறார்கள்.

தாம்பிரபரணி நதியின் மீதும் பாபநாசத்துக்குச் சமீ பத்திலும், அம்பாசமுத்திரத்துக்குச் சமீபத்திலும் அணை கள் கட்டப்பட்டு, ஜலத்தை திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள பலவிடங்களுக்குக் கொண்டுபோய் நிலங்களுக்குப் பாய்ச்சி நஞ்சைச் சாகுபடி செய்கிறார்கள்.

பெரியாற்றைப் பற்றியும் அதன் அணைக்கட்டைப் பற்றியும் முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது.

ருஷிகுல்யா ப்ராஜெக்ட்:—ருஷிகுல்யா என்பது கஞ்சம் ஜில்லாவில் உள்ள ஒரு நதி. அதன் ஜலத்தையும் அதற்கு அருகிலுள்ள இரண்டு ஏரிகளின் ஜலத்தையும் இரண்டு கால்வாய்களின் மூலமாய்க் கொண்டுபோய் பர்ஹம்பூர் தாலூகாவில் சேர்த்துச் சுமார் லக்ஷம் ஏக்ரா விஸ்தீரண முள்ள நிலங்களுக்குப் பாய்ச்சுகிறார்கள்.

## பாடம் 18.

## சமவெளிகளும் விளைபொருள்களும்.

சாதாரணமாய் நம்முடைய ராஜதானியின் பூமி சத் துக் குறைவு என்றே சொல்லவேண்டும். ஆனாலும் கோதா வரி, கிருஷ்ணா, தஞ்சாவூர் ஜில்லாக்களில் உள்ள நிலங்கள் செழிப்புள்ளவை. சத்துக் குறைவாயிருக்கிற நிலங்களுக்கு எருவிட்டுச் சாகுபடி செய்யவேண்டும். கோதாவரி, கிருஷ்ணா, தஞ்சாவூர் ஜில்லாக்களிலும், மேற்குக்கரையில் இருக்கும் பள்ளத்தாக்குகளிலும் உள்ள நிலங்கள் கரிசல்

நிலங்கள். இப்போப்பட்ட மண்ணுள்ள நிலங்கள் சத்துள்ளவைகளா யிருக்குமாதலினுல் இவைகளில் நன்செய்ப் பயிர்கள் செழிப்பாக விளையும்.

சென்னை ராஜதானியில் மொத்தத்தில் மழை குறைவு. மேற்குக் கரையில் மழையதிகம். இவ்விடத்தில் பயிர்கள் நன்ருக விளையும். தக்கான் பீடபூமியில் சரியான மழையில்லாததினுல் அடிக்கடி பஞ்சம் உண்டாகிறது.

விளைபொருள்கள் மூன்று வகைப்படும்.

அவைகளாவன:—

(1) நன்செய் நிலங்களில் விளையும் வஸ்துக்களும்,

(2) புன்செய் நிலங்களில் சாகுபடி செய்யப்படும் பொருள்களும்,

(3) தோட்டக்கால்களில் பயிரிடப்படும் உணவுப் பொருள்களுமே. நன்செய்ப் பயிருக்கும் முக்கியமாய் வேண்டியவை வெயிலும் நீரும்.

நெல்:—நெல் பயிரானது நன்செய் நிலங்களில் நீராதாரம் விசேஷமாயுள்ள இடங்களில் விளைகிறது. சென்னைராஜதானியும் முக்கியமாய்த் தஞ்சாவூர், விசாகபட்டணம், கிருஷ்ணு, கஞ்சம், மலையாளம் ஆகிய ஜில்லாக்களில் நெல் விசேஷமாய் விளைகிறது. பாலாறு, பெண்ணை, தாம்பிரவருணி பாயும் பிரதேசங்களிலும் ஆங்காங்கே நன்செய் நிலங்களில் நெல் பயிராக்கப்படுகிறது.

கரும்பு:—இதுவும் நன்செய்ப் பயிரே. நெல் எவ்விடங்களில் நன்ருய்ப் பயிராகுமோ, அவ்விடங்களில் கரும்பும் பயிராகும். விசாகபட்டணம், வட ஆற்காடு, தென்னுற்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய ஜில்லாக்களில் கரும்பு பயிரிடப்படுகிறது.



கருப்பஞ் சாற்றிலிருந்து வெல்லமும், சர்க்கரையும், செய்யப்படுகின்றன. சோளம். கம்பு. கேழ்வரகு ஆகிய தானியங்கள் புன்செய் நிலத்தில் பயிராக்கப்படுகின்றன. இவைகளுக்கு மழை அதிகம் வேண்டியதில்லை. சோளம் பல்லாரி, கர்நூல், கோயம்புத்தூர், குண்டூர், கிருஷ்ண, கடப்பை, அனந்தபுரம், நெல்லூர் ஆகிய ஜில்லாக்களிலும்; கம்பு கோயம்புத்தூர், சேலம், கடப்பை, குண்டூர், தென்னாற்காடு, வட ஆற்காடு. பல்லாரி, விசாகபட்டணம், நெல்லூர் ஆகிய ஜில்லாக்களிலும்; கேழ்வரகு சேலம், விசாகபட்டணம், கஞ்சம், கர்நூல், கடப்பை, கோயம்புத்தூர், வட ஆற்காடு, தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி மதுரை ஜில்லாக்களிலும் பயிராகிறது. இன்னும் புன்செய் நிலங்களில் பயிரிடக்கூடிய தானியங்கள் துவரை, உளுந்து, பயறு, கடலை, கொள்ளு, மொச்சை, முதலியன. இவைகளுக்கு மழை அதிகமாக வேண்டியதில்லை. மேட்டுப்பாங்கான புன்செய் நிலங்களில் இவை பயிராகின்றன.

கோதுமை பயிரிடுவதற்கு வெயிலும் அதிகமாக வேண்டியதில்லை, மழையும் அதிகமாக வேண்டியதில்லை. இதைப் பல்லாரி, விசாகபட்டணம், நீலகிரி, குண்டூர், கோயம்புத்தூர் ஆகிய ஜில்லாக்களில் பயிரிடுகிறார்கள்.

புகையிலை, பருத்தி, அவுரி, முதலிய வஸ்துக்களும் நம்முடைய ராஜதானியில் விளைகின்றது. புகையிலைப் பயிருக்கு அதிக ஜலம் வேண்டியது. ஆகையால் ஆற்றுக்கால் பாய்ச்சல் இடங்களிலும் கிணறுகள் உள்ள இடங்களிலும் புகையிலை பயிராக்கப்படுகிறது. குண்டூர், கோயம்புத்தூர், விசாகபட்டணம், கோதாவரி, கிருஷ்ணா, சேலம், மதுரை, ராமநாதபுரம், ஜில்லாக்களில் புகையிலை விசேஷமாய்ப் பயிராக்குகிறார்கள். பருத்தி பயிரிடுவதற்கு வெயிலும் கொஞ்சம் மழையும் வேண்டும். அது கரிசல் மண்ணில் பயிராகும். இந்த ராஜதானியில், திருநெல்வேலி சேலம், கோயம்புத்தூர், கடப்பை, கர்நூல், பல்லாரி, கிருஷ்ணா, ஜில்லாக்களில் விசேஷமான பருத்தி பயிராக்குகிறார்கள். நமது தேசத்தில் காம்போடியா பருத்தி என்கிற ஒருவகைப் பருத்தி விளைவிக்கிறார்கள். அவுரி களிமண், வண்டல் இருக்கும்படியான நிலத்தில் பயிராகிறது. கிருஷ்ணா, நெல்லூர், செங்கற்பட்டு, தென்னாற்காடு, கடப்பை, கர்நூல் ஜில்லாக்களில் அவுரி பயிரிடப்படுகிறது, அவுரியிலிருந்து நீலி எடுத்துச் சாயம் போடுகிறார்கள். அவுரித் தழை நிலங்களுக்கு எருவாகவும் உபயோகப்படுகிறது.

இந்த ராஜதானியில் சமவெளிகளில் ஆடுமாடுகளும் பலவித பக்ஷிகளும் விசேஷம். பசுக்களில் நெல்லூர்ப்பசுக்களும் கோயம்புத்தூரிலும் தென்ஜில்லாக்களிலும் உள்ள காங்கேயம் ஜாதிப் பசுக்களும் நன்றாய்ப் பால் கொடுக்கும். மைசூர் ஜாதிப் பசுக்கள் நன்றாய்ப் பால் கொடுக்கா.

எருதுகளில் காங்கேய ஜாதியும், நெல்லூர் ஜாதியும் அதிக சுமை இழுக்கும். வேகமாய்ப் போகக்கூடியவை யல்ல. மைசூர் எருதுகள் பிரயாணத்துக்கு உபயோகமானவை. பசு, எருது இவைகள் தவிர, எருமை, எருமைக்கடா, வெள்ளாடு, செம்மறியாடு ஆகிய பிராணிகள் மனிதர்களுக்கு உபயோகமானவை. எருமையின் பால் குடிப்பதற்கும், தயிர், நெய் முதலியவைகளுக்கும் உபயோகிக்கப் படுகிறது. எருமைக் கடாக்கள் நிலங்களை உழுவதற்கும் வண்டிகளை இழுப்பதற்கும் உபயோகப் படுகின்றன. வெள்ளாட்டுப்பால் குடிப்பதற்கு உபயோகப்படுகிறது. பசு, எருமை, ஆடு, இவைகளின் சாணங்கள் நிலத்துக்கு எருவாக உபயோகப்படுகின்றன. செம்மறியாட்டின் மயிரால் பலவிதமான கம்பளங்கள் நெய்கிறார்கள். இவ் வாடுகள் பல்லாரி, கோயம்புத்தூர், மைசூர் ஆகிய இடங்களில் ஏராளமாக வளர்க்கிறார்கள்.

இவைகளோடு நம்முடைய ராஜதானியில் பலவிதமான பக்ஷிகள் காணப்படுகின்றன. குயில்கள் பலவிதமான குருவிகள், கிளிகள், முதலியவை இருக்கின்றன. பக்ஷிகளின் இறகுகள் பலவிதமான அலங்காரக் கருவிகளுக்கு உதவுகின்றன. எழுதுகோல்களாகப் பூர்வீகத்தில் உபயோகப்பட்டன.

### பாடம் 19.

## மலைப்பிரதேசங்களும் விளைபொருள்களும்.

மலைப்பிரதேசங்களில் மழையும் குளிரும் அதிகம். வெயிலும் மிதமாக இருக்கும். மிளகு, ஏலக்காய் முதலிய வாசனைத் திரவியங்கள் பயிராவதற்கு மிதமான வெயிலும் விசேஷமழையும் வேண்டுமாதலால் திருவாங்கூர், மலையாளம், கொச்சி முதலிய நாடுகளில் உள்ள மலைகளில் அவைகள் விசேஷமாய்ப் பயிராகின்றன.






அவ்வாறே, காப்பிக்கொட்டையும் தேயிலையும் பயிராவதற்கு உன்னதமான மலைப் பிரதேசமும் ஏராளமான மழையும் வேண்டும். காப்பிக்கொட்டை சேர்வராயன்

மலை, மைசூர், குடகு, திருவாங்கூர் முதலிய மலைப்பிர தேசங்களிலும்; தேயிலை, நீலகிரி, ஆனைமலை, பழநிமலை ஆகிய விடங்களிலும் பயிராகின்றன. இன்னும் மலைப்பிர தேசங்களில் உருளைக்கிழங்கும், ஆபில், பேரிக்காய் முத லிய பழவர்க்கங்களும் விசேஷமாய்ப் பயிராகின்றன.

மேற்கூறிய விளைபொருள்கள் அல்லாமல், பிராணி களில் யானை, புலி, கரடி, மான்களும் வசிக்கின்றன. யானைகள் ஆனைமலையிலும், திருவாங்கூர் மலையிலும் விசேஷமாகக் காணப்படுகின்றன. யானைத் தந்தத்தால் உபயோகமுள்ள சாமான்கள் செய்யப்படுகின்றன. மான் கொம்பு, மான்தோல், புலித்தோல் ஆகியவைகளும் பல வித ஜாமான்கள் செய்வதற்கு உபயோகப்படுகின்றன.

## பாடம் 20.

## காடுகளும் விளைபொருள்களும்.

நம்முடைய ராஜதானியில் நான்கு வகையான காட்டுப் பிரதேசங்கள் அமைந்திருக்கின்றன.

வட சர்க்கார் காட்டுப் பிரதேசம்:—இப் பிரதேசத்தில் ஏஜன்ஸி டிவிஷனும் அடங்கியுள்ளது. கிருஷ்ணா நதி முதல் சில்கா ஏரிவரையில் காடு சிதறியிருக்கிறது. இக் காட்டில் குங்கிலியமரம், கடுக்காய்மரம், தேக்குமரம் ஆகிய இவைகள் வளரக் காணலாம்.

தக்ஷிண காட்டுப் பிரதேசம்:—இது தக்ஷிண பீடபூமி யில் இருக்கிறது. இதில் சந்தன மரங்களும், செம்மரங் களும், வேங்கை, கருங்காலி முதலிய மரங்களும் இன் னும் பலவித விருக்ஷங்களும் ஏராளமாய் வளர்கின்றன.

கர்நாடக காட்டுப் பிரதேசம்:—இதில் காவேரி நதி முதல் கன்யாகுமரி வரையில் உள்ள காடுகளும், மேற்கில்

உள்ள சில காட்டுப்பிரதேசங்களும் அடங்கியுள்ளன. இப் பிரதேசத்தில் மழை அதிகக் குறைவு. ஆகையால் விறகுக்காக உபயோகப்படும் மரங்கள் காணப்படும்.

மேற்குமலைக் காட்டுப் பிரதேசம்:— இதில் மேற்கு மலைத்தொடரில் உள்ள காடுகளும், மேற்குக் கரையில் உள்ள காடுகளும் அடங்கியுள்ளன. இப் பிரதேசங்களில் மழை அதிகம். அதில் சந்தனமரம்; தேக்குமரம் வேங்கை மரம் தோதகத்திமரம் முதலிய உன்னதமான மரங்கள் செழித்து ஏராளமாய் வளர்கின்றன.

காட்டில் இலைகளும் தழைகளும் ஏராளமாகக் கிடைக்கும். அவைகள் எருவாக உபயோகப்படுகின்றன. காடுகளில் மழை விசேஷமாய்ப் பெய்கிறது. அதனால் காடுகளை ராஜாங்கத்தார் விருத்தி செய்கிறார்கள். மழையில்லாத காலங்களில் ஆடு மாடுகள் காடுகளில் மேய்கின்றன. இவை தவிர, சாயவஸ்துக்களாகிய அரக்கும் கடுக்காயும். தோல் பதனிடுவதற்கு வேண்டிய ஆவாரம் பட்டையும், தேன், மூங்கில் முதலிய வஸ்துக்களும், தேக சிகிச்சைகளுக்கு வேண்டிய பலவகைப்பட்ட மூலிகைகளும் காட்டிலிருந்து கிடைக்கின்றன.

## பாடம் 21.

## சுரங்கங்களும் விளைபொருள்களும்.

நாம் உபயோகிக்கும் இரும்பு, பித்தளை, வெள்ளி முதலிய உலோகங்கள் எங்கிருந்து கிடைக்கின்றன? உலோகங்கள் நம்முடைய ராஜதானியில் எந்தெந்த இடங்களில் அகப்படுகின்றன? உலோகங்கள் சுரங்கங்களி னின்று வெட்டி எடுக்கப்படுகின்றன. நம்முடைய ராஜதானியில் கிடைக்கக்கூடிய உலோகங்கள் பொன், காரீயம், மாங்கனீஸ், அப்ரகம், உப்பு, வெடியுப்பு, ரத்னவகைகளுமே.

போன்:—இது சில ஜில்லாக்களில் உள்ள ஆற்றங்கரையில் சிறிதளவு கிடைக்கிறது. மலையாளத்துக்கும் நீலகிரிக்கும் மத்தியில் உள்ள வயநாடு என்னும் பீட பூமியிலும் அகப்படுகிறது. வயநாட்டிலுள்ள சுரங்கங்களினின்றும் தோண்டியெடுப்பது பிரயாசமும் பணச் செலவான காரியமுமானதால், அவைகளை விட்டுவிட்டார்கள். அனந்தபுரம் ஜில்லாவில் பொன் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. மைசூர் ராஜ்யத்தில் கோலார் என்னுமிடத்தில் ஏராளமான பொன் அகப்படுகிறது.

காரீயம்:—இது கோதாவரி பத்ராசலம் தாலூகாவில் விசேஷமாய்க் கிடைக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள சிங்கம்பட்டி ஜமீனிலும் கிடைக்கிறது. காரீயம் பென்சில்கள் செய்வதில் உபயோகப்படுகிறது.

மாங்கனீஸ், அப்ரகம்:—ஆகிய இவ்விரு உலோகங்களும் நம்முடைய ராஜதானியில் ஏராளமாய் அகப்படுகின்றன. மாங்கனீஸ் விசாகபட்டணம் ஜில்லாவிலும், அப்ரகம் அல்லது மைகா என்னும் உலோகம் நெல்லூர் ஜில்லாவிலும் ஏராளமாய்க் கிடைத்து வருகின்றன.

உப்பு:—நம்முடைய ராஜதானியில் உப்பைப் பூமியிலிருந்து தோண்டி யெடுப்பதில்லை. கடல் நீரைச் சிறுபாத்திகளில் தேங்கச்செய்தால், அந்நீர் சூரியவெப்பத்தினால் ஆவியாக மாறுகிறது. பாத்திகளில் உப்புத் தங்கிவிடும். துரைத்தனத்தார் உப்பை வியாபாரிகளுக்கு விற்பனை செய்கிறார்கள். சென்னைராஜதானியின் கிழக்குக் கரை முழுவதும் இந்த விதமாகவே எடுக்கப்படுகிறது.

வெடியுப்பு:—கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் இவ்வுப்பு ஏராளமாகச் செய்யப்படுகிறது.

ரத்னங்கள்:—சில வருடங்களுக்கு முன் கடப்பை, கர்நூல் ஜில்லாக்களில் ரத்னங்கள் கனிகளிலிருந்து எடுக்கப்பட்டு வந்தன. கோயம்புத்தூர் ஜில்லாவில் சில விடங்களுக்கு முன் கோமேதகம் என்னும் விலையுயர்ந்த ரத்னம் அகப்பட்டு வந்தது. அனந்தப்பூர் ஜில்லாவில் சில விடங்களில் உயர்ந்த வைரங்கள் அகப்படுகின்றன.

மேற்கூறப்பட்டவைகளோடு இரும்பும், நிலக்கரியும் நம்முடைய ராஜதானியில் சில விடங்களில் அகப்படுகின்றன. இரும்பு சேலம் ஜில்லாவிலும், பல்லாரியிலும் கிடைக்கிறது. சென்னை ராஜதானியில் கோதாவரி தீரத்தில் நிலக்கரிக் கனிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். கோதாவரி நதிக்கும் கிருஷ்ணா நதிக்கும் மத்தியில் நைஜாம் ராஜ்யத்தில் நிலக்கரி ஏராளமாய்க் கிடைக்கிறது.

## பாடம் 22.

## தொழில்களும் வியாபாரங்களும்—1

சென்னை ராஜதானியில் எல்லாத் தொழில்களிலும் முக்கியமானது விவசாயம். இத் தொழில் செய்பவர்கள் மொத்தஜனங்களில் ஒன்றுக்கு முக்காற்பங்கு. இதன்றி வேறு தொழில்களும் உண்டு. அவையாவன:— நெசவுத் தொழில், சாயம் போடுதல், கம்பளங்கள் நெய்தல், தோல் பதனிடுதல், உலோகங்களாலும் மரங்களாலும், தந்தம். மாட்டுக் கொம்புகளாலும் பலவித சாமான்கள் செய்தல் சர்க்கரை, உப்பு செய்தல், கள்ளு சாராயம் இறக்குதல், ஓடு செங்கல் முதலியன செய்தல், கயிறு பாய் பின்னுதல் மீன்பிடித்தல் முதலியன விசாகபட்டணம், கோதாவரி நெல்லூர், சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்

வேலி ஜில்லாக்களிலும் நெசவுத்தொழில் நடைபெறுகிறது. காக்கிநாடா, பந்தர், புல்லம்பேட்டை, நெல்லூர், ஆரணி, காஞ்சிபுரம், மதுரை, திண்டுக்கல் ஆகியவிடங்களில்உயர்ந்த வஸ்திரங்கள் நெய்யப்படுகின்றன கோயம்பூத்தூர், சேலம் மதுரை, செங்கற்பட்டு, நெல்லூர் முதலிய விடங்களில் துணிகளுக்குச் சாயம் போடப்படுகிறது. ஏலூரில் ரத்ன கம்பளங்களும் பல்லாரி கடப்பை ஜில்லாக்களில் கம்பளி களும் நெய்யப்படுகின்றன. தோல் பதனிடும் தொழிலில் இந்த ராஜதானி பிரசித்தி பெற்றது. தோல்பதனிடுவதற்கு வேண்டியவஸ்துக்களாகிய ஆவாரம்பட்டை, கடுக்காய் ஏரா ளமாய்க் காடுகளில் கிடைக்கிறபடியால், பலவிடங்களில் தோல் பதனிடப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மதுரை ஜில் லாக்களில் செம்பு பித்தளை வெண்கலம் முதலிய உலோகங் களால் பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. அலுமினியம் என்ற உலோகத்தினாலும் பாத்திரங்கள் சென்னையில் செய் யப்பட்டு வருகின்றன. விசாகபட்டணம் ஜில்லாவில் தந் தத்தால் பெட்டிமுதலிய சாமான்கள் செய்யப்படுகின்றன. காக்கிநாடா திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங் களில் சுருட்டுகள் செய்கிறார்கள். தென்னை, பனை ஏராள மாய் வளருமிடங்களில் சாராயமும் பனைவெல்லமும், செய் யப் படுகின்றன. கரும்பு பயிராகுமிடங்களில் வெல்லம் சர்க்கரை, கற்கண்டு முதலியவை செய்கிறார்கள். தென் கன்னடம் ஜில்லாவில் ஒருவிதச் சிறந்த களிமண்ணைக் கொண்டு மங்களூர் ஓடு என்னும் சிறந்த ஓடுகள் செய்யப் படுகின்றன. தென்கன்னடம் மலையாளம் ஆகிய ஜில்லாக் களில் தென்னை விசேஷமானதால் தென்னைநாரினால் கயிறு பின்னுதல் முதலிய வேலைகள் செய்கிறார்கள், கடற்கரை யோரமான விடங்களில் பலர் மீன் பிடிக்கிறார்கள்.

## பாடம் 23.

## தொழில்களும் வியாபாரங்களும்—II

முன் பாகத்தில் கூறப்பட்டுள்ள தொழில்களன்றி இந்த ராஜதானியில் பலவிடங்களில் உலோகங்களினாலும், தந்தம், மாட்டுக் கொம்பு, சந்தனமரம் இவைகளினாலும் சித்திர வேலைகளும் செய்யப்பட்டு வருகின்றன. எண்ணெய் இறக்கும் யந்திரசாலைகளும், அரிசி யந்திரசாலைகளும் கரும்பு யந்திரசாலைகளும் இருக்கின்றன. சென்னை பட்டணம், மதுரை, சாத்தூர், விருதுநகர், கோவில்பட்டி என்ற இடங்களில் பஞ்சாலைகள் இருக்கின்றன.

நமது தேசத்தில் ஏராளமாய் விளையும் வஸ்துக்களை அவைகள் கிடைக்காத நாடுகளுக்கு அனுப்புதலும் நம்முடையதேசத்தில் கிடைக்காத வஸ்துக்களை ஏராளமாய்க் கிடைக்கும்படியான நாடுகளிலிருந்து தருவித்தலும், ஆகிய இவ்விரண்டிற்கும் வியாபாரம் எனப்படும். நமது நாட்டிலிருந்து வெளிநாட்டுக்குச் சாமான்களை அனுப்புவதற்கு ஏற்றுமதி என்றும், இதர நாடுகளிலிருந்து சாமான்களைத் தருவிப்பதற்கு இறக்குமதி என்றும் சொல்லப்படும்.

தோல் இங்கிலாந்துக்கும் அமரிக்கா தேசத்துக்கும் அனுப்பப்படுகிறது. பருத்தி ஜப்பான், இங்கிலாந்துக்கும், வேர்க்கடலை பிரஞ்சு தேசத்துக்கும், நெல் இலங்கை, மோரீஸ் முதலிய தீவுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவை தவிர, வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் வஸ்துக்கள் தேயிலை, காபி, நூல் முதலிய சாமான்களும் அப்ரகம் மாங்கனீஸ், நீலி முதலியவைகளும் ஆகும்.

இறக்குமதி சாமான்களாவன:—ஐரோப்பாக் கண்டத்திலிருந்து ஏராளமாய் வஸ்திரம், இரும்பு, எஃகு, முதலியசா

மான்களும், இரும்பு சாமான்களும், துணி தைக்கும் யந்திரங்களும், ரெயில் சாமான்களும், சர்க்கரை, சாராயம், பிஸ்கோத்து, சோப் முதலிய ஷாப்வஸ்துக்களும், டப்பிப் பால், கெரொஸின் எண்ணெய், காகிதம், கண்ணாடி, தீப்பெட்டி, மெழுகுவர்த்தி, புஸ்தகங்கள் முதலியவையுமே.

பாடம். 24

## தொழில்களும் வியாபாரிகளும்:—III

சென்னைராஜதானிக்குள் சமீபமான இடங்களுக்குச் சாமான்கள் கட்டை வண்டிகளிலும், ரயில்வண்டிகளிலும், கால்வாய்கள் வழியாய்ப் படகுகளிலும் அனுப்புகிறார்கள். இதர தேசங்களிலிருந்து சாமான்கள் தருவிக்கவும் அதாவது இறக்குமதி செய்யவும், அவைகளுக்குச் சாமான்கள் அனுப்பவும் அதாவது ஏற்றுமதி செய்யவும் துறைமுகங்கள் வேண்டியவையா யிருக்கின்றன.

சென்னை ராஜதானியின் கரையோரங்களில் சமுத்திரம் கப்பல் தங்கவேண்டியதற்குப் போதுமான ஆழமில்லை. இயற்கையாய் அமைந்துள்ள துறைமுகப் பட்டணங்கள் இல்லை. கப்பல்கள் சமுத்திரக் கரைக்குத் தூரத்தில் சமுத்திரத்தில் தங்கவேண்டி யிருக்கின்றன. ஆகையால் கப்பல்கள் தங்குமிடத்திற்குப் படகுகளைக் கொண்டு போய்ச் சாமான்களைக் கப்பலில் ஏற்றவும், சாமான்களைக் கப்பலிலிருந்து இறக்கிக் கொண்டுவரவும் வேண்டியதாய் இருக்கிறது. ஆயினும் சென்னபட்டணத்தில் மாத்திரம் பணம் ஏராளமாய்ச் செலவு செய்து கப்பல் கடலோரம் தங்குவதற்கு ஒரு துறைமுகம் ராஜாங்கத்தாரால் கட்டப்பட்டிருக்கிறது. இந்த ராஜதானியில் உள்ள முக்கிய துறைமுகப் பட்டணங்களும் அவைகளினின்று ஏற்றுமதி செய்யப்படும் வஸ்துக்களும் கீழே குறிப்பிடப்படுகின்றன.



விசாகபட்டணம் துறைமுகம்.

பிம்லிப்பட்டணம்:—இதிலிருந்து ஏஜன்ஸி டிவிஷனில் விளையும் சாமான்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

காக்கிநாடா:—பருத்தி, புகையிலை, சர்க்கரை.

சென்னபட்டணம்:—கடப்பை, கர்நூல், பல்லாரி, முதலிய உள் நாட்டுப்பிரதேசங்களில் விளையும்வஸ்துக்கள்.

புதுச்சேரி:—பிராஞ்சு தேசத்துக்கு இங்கிருந்து மணிலாக்கொட்டை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கூடலூர்:—மணிலாக் கொட்டையும், தென்னுற்காட்டில் விளையும் தானியங்களும் ஏற்றுமதியாகின்றன.

நாகபட்டணம்:—தஞ்சாவூர் ஜில்லாவில் விளையும் வஸ்துக்கள் இங்கிருந்து பர்மா, சிலோன் முதலிய நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

தூத்துக்குடி:—திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களில் விளையும் பருத்தி, நெல் முதலியவை இங்கிருந்து ஏற்றுமதி செய்து அனுப்பப்படுகின்றன.

கோச்சி:—தேங்காய் நாரினுல் செய்த கயிறு, பலவகைச் சாமான்கள். கோரைப்பாய்கள், ஓடுகள், மிளகு, ஏலக்காய், கிராம்பு முதலியன ஏற்றுமதியாகின்றன.

மங்களூர்:—குடகு தேசத்தில் விளையும் காப்பிக்கொட்டை இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தலைச்சேரி:—வயநாடு பீடபூமியில் விளையும் ஏலக்காய் இங்கிருந்து அயலூர்களுக்கு ஏற்றுமதியாகிறது.

கள்ளிக்கோட்டை:—மலையாள தேசத்தில் விளையும் வஸ்துக்கள் இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன.

## பாடம் 25.

## போக்குவரவு சாதனங்கள்.

முன் காலத்தில் மோட்டார் வண்டி, ரயில் வண்டி ஏற்படுவதற்குமுன் மாட்டுவண்டிகளிலும், குதிரை வண்டிகளிலும் பிரயாணம் செய்தார்கள். அதற்காக நாடெங்கும் ரஸ்தாக்கள் அவசியமாயிருந்தன. இராஜாங்கத்தார் பல ரஸ்தாக்களை அப்போதைக் கப்போது பலவிடங்களில் ஏற்படுத்தி வந்தார்கள். தற்காலத்தில் மோட்டார் வண்டிகள் ஓடுவதற்குப் புதுச் சாலைகளும், புதுப்பிக்கப்பட்ட பழைய சாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன. ரயில் வண்டிகளுக்காக இருப்புப் பாதைகள், அவசியமாயுள்ள பல இடங்களில் போடப்பட்டிருக்கின்றன. போக்குவரவு சாதனங்களாவன:—இருப்புப்பாதைகள், கால்வாய்கள், கழிகள், நதிகள், வண்டி ரஸ்தாக்கள் ஆகியவைகளே.

### இருப்புப் பாதைகள்:—

(1) சென்னையிலிருந்து கடற்கரை யோரமாய்க் கல்கத்தாவுக்கு ஒரு இருப்புப்பாதை போகிறது. இந்தப் பாதைபோகும் பிரதேசம் சமவெளியே.

(2) வேறொரு பாதை சென்னையிலிருந்து குண்டக்கல், ரேச்சூர் மார்க்கமாய்ப் பம்பாய்க்குச் செல்லுகிறது.

(3) மற்றொரு பாதை சென்னையிலிருந்து காட்பாடி, ஜோலார்ப்பேட்டை, ஈரோடு, போத்தனூர், கள்ளிக் கோட்டை மார்க்கமாக மங்களூருக்குப் போகிறது.

(4) இன்னும் ஒரு இருப்புப்பாதை சென்னையிலிருந்து தெற்கு முகமாய்த் தனுஷ்கோடி வரையிலும், மணியாச்சி மூலமாய்த் தூத்துக்குடி வரையிலும் செல்லுகிறது.

## கிளை இருப்புப் பாதைகள்.

1. குண்டக்கல்லில் இருந்து பெஜவாடாவுக்கு ஒரு கிளை இருப்புப்பாதை செல்லுகிறது.

2. குண்டக்கல்லில் இருந்து பல்லாரி ஹாஸ்பெட்டு மார்க்கமாய் ஒரு பாதை செல்லுகிறது.

3. குண்டக்கல்லில் இருந்து தர்மவரம் மார்க்கமாய்ப் பெங்களூருக்கு ஒருபாதை செல்லுகிறது.

4. செங்கற்பட்டிலிருந்து அரக்கோணம் வரையில் ஒரு கிளைப் பாதை ஓடுகிறது.

5. விழுப்புரத்திலிருந்து காட்பாடிக்கு ஒன்றும் புதுச்சேரிக்கு ஒன்றும் செல்லுகின்றன.

6. திருச்சிராப்பள்ளியிலிருந்து ஈரோடுக்கு ஒரு கிளைப்பாதை போகிறது.

7. ஜோலார்பேட்டையிலிருந்து பெங்களூருக்கு ஒரு கிளைப்பாதை ஓடுகிறது.

8. போத்தனூரிலிருந்து உதகமண்டலத்திற்கு ஒரு கிளைப்பாதை செல்லுகிறது.

9. சென்னை தனுஷ்கோடிப் பாதையிலிருந்து மதுரையில் ஒரு கிளை தூத்துக்குடி போகிறது.

10. திருச்சியிலிருந்து விருத்தாசலம் மார்க்கமாய்ச் சென்னைக்கு ஒரு கிளைப்பாதை போகிறது.

11. திருச்சியிலிருந்து மானாமதுரைக்கு ஒரு கிளைப் பாதை போய்க்கொண்டிருக்கிறது.

12. திண்டுக்கல்லிலிருந்து போத்தனூருக்கு ஒரு கிளைப்பாதை போய்க்கொண்டிருக்கிறது.

13. மதுரையிலிருந்து போடிநாயக்கனூருக்கு ஒரு கிளைப்பாதை போய்க்கொண்டிருக்கிறது.

14. விருதுநகரிலிருந்து தென்காசிக்கு ஒரு கிளைப் பாதை போய்க்கொண்டிருக்கிறது.

15. திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்கு ஒரு கிளைப்பாதை போய்க்கொண்டிருக்கிறது.

## பாடம் 26.

## போக்குவரவு சாதனங்கள்—2.

### கால்வாய்களும் கழிகளும்.

சென்னை ராஜதானியில் பாய்ச்சலுக்கு ஏற்பட்ட கால்வாய்களில் சில படகுகள் போவதற்கும் உபயோகப் படுகின்றன. அவை கோதாவரி கிருஷ்ணா டேல்டாக்களில் ஓடும் கால்வாய்கள். இந்தக் கால்வாய்கள் செழிப்பான பிரதேசங்களில் ஓடுகிறபடியால் சரக்குகள் அவைகள் மூலமாகப் படகுகளில் கொண்டுபோகப் படுகின்றன. அவைகள் பக்கிங்காம் கால்வாயோடும், ரெயில் மார்க்கத்தில் உள்ள பட்டணங்களுடனும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கோதாவரி கிருஷ்ணா டெல்டாக்களின் கால்வாய்கள் ஏறக்குறைய முழுவதும் படகுகள் பிரயாணம் செய்யக் கூடியவையாயிருக்கின்றன.

கடப்பை கர்நூல் கால்வாய்:—இக் கால்வாய் பீடபூமியில் இருக்கிறது. இக் கால்வாயிலிருந்து சமுத்திரத்துக்குப் போக வழி கிடையாது. அநேகமாக இதில் தண்ணீர் இருக்கமாட்டாது. மழை காலங்களில் பாய்ச்சலுக்கும், படகுகள் பிரயாணம் செய்வதற்கும் இந்தக் கால்வாய் உபயோகப்படுகிறது.

மேற்குக் கடல்கரையிலுள்ள உப்பங்கழிகள்.

பக்கிங்காம் கால்வாய்:—மதராஸ் கவர்னராக இருந்த ட்யூக் ஆப் பக்கிங்காம் காலத்தில் 50 வருஷத்துக்கு முன் இக்கால்வாய் வெட்டப்பட்டது. இதன் நீளம் 262 மைல். கிருஷ்ணா கால்வாயின் தெற்கு முனையிலிருந்து ஆரம்பித்துக் கிழக்குக் கரையோரமாய்ச் சென்னையில் வந்து முடிகிறது. இருப்புப் பாதை ஏற்பட்ட பின்னர் இக் கால்வாயின் உபயோகம் குறைந்திருக்கிறது.

கழிகள்:—மேற்குச் சமுத்திரக் கரையில் சமுத்திர ஜலம் எதிர்த்து வந்து சில கழிகள் உண்டாயிருக்கின்றன. கழிகள் மலையாளம், தென்கன்னடம், திருவாங்கூர் ஆகிய நாடுகளில் சமுத்திரக்கரையில் வெகுதூரம் பரவியிருக்கின்றன. கொச்சி ராஜ்ஜியத்தில் 120 மைல் நீளமுள்ள ஒரு கழி உண்டு. அதிலிருந்து கன்னியாகுமரி வரையில் ஒரு கால்வாய் ஓடுகிறது. படகுகளில் பிரயாணம் செய்வதற்கு இந்தக் கழிகள் உபயோகப்படுகின்றன.

## பாடம் 27.

## போக்குவரவு சாதனங்கள்—3.

## நதிகளும் வண்டி ரஸ்தாக்களும்.

கிழக்குக்கரைச் சமவெளிகளில் பாயும் நதிகள் கப்பல் பிரயாணத்துக்குத் தகுதியற்றவை. அவைகளின் ஆரங்கத்தின் ஆரம்பத்துக்குக் கொஞ்சம் தூரம் வரையில் படகுகள் மாத்திரம் செல்லமுடியும்.

மேலே கூறப்பட்ட சாதனங்கள் இல்லாத இடங்களில் கட்டை வண்டிகளும் பொதி மாடுகளும் சாதனங்களாக உபயோகப்படுகின்றன. ஏஜன்ஸி பிரதேசங்களில் சாமான்கள் எருதுகளின் மீது வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்து அனுப்பப்பட்டு வருகின்றன.

## பாடம் 28.

## ஜனங்களும் பாஷைகளும்.

சென்னை ராஜதானியின் மொத்த ஜனத்தொகை நாலரைக்கோடி. சராசரியில் ஒரு சதுரமைலுக்கு 300க்கு மேல் ஜனங்கள் வசிக்கிருர்கள். நிலச் செழிப்பும் விளைவும்




மிகுதியாயுள்ள விடங்களில் ஜனங்கள் நெருக்கமாக வசிக்

லும் ஜனத்தொகை குறைவு. இதற்குத் திருஷ்டாந்தமாக மலையாளம் ஜில்லாவில் சதுரமைல் ஒன்றுக்கு 500 பேருக்கு மேலும், ஏஜன்ஸி பிரதேசத்தில் சதுரமைல் ஒன்றுக்கு 80 பேரும் வசிக்கிறார்கள். இந்த ராஜதானியில் வசிக்கும் ஜனங்கள், இந்துக்களும், மகம்மதியர்களும், கிறிஸ்தவர்களுமே. இவர்களன்றிப் பாரஸீகர்களும் ஐரோப்பியர்களும் இருக்கிறார்கள். மலைப் பிரதேசங்களில் நாகரிகமற்ற ஜாதியார்கள் வசிக்கிறார்கள். அவர்களுள் முக்கியமானவர்கள் தோடர்கள் என்பவர்கள்.

மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு 89 பேர் இந்துக்களும், 7 பேர் மகம்மதியர்களும், 3 பேர் கிறிஸ்தவர்களுமாவர். ஒருபாகம் முன் சொல்லப்பட்ட இதரஜாதியார்களாவார்கள். மகம்மதியர்கள், மலையாளம், தென்கன்னடம், தஞ்சாவூர், கர்நூல் இராமநாதபுரம், வடஆற்காடு, குண்டூர், ஜில்லாக்களில் அதிகம். இந்தியகிறிஸ்தவர்கள் திருநெல்வேலி. குண்டூர், தென்கன்னடம் ஜில்லாக்களில் அதிகம். 1000 ஜனங்களில் ஆண்களில் 120 பேர்கள் பெண்களில் 10 பேர்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்.

நம்முடைய ராஜதானியில் முக்கியமாய் வழங்கும் பாஷைகள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்துஸ்தானி ஒரியா என்பன. ஒட்டர பாஷைகளும் சில இடங்களில் பேசுகிறார்கள். மேற்குக்கரை ஜில்லாக்களில் விசேஷமாய்மலையாளமும், மைசூரிலும் அதைச்சுற்றியுள்ள பிரதேசங்களில் கன்னடமும், பேசுவார்கள். தெலுங்கு பாஷை கஞ்சம், விசாகபட்டணம், கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர், கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தப்பூர் ஆகிய ஜில்லாக்களில் பேசப்பட்டு வருகிறது.

பாடம் 29.

## சரித்திரமும் தற்கால அரசாட்சியும்.

பூர்வீகத்தில் ஆந்திரா என்னும் தெலுங்கு தேசத்தை ஆந்திரா வம்சத்தரசர்கள் ஆண்டுவந்தார்கள்.

தமிழ் நாட்டில் சோழ பாண்டியர்களும், மலையாளத்தைச் சேரவம்சத்தார்களும் ஆண்டுவந்தார்கள். அதற்குப் பிறகு தென்னிந்தியாமீது மகம்மதியர்கள் படையெடுத்துப் புதிய ராஜ்யங்களை ஸ்தாபித்தார்கள்.

சுமார் 300 வருடங்களுக்குமுன், போர்ட் செயின்ட் ஜார்ஜ் என்னும் கோட்டையிலிருக்கும் ஸ்தலம் சந்திரகிரி அரசனால் ஆங்கிலேய வர்த்தகருக்குக் கொடுக்கப்பட்டது. அதற்கு நூறு வருடங்களுக்குப் பிறகு சென்னையைச் சுற்றிலும் உள்ள செங்கற்பட்டு ஜில்லா ஆங்கிலேய வியாபாரிகளுக்குக் கர்நாடக நவாப்பால் கொடுக்கப்பட்டது. அதற்கு இரண்டு வருஷங்களுக்குப் பிறகு வடசர்க்கார்கள் என்று சொல்லப்பட்ட கஞ்சம், விசாகபட்டணம், கோதாவரி, கிருஷ்ணா ஆகிய ஜில்லாக்கள் மொகலாய சக்கரவர்த்தியால் ஆங்கிலேயருக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டன. இதற்கு முப்பது வருடங்கள் கழித்து மைசூர் யுத்தங்களின் முடிவில் திப்புவை வென்று மலபார், சேலம், மதுரையில் ஒருபாகம், தென்கன்னடம், கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய ஜில்லாக்களை ஆங்கிலேயர்கள் பிடித்துக் கொண்டார்கள். அப்போதே தஞ்சாவூரும், நைஜாமிடத்திலிருந்து கொடுக்கப்பட்ட ஜில்லாக்கள் என்று சொல்லப்படுவனவாகிய அனந்தபுரம், கர்நூல், பல்லாரி, கடப்பை, ஆகிய ஜில்லாக்களும் ஆங்கிலேயர் வசம் சேர்ந்தன.

நமது மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியும் இங்கிலாந்தின் அரசருமாகிய ஐந்தாம் ஜார்ஜின் ஆட்சிக்குள் இந்தியா அடங்கியது. இந்தியாவின் விஷயங்களைக் கவனிப்பதற்கு ஒரு மந்திரி ஏற்பட்டிருக்கிறார். அவருக்கு இந்தியா மந்திரி என்று பெயர். இந்தியா முழுவதும் சக்கர்வர்த்தியின் பிரதிநிதியால் ஆளப்படுகிறது. தற்காலத்துப் பிரிதிநிதிக்கு வில்லிங்டன் பிரபு என்று பெயர். அவருடைய அதிகாரத்தின் கீழ் ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு கவர்னர் இருக்கிறார்.

நமது ராஜதானியும் ஒரு கவர்னரின் ஆட்சிக்குட்பட்டது. கவர்னருக்கு உதவியாக இரண்டு சபைகள் இருக்கின்றன. அவை சட்ட நிருபணச் சபை, சட்ட பரிபாலனச் சபை என்பனவாம். நம்முடைய ராஜதானி 28 ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவுக்கும் முக்கிய அதிகாரி கலெக்டர். நியாய சம்பந்தமான விஷயங்களைத் தீர்ப்பதற்கு ஜில்லா ஜட்ஜ் இருக்கிறார். கலெக்டரின் கீழ் சப் கலெக்டர், டிபுடி கலெக்டர்களும் இருக்கிறார்கள். இவர்கள் தவிர போலீஸ் சூபரிண்டெண்டும், மராமத் இலாகா ஆபீசராகிய இஞ்சினீர், அஸிஸ்டெண்டு இஞ்சினீர்களும், வைத்திய இலாகா டாக்டரும், வித்தியா இலாகா ஆபீசரும் இருக்கிறார்கள். அவ்வாறே ஒவ்வொரு ஜில்லாவும் பல தாலூகாக்களாகவும், ஒவ்வொரு தாலூகாவும் பல கிராமங்களாகவும் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு தாலூகாவின் பிரதான பட்டணத்தில் தாலூகா கச்சேரியும், சப் மாஜிஸ்திரேட் ஆபீசும், ஆஸ்பத்திரியும், ரிஜிஸ்தரார் ஆபீஸும், போஸ்ட்டாபீஸும் போலீஸ் ஸ்டேஷனும், இருக்கின்றன. கிராமங்களில்

கணக்கு வேலை பார்ப்பவர்களும், மணியக்காரர்களும், தலையாரி, தோட்டி, முதலிய காவலாளிகளும் வேலை பார்த்து வருகிறார்கள். பெரிய பட்டணங்களில் முனிசிபாலிடிகளும், சிறிய பட்டணங்களில் யூனியன்களும், கிராமங்களில் பஞ்சாயத்துப் போர்டுகளும் கௌரவ உத்தியோகஸ்தர்களால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றன.

பாடம் 30.

## ஜில்லாக்களும் பட்டணங்களும்.—1.

இந்த ராஜதானி ஏஜென்ஸி டிவிஷன் சேர்ந்து 28 ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கிழக்குக்கரைப் பிரதேசத்தில் அடங்கியுள்ள ஜில்லாக்கள் ஆவன:—கஞ்சம், விசாகபட்டணம், மேற்குக் கோதாவரி, கிழக்குக் கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர், சென்னபட்டணம், செங்கற்பட்டு, சித்தூர் வடஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், தென்னாற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய 19 ஜில்லாக்கள். பீடபூமியில் உள்ள ஜில்லாக்கள் பல்லாரி, கர்நூல், அனந்தபுரம், கடப்பை, மேற்குக்கரைப் பிரதேசத்தில் நீலகிரி, மலையாளம், அஞ்சங்கோ, தென்கன்னடம், ஆகிய 4 ஜில்லாக்கள் அடங்கியுள்ளன.

ஏஜன்ஸி டிவிஷன் என்பது கஞ்சம், விசாகபட்டணம், கோதாவரி ஜில்லாக்களில் வடக்கேயுள்ள மலைநாட்டுப் பிரதேசங்கள். இந்தப் பிரதேசத்தின் விஸ்தீரணம் சுமார் 20,000 சதுரமைல். ஜனத்தொகை சுமார் 15 லக்ஷம். இந்த நாடு கவர்னரால் நியமிக்கப்பட்ட ஏஜண்டு என்ற உத்தியோகஸ்தரால் மேல்பார்வையிடப்படுகிறது. இப்பிரதேசத்தில் மழை அதிகம். ஆனாலும்

பெரிய ஆறுகள் கிடையா. பள்ளத்தாக்குகளில் நெல், கேழ்வரகு, மஞ்சள் பயறு முதலியன பயிரிடப்படுகின்றன. காடுகளில் பலவகை மரங்களும், கடுக்காய், தேன், அரக்கு முதலியவைகளும் கிடைக்கின்றன.

கிழக்குக் கரையில் உள்ள ஜில்லாக்கள்:—கஞ்சம் இந்த ஜில்லாவில் 11 தாலூகாக்கள் இருகின்றன. இந்த ஜில்லாவில் உள்ள பெரிய ஏரி சில்கா ஏரி. அது 40 மைல்




கஞ்சம் விசாகபட்டணம் ஜில்லாக்கள்.

நீளம். முக்கியமான நதிகள் வம்சதாரை நதியும், நாகாவளியும், ருஷிகுல்யாவும் ஆகும். ருஷிகுல்யா நதியின் நீரை

அணைகட்டித் திருப்பிப் பாய்ச்சலுக்கு உபயோகிக்கிறார்கள். இந்த ஜில்லாவில் பேசும் பாஷைகள் தெலுங்கும் ஒட்டிர பாஷையுமே. ஆஸ்கா என்னுமிடத்தில் சர்க்கரை செய்கிறார்கள். முக்கியபட்டணங்கள் ஆவன:—கோபாலபுரம், பத்ஹம்புரம் கஞ்சம், சத்திரபுரம், கலிங்கபட்டணம், ஸ்ரீகாகுளம். இந்த ஜில்லாவில் உள்ள பட்டணங்களில் பெரியது ப்ரஹம்புரம், கோபாலபுரமும் கலிங்கபட்டணமும் துறைமுகப்பட்டணங்கள்.

விசாகபட்டணம் ஜில்லாவில் 14 தாலூகாக்கள் இருக்கின்றன. கிழக்குத் தொடர்ச்சிமலை இந்த ஜில்லாவை இரண்டு பாகங்களாகப் பிரிக்கிறது. முக்கிய நதிகள் வராக நதி, சாரதை நதி, நரகாவுளி. நெல், கரும்பு, அவுரி, பருத்தி, எள்ளு முதலியன விளைகின்றன. நெசவுத் தொழிலும் சித்திர வேலையும் முக்கியமான கைத்தொழில்கள். விசாகபட்டணமும் பீமன் பட்டணமும் முக்கியமான துறைமுகங்கள். வால்தோர் ஐரோப்பியர்கள் வசிப்பதற்கு வசதியான இடம். போப்பிலி, ஜயபுரம் இவைகள் அப்பெயர் கொண்ட ஜமீன்களின் முக்கிய பட்டணங்கள். விஜயநகரம் என்பது ஒரு பெரிய பட்டணம். இதில் ஒரு காலேஜ் இருக்கிறது.

## பாடம் 31.

## ஜில்லாக்களும் பட்டணங்களும்—2.

மேலக்கோதாவரி ஜில்லாவில் 5 தாலூகாக்கள் அடங்கியுள்ளன. நிடதவோல் முக்கிய பட்டணம். அது ஒரு வியாபார ஸ்தலம். எல்லூரில் முதல் தரமான ரத்ன கம்பளங்கள் நெய்கிறார்கள் அதிலும் நரசாபுரம் என்ற பட்டணத்திலும் ஹைஸ்கூல்கள் இருக்கின்றன.




கிருஷ்ண கோதாவரி டெல்டாக்கள்.

கிழக்குக் கோதாவரி 4 தாலூகாக்கள் அடங்கியுள்ளது. இதில் பித்தாபுரம் ஜமீன் இருக்கிறது. கோதாவரி நதி இந்த ஜில்லாவை இரண்டு பாகமாகப்பிரிக்கிறது நெல், சோளம், கொள்ளு, பருத்தி, புகையிலை, கரும்பு முதலியவைகள் பயிராகின்றன. நெசவும் ரத்ன கம்பளங்கள் நெய்வதும் இந்த ஜில்லாவின் கைத்தொழில்கள்.

காக்கிநாடா ஒரு துறைமுகப்பட்டணம். ராஜமஹேந்திரத்தில் ஒரு காலேஜ் இருக்கிறது. சாமல்கோட், அமலாபுரம் ஆகியவை வேறு பட்டணங்கள். தவளேசுவரம் என்னுமிடத்தில் கோதாவரி நதியின் குறுக்கே ஒரு அணை கட்டப் பட்டிருக்கிறது.

கிருஷ்ணாஜில்லாவின் விஸ்தீரணம் சுமார் 6,000 சதுர மைல். இந்த ஜில்லாவில் பாயும் நதி கிருஷ்ணா பேஜவாடா என்னுமிடத்தில் இந்நதியின் மீது ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது, கிருஷ்ணா டெல்டா அதிக செழிப்புள்ளது. கோல்லேர் என்னும் ஏரி இந்த ஜில்லாவின் மத்தியில் இருக்கிறது. தெலுங்கு விசேஷமாகப் பேசப்படுகிறது. நெல், பருத்தி அவரி புகையிலை முதலியன பயிராகின்றன. நெசவு முக்கியமான கைத்தொழில். பேஜவாடாவில் ஐந்து இருப்புப் பாதைகள் கூடுகின்றன. படகுகள் செல்லத்தக்க கால்வாய்கள் இருக்கின்றன. பேஜவாடா முக்கிய பட்டணம். பந்தர் அல்லது மசூலிப்பட்டணம் என்பது முக்கிய துறைமுகப் பட்டணமாயிருக்கிறது.

குண்டூர் ஜில்லாவின் விஸ்தீரணம் சுமார் 6,000 சதுர மைல். கிருஷ்ணா நதி கிருஷ்ணா ஜில்லாவுக்கும் குண்டூர் ஜில்லாவுக்கும் இடையில் ஓடுகிறது. இந்நதியிலிருந்து கால்வாய்கள் மூலமாய் ஜலம் கொண்டு வந்து நிலங்களைச் சாகு

பெண்ணையாறு, பாலாறு முதலிய ஆற்றுப்பிரதேசங்கள்.

படி செய்கிறார்கள். இந்த ஜில்லாவின் ஜனத்தொகை சுமார் 18 லக்ஷம். பேசும் பாஷை தெலுங்கு. பயிரிடுதலும்

நெசவும் முக்கிய கைத்தொழில்கள். குண்டூர் முக்கிய பட்டணம். இது ஒரு பெரிய வியாபார ஸ்தலம். நைஜாம் பட்டணம் ஒரு துறைமுகம் வங்கவோலில் மாட்டுச்சந்தை நடைபெறுகிறது. தெனாலியிலிருந்து வெளியூர்களுக்கு ஏராளமான நெல் அனுப்பப்படுகிறது.

நெல்லூர் ஜில்லாவின் விஸ்தீரணம் சுமார் 8,000 சதுர மைல். இந்த ஜில்லாவில் 12 தாலூகாக்கள் அடங்கியுள்ளன. இந்த ஜில்லாவில் உள்ள கிழக்குத் தொடர்ச்சி மலைக்கு வேலிகோடமலை என்று பெயர். இந்த ஜில்லாவில் பாயும் முக்கிய நதி வடபெண்ணை ஆறு. வருஷத்தில் சராசரியில் பெய்யும் மழை 36 அங்குலம். தெலுங்கு முக்கியமான பாஷை. சோளம், நெல், அவுரி, பருத்தி முக்கிய விளைபொருள்கள். இந்த ஜில்லாவில் நேர்த்தியான ஆடு மாடுகள் கிடைக்கின்றன சாயமேற்றுதலும் நெசவும் முக்கிய தொழிகள். நெல்லூர் முக்கிய பட்டணம் இவ்வூருக்கருகே பெண்ணையாற்றின் குறுக்கே அணைபோடப்பட்டிருக்கிறது. இந்த ஜில்லாவில் வேங்கடகிரி என்பது அப்பெயர்கொண்ட ஒரு ஜமீனாக இருக்கிறது.

## பாடம் 32.

## ஜில்லாக்களும் பட்டணங்களும்.

சென்னபட்டணம் ஜில்லா 27 சதுரமைல் உள்ளது. எல்லா ஜில்லாக்களிலும் இது சிறியது. சென்னபட்டணம் தென்னிந்தியாவில் உள்ள பட்டணங்களிற் பெரியது. சுமார் 300 வருடங்களுக்கு முன் அது இருக்கும் இடம் ஆங்கிலேயருக்குச் சந்திரகிரி ராஜாவால் கொடுக்கப்பட்டது. அங்குதான் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்டது. இது தவிர பல நேர்த்தியான கட்டிடங்களும்



சென்னை ஹைக்கோர்ட்டு.

காட்சிச் சாலைகளும் உள்ளன. ஹைக்கோர்ட், சர்வகலாசாலை சம்பந்தமான ஆபீஸ், பொருட் காட்சிச்சாலை, வைத்திய சாலை, ரயில்வேஸ்டேஷன், பீபிள்ஸ்பார்க்கு, முதலியவை இங்குப் பார்க்கத்தக்கவையா யிருக்கின்றன.

சென்னை பட்டணத்தில் உள்ள ஆறுகள் அடையாறு, வத்தாறு, குடத்தலையாறு. வருஷத்தில் சராசரியில் பெய்யும் மழை 49 அங்குலம். டிராம் வண்டிகளும், மோட்டார் வண்டிகளும் போக்குவரவுக்குச் சாதகங்களாக உதவுகின்றன. பிரம்பூரில் ரயில்வே தொழிற்சாலை இருக்கிறது. சென்னபட்டணத்தில்உள்ளஸ்தலத்தில்முக்யம் திருவல்லிக்கேணி, மைலாப்பூர், திருவொற்றியூர் ஆகியவை. சென்ன பட்டணம் ஒரு துறைமுகப் பட்டணம். கப்பல்கள் தங்கு

வதற்கு இயற்கையாய் அமைந்திராவிடினும் விசேஷமாய்ப் பொருள் செலவழித்துக் கப்பல் தங்குமிடம் ஒன்று கட்டப் பட்டிருக்கிறது. சென்னையில் கார்ப்பொரேஷன் என்னும் நகர பரிபாலன சங்கத்தாரால் சுகாதார விஷயங்களும் ஆரம்பக் கல்விவிருத்தியும் பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. இவைகளின் நிமித்தமாக நகர ஜனங்களிடத்திலிருந்து வரிகள் வசூலிக்கப்படுகின்றன. நகர பரிபாலன சங்கத்தி னர்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறவர்கள். கார் பொரேஷன் கமிஷனர் என்னும் உத்தியோகஸ்தர் பல இலாகா விஷயங்களை மேற்பார்வையிட்டு வருகிறார்.

செங்கற்பட்டு ஜில்லாவின் விஸ்தீரணம் சுமார் 30,000, சதுரமைல். இந்த ஜில்லாவில் பாயும் நதிகளில் முக்கிய மானது பாலாறு. புழவேரி செம்பரம் பாக்கத்து ஏரி, செங் கற்பட்டு ஏரி முதலியவை முக்கிய ஏரிகள். வருஷத்தில் பெய்யும் சராசரி மழை 40 அங்குலம். நெல் கேழ்வரகு முதலிய தானியங்களும், அவுரியும், பயறுகளும் இங்கு விளைகின்றன. கடற்கரையோரமாய் உப்பு எடுக்கப்படு கிறது. பேசப்படும் பாஷைகள் தமிழும் தெலுங்குமே. இந்த ஜில்லாவில் உள்ள முக்கிய பட்டணங்கள் சைதாப் பேட்டை, செங்கற்பட்டு, காஞ்சீபுரம், திருவள்ளூர் ஆகிய வை. சைதாப்பேட்டையில் பெரிய கலெக்டர் ஆபீசும், உபாத்தியாயர் பயிற்சிபெறும் காலேஜும் இருக் கின்றன. செங்கற்பட்டில், சப்கலெக்டர் கச்சேரியும், ஜில்லா ஜட்ஜின் கோர்ட்டும் பால்ய குற்றவாளிகளைச் சீர்படுத்தும் பாடசாலையும் இருக்கின்றன. இந்த ஜில் லாவிலுள்ள பட்டணங்கள் எல்லாவற்றிலும் பெரியது காஞ்சீபுரம். இது இந்துக்களுக்கு ஒரு பெரிய புண்யஸ்தலமா யிருக்கிறது. முன் காலத்தில் பல்லவர்களுக்கும் தொண்ட



காஞ்சீபுரம் ஸ்ரீவரதராஜப்பெருமாள் கோவில்.

மான் என்ற சோழ அரசர்களுக்கும் தலைநகரமா யிருந்தது. சைவ வைஷ்ணவ மதங்களுக்கும் புத்த சமண மதங்

களுக்கும் சம்பந்தமாயுள்ள ஆலயங்களும் மடங்களும் இருக்கின்றன. கற்களைக் குடைந்து அமைக்கப் பட்டுள்ள கோவில்களுடைய மகாபலிபுரம் என்ற ஒரு சிறிய ஊர்



திருக்கழுக்குன்றம்.

பார்வையிடத்தக்கது. திருக்கழுக்குன்றம் என்ற ஊரும் ஒரு ஸ்தலம். மேற்கூறப்பட்டவைகளன்றி, வேறு பட்டணங்கள் பரங்கிமலை, பூவிருந்தவல்லி, பல்லாவரம் முதலியன.

சித்தூர்ஜில்லா 9 தாலுகாக்கள் அடங்கியது. மலைகள் நகரி மலையும் திருப்பதி மலையும். இந்த ஜில்லாவில் வருஷத்தில் சபாசரியில் பெய்யும் மழை 36 அங்குலம். ஜனத்தொகை சுமார் $12\frac{1}{2}$ லக்ஷம். இதில் வழங்கும் பாஷை தேலுங்கு. இந்த ஜில்லாவில் கேழ்வரகும் கரும்பும் விசேஷமாய்ப் பயிராகிறது. வாயல்பாடி தாலுகாவில் கரும்பு விசேஷமாய் விளைகிறது. பழ தினுசுகளும் இந்த ஜில்லாவில் பேர்பெற்றது. புங்கனூர்ப் பசுக்கள் என்னும் குட்டை



வேலூர் கோட்டை.

பான ஒரு ஜாதிப் பசுக்கள் பேர்பெற்றவை. சித்தூர் பிரதான பட்டணம்; சமுத்திரம் மட்டத்துக்கு 1000 அடி

உயர்ந்திருப்பதால் குளிர்ச்சியாயிருக்கிறது. திருப்பதி காளா ஹஸ்தி, திருத்தணிகை இவைகள் பேர்பெற்ற ஸ்தலங்கள். மதணப்பள்ளி சமுத்திர மட்டத்துக்கு 2000 அடிக்குமேல் இருப்பதால் தேக ஆரோக்கியத்துக்காகப் பலர் அவ்விடத் துக்குச் செல்லுகிறார்கள். சந்திரகிரியும் நாராயணவரமும் இந்த ஜில்லாவில் உள்ள வேறு பட்டணங்கள்.

## பாடம் 33.

## ஜில்லாக்களும் பட்டணங்களும்—4

வடஆற்காடு ஜில்லாவின் விஸ்தீரணம் 5,000 சதுர மைல். இந்த ஜில்லாவில் உள்ள முக்கிய மலைகள் ஜவ்வாது மலைகள். முக்கிய ஆறுகள் பாலாறும் செய்யாறும். இந்த ஜில்லாவில் உள்ள பெரிய ஏரிகள் காவேரிப்பாக்கம் ஏரியும் மாமண்டூர் ஏரியும். வருஷத்தில் பெய்யும் சராசரி மழை 36 அங்குலம். நெல், சோளம், கேழ்வரகு, கரும்பு, அவுரி, பருத்தி முதலியவை முக்கியமான பயிர்கள். தெலுங்கும் தமிழும் இந்த ஜில்லாவில் வழங்கும் பாஷைகள்.

ஜில்லாவில் பிரதான பட்டணம் வேலூர். அது காட்பாடி ரயில்வே ஜங்கிஷனிலிருந்து 5 மைல் தூரத்திலிருக்கிறது. போலீஸ் இன்ஸ்பெக்டர்களைப் பழக்கும் ஒரு பாடசாலையும், ஒரு பெரிய சிறைச்சாலையும் மத்தியதர காலேஜ் ஒன்றும் இங்கு இருக்கின்றன. இதில் பாழடைந்த கோட்டையும் ஒன்று இருக்கிறது. ஆரணியில் ஒரு பாழடைந்த கோட்டையும் ஒரு ஹைஸ்கூலும் இருக்கின்றன. இது ஜரிகை, பட்டுச்சேலைகளுக்குப் பேர் பெற்றது. ஆற்காடு முற்காலத்தில் கர்நாடக நவாபின் ராஜதானியாயிருந்தது. 180 வருடங்களுக்கு முன் அங்கு நடந்தயுத்தத்தில் க்ளைவ் என்னும் ஆங்கிலேய வீரர் கோட்டையைப் பிடித்தார். இவ்விடத்தில் ஜில்லா போர்டாரால் நடத்தப்



திருவண்ணுமலை.

படும் ஹகீம் ஹைஸ்கூல் என்ற ஒரு உயர்தரப் பாடசாலை இருக்கிறது. திருவண்ணுமலை பேர்பெற்ற சிவஸ்தலம்.

வாணியம்பாடி, வந்தவாசி, ஆம்பூர் ஆகிய இடங்களில் முகம்மதியர்கள் விசேஷமாய் வசிக்கிறார்கள். வந்தவாசி, போளூர், காவேரிப்பாக்கம், திருவோத்தூர் ஆகிய இடங்களில் ஜில்லா போர்ட் உயர்தர பாடசாலைகள் இருக்கின்றன. சோளிங்கபுரம் ஒரு விஷ்ணுஸ்தலம். இந்த ஜில்லாவில் உள்ள வேறு பட்டணங்கள் திருப்பத்தூர், குடியாத்தம், வாலாஜாபேட்டையுமே. இவை மூன்றும் முனிசிபாலிடி பட்டணங்களாக இருக்கின்றன. இவைகளால் பரிபாலிக்கப்பட்டுவரும் ஹைஸ்கூலும் இங்கு இருக்கின்றன.

சேலம் ஜில்லா 10 தாலூகாக்கள் அடங்கியது. விஸ்தீரணம் சுமார் 7000 சதுரமைல். இந்த ஜில்லாவில் முக்கியமலைகள் சேர்வராய மலைத்தொடரும் ஜவ்வாது மலைகளுமே. முக்கிய நதி காவேரியாறு. சேர்வராயமலையில் காப்பிக்கோட்டையும் பள்ளத்தாக்குகளில் கேழ்வரகு, கம்பு, எள்ளு, புகையிலையும் பயிராகின்றன. இந்த ஜில்லா ஒட்டுமாம்பழத்துக்குப் பேர்பெற்றது. சேலம் பட்டுவேஷ்டிக்குப் பேர்பெற்றது. வழங்கும் பாஷைகள் பெரும்பான்மை தமிழும் சிறுபான்மை கன்னடமும்.

முக்கிய பட்டணம் சேலம். இதில் காலேஜும் ஹைஸ்கூலும் இருக்கின்றன. சேர்வராய மலைகளில் உள்ள ஏர்க்காடு வேனிற்காலத்தில் தேக சௌக்கியத்துக்காக ஐரோப்பியர்கள் போகுமிடம். கிருஷ்ணகிரியில் கோட்டை ஒன்று இருக்கிறது. திருப்பத்தூரிலிருந்து இவ்விடத்திற்கு ஒரு கிளை இருப்புப் பாதை போகிறது. ஹோஸூர் ஒரு ஆரோக்கியமுள்ள இடம். நாமக்கல் ஒரு விஷ்ணு க்ஷேத்திரம். திருச்செங்கோடும் தர்மபுரியும் இந்த ஜில்லாவில் உள்ள வேறு பட்டணங்களா யிருக்கின்றன. இவ்வூர்களில் போர்டு ஹைஸ்கூல்கள் இருக்கின்றன.



கோயம்புத்தூர் விவசாயக் கலாசாலை.

கோயம்புத்தூர் ஜில்லா 10 தாலூகாக்கள் அடங்கியது. இந்த ஜில்லாவின் வடபாகம் ஒரு பீடபூமி. வடமேற்கில் நீலகிரி மலைகளும் தென்மேற்கில் ஆனைமலைகளும் இருக்கின்றன. இந்த ஜில்லாவின் முக்கிய நதிகள் பவானி, நோய்யல், அமராவதி. இவை காவேறியாற்றின் உபநதிகள். இந்த ஜில்லாவில் பாதிக்குக் கொஞ்சம் குறைவான பாகம் காடு. அதில் காட்டுமிருகங்கள் இருக்கின்றன. இந்த ஜில்லாவில் 20 அங்குலம் முதல் 38 அங்குலம் வரையில் மழை பெய்கிறது. கம்பு, சோளம், புகையிலை, சணல், கரும்பு முதலியன இந்த ஜில்லாவில் ஏராளமாகப் பயிராகின்றன. பேசப்படும் பாஷைகள் தமிழும், கன்னடமும்.

முக்கிய பட்டணம் கோயம்புத்தூர். இதில் விவசாய காலேஜும், காட்டிலாகா பாடசாலையும் இருக்கின்றன. இதற்கு 3 மைல் தூரத்தில் போத்தனூர் என்ற ஒரு ரயில்வே ஜங்ஷனில் ரயில்வே கைத்தொழில் சாலை ஒன்று உண்டு. ஈரோட் ஒரு ரயில்வே ஜங்ஷன். பவானி என்ற பட்டணம் பவானிநதி காவேரியைச் சேருமிடத்தில் இருக்கிறது. தாராபுரம் ஒரு பெரிய வியாபாரஸ்தலம். திருப்பூர் ஒரு சிறந்த வியாபாரஸ்தலமா யிருக்கிறது. உடுமலைப்பேட்டையும் வியாபாரத்திற்குப் பேர்பெற்ற இடம்.

## பாடம் 34.

## ஜில்லாக்களும் பட்டணங்களும்—5

தென்னாற்காடு ஜில்லாவில் 8 தாலூகாக்கள் அடங்கியுள்ளன. செஞ்சியில் ஒரு கோட்டை இருக்கிறது. இது தேசிங்கு ராஜனுடைய ராஜதானியாக இருந்தது. இந்த ஜில்லாவில் உள்ள முக்கிய நதிகள்—தென்பெண்ணையாறு. வெள்ளாறு, கொள்ளிடம் ஆகியவைகளே. இந்த ஜில்லா

யில் சராசரி மழை 39 அங்குலம். நெல், மணிலாக் கொட்டை முதலியன விளைபொருள்கள். வஸ்திரம் நெய்தல், பாய்முடைதல், கயிறு பின்னுதல், உப்பு உண்டாக்குதல், ஆகியவை முக்கியமான கைத்தொழில்கள். கூடலூர் இந்த ஜில்லாவின் முக்கிய பட்டணம். இதன் ஒரு பாகம் திருப்பாதிரிப்புலியூர் என்று சொல்லப்படுகிறது. விழுப்புரம் ஒரு ரயில்வே ஜங்ஷன். இங்கு ஒரு முனிசிபல் ஹைஸ்கூல் இருக்கிறது. திருக்கோயிலூர் ஒரு விஷ்ணு ஸ்தலம். திண்டிவனம் ஒரு வியாபார ஸ்தலம். பரங்கிப்பேட்டை ஒரு துறைமுகப் பட்டணம். சிதம்பரத்தில் ஒரு பெரிய சிவாலயம் இருக்கிறது. இவ்வாலயம் தென்னிந்தியாவிலுள்ள சிவாலயங்களான புண்ணிய ஸ்தலங்களில் குறிப்பிடத்தக்க முக்கியமான ஸ்தலம். இதுபற்றியே இதற்குப் 'பூலோக கைலாயம்' என்கிற மற்றொரு பெயரும் உண்டு. இக்கோவிலின் மூலஸ்தானத்தில் பொன்னம்பலம் இருக்கிறது. அவ்வம்பலத்தில் வேய்ந்துள்ள ஓடுகள் முழுதும் செம்பாற்செய்து பொன் முலாம் பூசப்பெற்றிருக்கிறது. இக்கோவில் பூசாரிகளுக்குத் தீக்ஷிதர்கள் என்று பெயர். அவர்கள் மூவாயிரம்பேர்கள். நந்தன் என்கிற பக்தனும் மாணிக்கவாசக சுவாமிகளும் முத்தி பெற்ற ஸ்தலம் இதுவே. இக்கோவிலில் அப்பர் சுந்தரர் திருஞான சம்பந்தர் மாணிக்கவாசகர் என்கிற சைவாசாரியர் நால்வர்களின் உருவங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இவ்விடத்தில் அண்ணாமலை சர்வகலாசாலை என்ற ஒரு கலாசாலை ஏற்பட்டிருக்கிறது. புதுச்சேரி:—பிரஞ்சுக்



திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை.

காரருடைய முக்கிய பட்டணம். இவ்விடத்திலிருந்து மணிலாக்கொட்டை பிரான்சு தேசத்துக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மயிலம் என்பது ஒரு சிறந்த சுப்பிரமண்ய ஸ்தலமாயிருக்கிறது.

தஞ்சாவூர் ஜில்லா 11 தாலூகாக்கள் அடங்கியது. அதன் விஸ்தீரணம் 3,710 சதுரமைல். இந்த ஜில்லாவில் பாயும் முக்கியமான நதி காவேரி. இந்த நதியிலிருந்து கணக்கில்லாத கால்வாய்கள் வெட்டப்பட்டு இந்த ஜில்லா முழுவதும் ஓடுகின்றன. ஒருவருஷத்தில் பெய்யும்சராசரி மழை 40 அங்கலத்திற்கு அதிகம். நீர்ப்பாய்ச்சலுக்காக அதிக ஆதாரங்கள் இருப்பதால் இந்த ஜில்லா தென்னிந்தியா ஜில்லாக்களுக்குள் அதிகச் செழிப்பானது. விளைபொருள்கள் நெல், காய் கறிகள், தேங்காய், வாழைப்பழம், கரும்பு, புகையிலை முதலியவைகள். புன்செய்த் தானியங்கள் விசேஷமாகக்கிடையா. பட்டுச்சேலைநெய்தல், பித்தளை வெண்கலப்பாத்திரங்கள் செய்தல் ஆகியவை முக்கிய கைத்தொழில்கள். தஞ்சாவூர் முக்கியபட்டணம். இவ்விடத்தில் சோழ அரசனால் கட்டப்பட்ட பேர்பெற்ற ஒரு பெரிய சிவாலயம் இருக்கிறது. மஹாராட்டிர அரசரால் கட்டப்பட்ட அரண்மனை இருக்கிறது. கும்பகோணம்:-இதில் கவர்ன்மெண்டுகாலேஜ் ஒன்று இருக்கிறது. பாத்திரங்கள் இங்கு செய்யப்படுகிறது. வேறு பட்டணங்களாவன:-மாயவரம் சீர்காழி, நாகபட்டணம், மன்னார்குடி, திருவாரூர் முதலியவை. நாகபட்டணமும் தரங்கம் பாடியும் துறைமுகப்பட்டணங்கள்.

திருச்சிராப்பள்ளி ஜில்லாவின் விஸ்தீரணம் 4,319 சதுரமைல். இந்த ஜில்லாவுக்கும் சேலம் ஜில்லாவுக்கும் மத்தியில் பச்சைமலைகள் பரவி இருக்கின்றன.



ஸ்ரீரங்கம் கோவில்

முக்கிய நதி காவேரி. திருச்சிராப்பள்ளிப்பட்டணத்துக்கு மேற்கில் 11 மைல் தூரத்தில் காவேரி இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. இந்த இரண்டு கிளைகளுக்கு மத்தியில் ஸ்ரீரங்கம் தீவு இருக்கிறது. இவைகளுக்குக் காவேரி, கொள்ளிடம் என்று பெயர். சராசரி மழை 43 அங்குலம். முக்கிய ப்ாஷை தமிழ். நெல், சோளம், கேழ்வரகு, கொள்ளு, பருத்தி, கரும்பு, புகையிலை ஆகிய இவைகள் பயிராகின்றன. நெசவுத்தொழில், நகைசெய்தல், சுருட்டு செய்தல் ஆகியவை இந்த ஜில்லாவில் முக்கிய தொழில்கள்.

இந்த ஜில்லாவின் முக்கியபட்டணம் திருச்சிராப்பள்ளி. அது தென்னிந்தியா இருப்புப் பாதையின் மேல் இருக்கிறது. திருச்சிராப்பள்ளிக்கும் ஈரோட்டுக்கும் ஒரு கிளை இருப்புப் பாதையும் திருச்சியிலிருந்து புதுக்கோட்டை மார்க்கமாய் மாளுமதுரைக்கு ஒரு கிளை இருப்புப் பாதையும் செல்லுகின்றன. இப்பட்டணத்துக்குக் கிழக்கேயுள்ள போன்மலையில் ரயில்வே தொழிற்சாலை இருக்கிறது. திருச்சிராப்பள்ளியில் மூன்று காலேஜுகள் இருக்கின்றன. இவ்வூர் மத்தில் 272 அடி உயரமுள்ள மலைக்கோட்டை மேல் தாயுமான சுவாமி கோவில் இருக்கிறது. இப்பட்டணத்துக்கு 2 மைல் தூரத்தில் உள்ள ஸ்ரீரங்கம் என்னும் தீவு புண்ணிய ஸ்தலங்களில் ஒன்று. திருவானைக்காவல் என்னும் ஜம்புகேசுவரம் ஒரு சிறந்த சிவஸ்தலம். அமராவதி ஆற்றின் கரையில் உள்ள கரூர் என்ற பட்டணம் ஒரு பெரிய வியாபாரஸ்தலம். இந்த ஜில்லாவில் உள்ள வேறு பட்டணங்கள் முசிரி, குளித்தலை, லால்குடி முதலியவைகளேயாகும். இவைதவிர இந்த ஜில்லாவில் ஏழு ஜமீன் பட்டணங்கள் உள்ளன.



மதுரை ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் ஆலயம்.

பாடம் 35.

## ஜில்லாக்களும் பட்டணங்களும்.—6.

மதுரை ஜில்லாவின் விஸ்தீரணம் 4,900 சதுரமைல். 8 தாலூகாக்கள் அடங்கியுள்ளது. இந்த ஜில்லாவின் முக்கிய மலைத்தொடர் பழநிமலைகள். முக்கிய நதி வைகை. திருவாங்கூர் ராஜ்யத்தில் உள்ள பெரியாற்றின் ஜலம் வைகை மூலமாய் மதுரைஜில்லாவுக்குப் பாய்ச்சலுக்காகக்கொண்டு வரப்படுகிறது. வழங்கும் பாஷை தமிழ். நெல்லும் வேறுசில தானியங்களும், புகையிலையும் பயிராகின்றன. நெசவுத் தொழில், பாத்திரங்கள் செய்தல் இங்கு முக்கிய கைத் தொழில். திண்டுக்கல்லில் சுருட்டு செய்யப்படுகிறது.

இந்த ஜில்லாவின் முக்கிய பட்டணம் மதுரை. முன் காலத்தில் பாண்டிய அரசர்களின் ராஜதானியாக இருந்தது. இங்கு ஒரு தமிழ்ச்சங்கம் நடைபெற்று வருகிறது. இவ்வூரில் பார்க்கத்தக்க கட்டிடங்கள் மதுரை மீனாக்ஷியம்மன் கோவில் திருமலை நாயக்கர் மஹால், புதுமண்டபம், தெப்பக்குளமுமே. துணிநெய்தல், சாயம்போடுதல் ஆகியன முக்கியமான தொழில்கள். மதுரை ஒரு பெரிய வியாபார ஸ்தலம். இவ்விடத்தில் உள்ள காலேஜுகள் மிஷன்காலேஜும், மதுரைக்காலேஜும். திண்டுக்கல் சுருட்டுக்கும், வெண்கலப் பாத்திரங்களுக்கும், சரிகை வஸ்திரங்களுக்கும் பேர் பெற்றது. திருப்பரங்குன்றம், பழனி இவை சுப்பிரமணிய ஸ்தலங்கள். கோடைக்கானல் மலையின் மேலுள்ள பட்டணத்துக்குத் தேக சௌக்கியத்துக்காகக் கோடை காலத்தில் ஐரோப்பியர்களும் இந்தியர்களும் செல்வார்கள். பெரியகுளம், போடியநாயக்கனூர், கண்டமநாயக்கனூர், உத்தமபாளையம் இந்த ஜில்லாவில் உள்ள வேறு பட்டணங்கள்.

ஸ்ரீவில்லி புத்தூர் ஆண்டாள்.

இராமநாதபுரம் ஜில்லாவின் விஸ்தீரணம் சுமார் 4,800 சதுரமைல். இது 9 தாலூகாக்கள் அடங்கியது. இந்த ஜில்லாவுக்கும், ராமேசுவரத்துக்கும் மத்தியில் பாம்பன் கால்வாய் இருக்கிறது. நதிகள் வைகையும், வைப்பாறும் தான்.

வழங்கும் பாஷை தமிழ். இந்த ஜில்லாவில் வசிப்பவர்கள் பெரும்பாலும் மறவர்களும், நாடார்களும், நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களுமே. விவசாயமும் பணலேவாதேவியும் இங்கு முக்கியத் தொழில்கள்.



இராமேசுவரம் கோவில்.

இந்த ஜில்லாவின் முக்கிய ஆபீஸுகள் மதுரையிலேயே இருக்கின்றன. இராமநாதபுரம்:—இந்தப் பெயர் கொண்ட ஜமீனில் உள்ள பெரிய பட்டணம். சிவகங்கையும் ஜமீன் பட்டணம். ராமேசுவர யாத்ரீகர்கள் இராமநாதபுரம் வழியாய்ப் போகிறுர்கள். நவபாஷாணம் இராமநாதபுரத்துக்கு வடக்கே 10 மைல் தூரத்தில் இருக்கிறது. அதில் ராமர் லங்கைக்குப் போனபோது தங்கி நவக்கிரகங்களைப் பூஜித்ததாகச் சொல்லப்படுகிறது. தர்ப்பசயனம்

ஒரு விஷ்ணுஸ்தலம். ஸ்ரீவில்லிபுத்தூர் ஒரு பெரிய விஷ்ணுஸ்தலம். விருதுநகர், சிவகாசி, சாத்தூர் ஆகிய இவைகள் இங்குள்ள முக்கியமான வியாபார ஸ்தலங்கள்.

இராமேசுவரம் ஒரு முக்கியமான யாத்திரை ஸ்தலம். இராமேசுவரம் என்னும் தீவின் மத்தியில் இருக்கிறது. தென்னிந்தியஇருப்புப்பாதை இத்தீவிலுள்ள தனுஷ்கோடி என்ற இடத்தில் முடிகிறது. தனுஷ்கோடி ஒரு விசேஷமான ஸ்நான கட்டம். இவ்விடத்தில் ஆடி தை அமாவாசை முதலிய முக்கிய நாட்களில் ஸ்நானம் செய்யத் திரளான ஜனங்கள் கூடுகிறார்கள். கரரைக்குடி, தேவகோட்டை இவை செட்டிமார் பட்டணங்கள்.

திருநெல்வேலி ஜில்லாவின் விஸ்தீரணம் 4,353 சதுர மைல். எட்டுத் தாலூகாக்கள் அடங்கியது. இந்த ஜில்லாவுக்கும் திருவாங்கூர் ராஜ்யத்துக்கும் மத்தியில் மலைகள் கணவாய்கள் இருக்கின்றன. தாம்பிரவருணி முக்கியமான நதி. இந்த ஜில்லாவின் முக்கிய விளைபொருள்கள் நெல், பருத்தி, சோளம், கொட்டைமுத்து முதலியன. மணல் பூமியில் பனைமரங்கள் விசேஷமாய்ப் பயிராகின்றன. பனஞ்சாற்றிலிருந்து வெல்லமும் சர்க்கரையும், பனங்கற்கண்டும் இங்கு ஏராளமாய்ச் செய்கிறார்கள்.

திருநெல்வேலி முக்கிய பட்டணம். தாம்பிரவருணி நதிக்கரையில் இருக்கிறது. இவ்விடத்தில் ஒரு காலேஜு



திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில்.

இருக்கிறது. பாளையங்கோட்டை திருநெல்வேலியிலிருந்து 2 மைல் தூரத்தில் இருக்கிறது. இதில் இரண்டு காலேஜு



ஸ்ரீ வைகுண்டம் கோவில்.

களும், ஊமை செவிடர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு பாடசாலையும் இருக்கின்றன. தூத்துக்குடி முக்கியமான துறைமுகப் பட்டணமும், வியாபாரத்தில் விசேஷமுள்ள

துமாயிருக்கிறது. இங்கே பஞ்சாலைகள் இருக்கின்றன.



திருச்செந்தூர் கோவில்.

திருச்செந்தூர் ஒரு பேர்பெற்ற சுப்பிரமண்ய ஸ்தலம். தாம்பிர வருணி சங்கமமாகும் இடத்தில் கோற்கை என்ற ஊர் முற்காலத்தில் பாண்டிய ராஜாக்களின் தலைநகராக இருந்தது. ஆழ்வார் திருநகரியும், ஸ்ரீவைகுண்டமும் வைஷ்ணவ ஸ்தலங்கள். மெஞ்ஞானபுரம், நாசரேத், சாயற்

மெஞ்ஞானபுரம் தேவாலயம்.

புரம், இடையன்குடி ஆகிய இடங்களில் கிறிஸ்தவர்கள் அதிகம். கிறிஸ்தவர்களுடைய கோவில்கள் இருக்கின்றன.

# ஜில்லாக்களும் பட்டணங்களும்—7

## பீடபூமிப் பிரதேசம்.

பல்லாரி ஜில்லாவின் விஸ்திரணம் 5,714 சதுர மைல். 9 தாலூகாக்கள் அடங்கியது. பல்லாரி ஜில்லா ஒரு பீட பூமி. இதில் குன்றுகள் இருக்கின்றன. பல்லாரி வறட்சி யான பூமி. அடிக்கடி பஞ்சங்கள் நேரிடுகின்றன. ஜனங்கள் சுமார் 10 லக்ஷம். பேசப்படும் பாஷைகள் கன்னடமும், தெலுங்கும். இந்த ஜில்லாவில் விளையும் வஸ்துக்கள் பருத்தி, சோளம், கேழ்வரகு, அவுரி, இரும்பு, ஈயம், பித்தளை ஆகிய உலோகங்களும் இங்கு அகப்படுகின்றன.

பல்லாரி முக்கிய பட்டணம். அது ஒரு ராணுவ ஸ்தலம். ஆதோனியில் ஜமுக்காளங்கள் செய்யப்படுகின் றன. ஹோசப்பேட்டை ஒரு டிவிஷனுக்கு முக்கிய பட்ட ணம். இதற்கருகில் ஹம்பி என்னும் இடத்தில் முற்கால விஜயநகர ராஜ்யத்தின் தலைநகரின் அழிந்துபோன சின் னங்கள் இன்னும் இருக்கின்றன.

கர்நூல் ஜில்லாவின் விஸ்தீரணம் 7.580 சதுர மைல். 9 தாலூகாக்கள் அடங்கியது. இந்த ஜில்லாவின் கிழக்கே கம்பம் பள்ளத்தாக்கு இருக்கிறது. அதில் கம்பம் ஏரி என்ற ஒரு பெரிய ஏரி இருக்கிறது. இந்த ஜில்லாவும் பல்லாரி யைப்போல் வறட்சியானதே. ஜனத்தொகை சுமார் ஒன் பதரை லக்ஷம். தெலுங்கும், உருதும் பேசுகிறார்கள். பருத்தி, சோளம், கரும்பு, அவுரி ஆகியவை பயிராகின்றன. முக்கியத் தொழில்கள் நெசவும், வெல்லம் செய்தலுமே.

நீலகிரி ரெயில்வே.

கர்நூல் முக்கிய பட்டணம். இந்தப் பட்டணத்தில் மகம்மதியர்கள் விசேஷமாய் இருக்கிறார்கள். நந்தியால் ஒரு வியாபார ஸ்தலம். அஹோபிலம் விஷ்ணுக்ஷேத்திரம். ஸ்ரீசைலம் சிவஸ்தலம். கம்பம் வேறு ஒரு பட்டணம்.

அனந்தபுரம் ஜில்லாவின் விஸ்தீரணம் 6,718 சதுர மைல். இது ஒன்பது தாலூகாக்கள் அடங்கியது. வட பாகமும் மத்திய பாகமும் பீடபூமி. தெற்கிலுள்ள தாலூகாக்கள் செழிப்புள்ளவை. வடபெண்ணையாறு முக்கிய நதி. பருத்தி இந்த ஜில்லாவின் வடபாகத்தில் பயிராகிறது. பெய்யும் மழை சராசரியில் 17 அங்குலத்துக்குக் குறைவு. கிறிஸ்தவர்கள் இந்த ஜில்லாவில் மிகுதி. பாஷை தெலுங்கும் கன்னடமும். அனந்தபுரம் முக்கிய பட்டணம். இதில் கவர்ன்மெண்டார் பார்வையில் உள்ள காலேஜ் ஒன்று இருக்கிறது. தர்மவாரத்தில் பட்டுப் புடவைகள் நெய்யப்படுகின்றன. குத்தியில் ஒரு பெரிய கோட்டையிருக்கிறது. பெனுகோண்டாவிலும் ஒரு மலைக்கோட்டை இருக்கிறது. இந்துபுரம் ஒரு பெரிய வியாபாரஸ்தலம்.

கடப்பை ஜில்லா. இது சுமார் 6,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. 9 தாலூகாக்கள் அடங்கியது. மலைகள் பால்கோண்டா மலைகளும், சேஷாசல மலைகளுமே. நதிகள் வடபெண்ணை, பாபாக்கினி, சித்ராவதி என்பன. பருத்தி, தினை, அவுரி, கரும்பு முதலியவை விசேஷமாய்ப் பயிராகின்றன. இந்த ஜில்லாவில் கடப்பைக்கல் என்ற கருங்கற்கள் ஏராளமாய்க் கிடைக்கின்றன. அவை வெளியூர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

கடப்பை-இந்த ஜில்லாவின் முக்கிய பட்டணம். இது ஒரு முனிசிபல் பட்டணம். இதில் ஒரு ஹைஸ்கூல் இருக்

கிறது. ஜம்மல்மடுகு ஒரு பெரிய வியாபார ஸ்தலம். இங்கு ஒரு பிரபலமான மிஷினரால் நடத்தப்படும் வைத்தியசாலை இருக்கிறது. புல்லம்பேட்டை நாணயமான சரிகை வஸ்திரத்துக்குப் பேர்பெற்றது. சித்தவட்டம் கோடை காலத்தில் முலாம்பழத்துக்குப் பேர்பெற்றது.

### பாடம் 37.

## ஜில்லாக்களும் பட்டணங்களும்—8.

## மேற்குக்கரைப் பிரதேசம்.

நீலகிரி ஜில்லாவின் விஸ்தீரணம் 982 சதுர மைல். 3 தாலூகாக்கள் உள்ளது. இந்த ஜில்லா ஒரு சிறிய பீடபூமி. தோட்டபெட்டா மலைச்சிகரம் 8,760 அடி உயரமுள்ளது. நீலகிரி ஜில்லாவுக்கும் வயநாடு மைசூர் பீடபூமிகளுக்கும் மத்தியில் ஒரு பள்ளத்தாக்கு உண்டு. நீலகிரி ஒரு குளிர்ச்சியான இடம். இந்த ஜில்லாவில் காட்டு ஜாதியார் வசிக்கிறார்கள். காப்பி, தேயிலை, சிங்கோனா முதலியன இந்த ஜில்லாவில் முக்கியமாய்ப் பயிராகின்றன. இவை தவிர உருளைக்கிழங்கு, காரட், முதலிய சீமைக் கிழங்குகளும் பயிரிடுகிறார்கள். சிங்கோனாவில் குயினா எடுக்கிறார்கள்.

உதகமண்டலம் இந்த ஜில்லாவின் முக்கிய பட்டணம். சென்னைக் கவர்னரும் பெரிய கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் கோடை காலத்தில் குளிர்ச்சிக்காக இவ்விடம் வருகிறார்கள். வெலிங்டனும் கூனூரும் இம்மலையில் உள்ள வேறு குளிர்ச்சியான இடங்கள்.

மலையாளம் ஜில்லாவின் விஸ்தீர்ணம் சுமார் 5,800 சதுர மைல். 11 தாலூகாக்கள் அடங்கியது. மேற்குத் தொடர்ச்சி மலைகளின் ஒரு பாகமும் அவைகளுக்கும் அராபிக் கடலுக்கும் மத்தியில் உள்ள ஒரு துண்டுச் சம

வெளியும் சேர்ந்து இந்த ஜில்லா ஆகின்றது. முக்கிய நதி பொன்னாணி. பருவக் காற்றால் இந்த ஜில்லாவில் கடற்கரையில் 120 அங்குல மழையும் மலைகளில் 150முதல்200 அங்குலம் வரையில் மழையும் பெய்கின்றன. இந்த ஜில்லாவில் வழங்கும் பாஷைகள் மலையாளமும், தமிழும். இவ்விடத்தில் வசிக்கும் மகம்மதியர்களுக்கு மாப்பிள்ளைகள் என்று பெயர். நெல், தேங்காய், மிளகு, இஞ்சி, காபி முதலியன பயிராகின்றன. இங்கு ஓடு செய்தலும் நெசவுத் தொழிலும் முக்கியத் தொழில்களாய் இருக்கின்றன.

கள்ளிக்கோட்டை முக்கிய பட்டணம். இது ஒரு துறைமுகப் பட்டணம். இவ்விடத்திலிருந்து காப்பிக்கொட்டை, ஏலக்காய், மிளகு ஏற்றுமதியாகின்றன. இது 6 மைல் நீளமும் சராசரியில் 15 மைல் அகலமும் உள்ளது.

கண்ணனூர் ஒரு ராணுவஸ்தலம். பாலக்காடு—இதில் ஒரு காலேஜ் இருக்கிறது. பொன்னாணி வியாபார மிகுதியுள்ள ஒரு துறைமுகப் பட்டணம். பிரிட்டிஷ் கோச்சியும் தலைச்சேரியும் வேறு துறைமுகப் பட்டணங்கள்.

அஞ்சங்கோ ஜில்லா திருவனந்தபுரத்துக்கும் கொல்லத்துக்கும் மத்தியில் இருக்கிறது. இந்த ஜில்லா திருவனந்தபுரத்தில் இருக்கும் பிரிட்டிஷ் ரேஸிடேண்டு என்னும் உத்தியோகஸ்தருடைய பார்வையின்கீழ் இருக்கிறது. தமிழும் மலையாளமும் பேசப்படுகின்றன. வசிக்கும் ஜனங்கள் பெரும்பான்மை ரோமன் காதோலிக் கிறிஸ்தவர்கள். தென்னைமரங்கள் இங்கு விசேஷமாய் இருக்கின்றன. கயிறு திரித்தல் முக்கியமான தொழில்.

தென்கன்னட ஜில்லா 4,021 சதுரமைல் விஸ்தீரணமுள்ளது. இந்த ஜில்லா 7 தாலூகாக்கள் அடங்கியது.

இது மேற்குக்கணவாய் மலைக்கும் சமுத்திரத்துக்கும் நடுவில் இருக்கிறது. மலைகளில் உள்ள காடுகளில் மிளகு, ஏலக்காய், கடுக்காய், தேன் முதலியவை கிடைக்கின்றன. மழை அதிகம். முக்கிய நதி நேத்திராவதி. நெல், தேங்காய், வாசனைத்திரவியங்கள், காப்பிக்கொட்டை, பாக்கு முதலியவை உற்பத்தியாகின்றன. காடுகளில் விலையுயர்ந்த மரங்கள் கிடைக்கின்றன. ஓடு செய்தலும் நெசவும் இங்கு முக்கியமான தொழில்கள் ஆகும்.

மங்களூர்—முக்கியமான பட்டணம். இது ஒரு துறைமுகப் பட்டணம். இதில் சிறந்த ஓடுகள் செய்கிறார்கள். காப்பிக்கொட்டை முதலிய சாமான்கள் ஏற்றுமதியாகின்றன. உடுப்பி--ஒரு சிறந்த சுப்பிரமணியஸ்தலம், குந்தாபுரம் வேறு ஒரு பட்டணம். இதில் சப்கலெக்டர் வசிக்கிறார்.

### பாடம் 38.

## சுதேச ராஜ்யங்களும் ஜமீன்களும்—I.

சுதேச ராஜ்யங்களுள் சில இந்தியா கவர்ன்மெண்டின் ஆதீனத்தின் கீழ் இருக்கின்றன. வேறு சில சென்னை ராஜ்யத்தின் ஆதீனத்தின் கீழ் இருக்கின்றன. இன்னும் சில சென்னை ராஜ்யத்தின் ஆதரவு பெற்றவை. இந்தியா கவர்ன்மெண்டாரின் ஆதீனத்தின் கீழ் உள்ள ராஜ்யங்கள் மைசூரும் குடகும். மதராஸ் கவர்ன்மெண்டின் ஆதீனத்தின் கீழ் உள்ளவைகள் திருவாங்கூர், கோச்சி, புதுக்கோட்டை, பங்கனபல்லி, சுண்டூர் முதலியன.

மைசூர் ராஜ்யம் ஒரு பீடபூமி. அது கடல் மட்டத்துக்கு 2,000 அடிக்குமேல் இருக்கிறது. இதன் மேற்குப் பாகம் காடுகள் உள்ள மலைப்பிரதேசம். கிழக்குப் பாகம் செம்மண் பூமியுள்ள ஒரு சமவெளி. வடக்குப்பாகம் கரிசல்

பூமியுள்ள ஒருசமவெளி. இவ்விராஜ்யத்தில் உள்ள மலைகள் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் கிளைகளும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் கிளைகளுமே. இவற்றோடு சிலகுன்றுகளும் இருக்கின்றன. இவைகளுக்குத் துருக்கம் என்ற பெயர் வழங்குகிறது. முக்கியமான துருக்கங்கள் நந்திதுருக்கம், சாவன் துருக்கம், சித்திர துருக்கம். இந்தத் துருக்கங்களின்மேல் முற்காலத்தில் கோட்டைகள் இருந்தன.

மைசூர் ராஜ்யத்தின் வடபாகத்தில் துங்கபத்திரா நதியும், தென்பாகத்தில் காவேரி நதியும் செல்லுகின்றன. மைசூர் மலைகளில் வட பெண்ணையாறு, தென் பெண்ணையாறு, பாலாறு, ஆகிய நதிகள் உற்பத்தியாகின்றன. மைசூரில் அநேக குளங்கள் இருக்கின்றன. இவைகளுள் பெரியது சூலிக்கர் குளம். அதன் சுற்றளவு 40மைல். காவேரியாற்றின் மீது அநேக இடங்களில் அணைகள் கட்டி நீரைத் திருப்பிப் பாய்ச்சலுக்கு உபயோகிக்கிறார்கள். அவ்வித அணைகளிற் பெரியது கண்ணம்பாடி அணைக்கட்டு. இந்த ராஜ்யத்தின் மலை நாட்டில் விசேஷ மழை உண்டு. சமவெளிகளில் மழை குறைவு. ஆனாலும் அது கீழக்கரைப் பிரதேசத்தைவிடக் குளிர்ச்சியாயிருக்கும். கேழ்வரகு, பருத்தி, கோதுமை, பாக்கு, கரும்பு முதலியன பயிராகின்றன. மலைப்பிரதேசங்களில் உள்ள காடுகளில் சந்தனமரம், கருங்காலி முதலிய விருக்ஷங்கள் வளர்கின்றன. கோலார் ஜில்லாவில் தங்கமும், சிலவிடங்களில் இரும்பும் அகப்படுகின்றன. இரத்தனக்கம்பளம் கம்பளி முதலியவை நெய்தல் முக்கியமான கைத்தொழில். இவ் விராஜ்யத்தில் பெரும்பான்மை கன்னடியார்கள் வசிக்கிறார்கள். நாகரிக மற்ற ஜாதியார்களும் சிலர் வசிக்கிறார்கள். வழங்கும் பாஷை கன்னடம். மைசூர் ராஜ்யம் 8 தாலூகாக்களாகப்

பிரிக்கப்பட்டிருக்கிறது. மைசூர் இவ்விராஜ்யத்தின் இராஜ தானி. இதில் மகாராஜா வசிக்கிறார். இதில் மகாராஜா காலேஜ் இருக்கிறது. பெங்களூர்—இது ஒரு பெரிய பட்டணம், கோடை காலத்தில் சௌக்கியத்துக்காகச் செல்லுமிடம். இது ஒரு ராணுவஸ்தானம். இதில் கல்விச்சாலைகளும் சிங்கார வனங்களும் காட்சிச் சாலைகளும் இருக்கின்றன. அதன் ஜனத்தொகை ஏறக்குறைய 6 லக்ஷம். ஸ்ரீரங்கபட்டணம் காவேரியாற்றின் மத்தியில் மைசூருக்குப் பத்துமைல் தூரத்தில் இருக்கிறது. மைசூரை ஆண்ட ஹைதர்ஆலி, திப்பு சுல்தான் என்றவர்களுடைய ராஜதானியாக இது இருந்தது. கோலார் பெங்களூருக்குக் கிழக்கேயுள்ள ஒரு பட்டணம். இது ஹைதர் ஆலி பிறந்த இடம். இதற்குச் சமீபத்தில் பொன் சுரங்கங்கள் உண்டு. சிமோகா, சித்திரதுர்க்கம், ஹாசான்—இவை இவ் ராஜ தானியைச் சேர்ந்த வேறு பட்டணங்கள்.

குடகுமாகாணம்—இது மலைப்பாங்கான நாடு. மலைத் தொடர்கள் கிழக்கு நோக்கிச் செல்லுகின்றன. இம் மலைகளில் காப்பித் தோட்டங்கள் இருக்கின்றன. முக்கிய நதியாகிய காவேரி, இந்நாட்டின் மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது. தென்மேற்குப் பருவக்காற்று வீசும் போது இந்நாட்டில் விசேஷமாய் மழை பெய்கிறது. நெல், காப்பிக்கொட்டை, கமலா முதலியவை விசேஷமாய்ப் பயிராகின்றன. காடுகளில் தேக்கு, மூங்கில் விசேஷமாய்க் கிடைக்கின்றன. இந்நாட்டில் இந்துக்களும் முகம்மதியரும், குடகுநாட்டாரும் வசிக்கிறார்கள். வழங்கும் பாஷைகள் கன்னடமும் குடகு பாஷையுமாம். இந்தப் பாஷை, கன்னடமும் மலையாளமும் போன்றிருக்கும்.

இந்நாடு இந்திய துரைத்தனத்தாரின் ஆதீனத்தின் கீழ்வந்து சுமார் 100 வருஷங்கள் ஆகின்றன. மைசூரிலிருக்கும் ரஸிடேண்டு என்னும் உத்தியோகஸ்தர் ஆதிக்கத்தில் அவர் இதை மேற்பார்த்து வருகிறார்.

மேர்க்காரா என்பது முக்கிய பட்டணம். இங்கே அநேக ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் வசிக்கிறார்கள். வீரராஜேந்திரன் பேட்டையும் ஒரு முக்கிய பட்டணம்.

## பாடம் 39.

## சுதேச ராஜ்யங்களும் ஜமீன்களும்—2

திருவாங்கூர் ராஜ்யத்தின் விஸ்தீர்ணம் 7,000 சதுர மைலுக்கு அதிகம். இந்த ராஜ்யத்தில் உள்ள முக்கிய மலைகள் திருவாங்கூர் மலையும் அகஸ்திய மலையுமே. திருவாங்கூர் மலை ஆனைமலை யென்றும், ஏலக்காய் மலை யென்றும், பீர்மேடுமலை யென்றும் சொல்லப்படுகிறது. இந்த ராஜியத்தினுள் முக்கியமான நதி பெரியாறு. இதில் 60 மைல் தூரம் படகுகள் போக்குவரவு செய்யக்கூடும்.

இவ்விராஜ்யத்தில் கோடைகாலத்தில் அதிக உஷ்ணமில்லாமலும் மழை காலத்தில் அதிக குளிர்ச்சியில்லாமலும் இருக்கும். ஜனத்தொகை 34 லக்ஷத்துக்கு அதிகம். வழங்கும் பாஷைகள் பெரும்பான்மை மலையாளமும் சிறுபான்மை தமிழும். கிறிஸ்தவர்கள் ஐந்தில் ஒரு பாகம் இருக்கிறார்கள். மகமதியர்களுக்கு மாப்பிள்ளைகள் என்றும் பிராமணர்களில் சிலர்க்கு நம்பூரிகளென்றும் பேர். நாயர் என்ற ஜாதியாரும் இருக்கிறார்கள். சமவெளிகளில் நெல், தென்னை, பாக்கு, பலா, இஞ்சி முதலியவை பயிராகின்றன. மலைகளில் காப்பிக்கொட்டையும், மிளகு, ஏலக்காய், ஜாதிக்காய் முதலிய வாசனைத் திரவியங்களும், தேக்கு




திருவாங்கூர், கொச்சி ராஜ்யம்

வேங்கை முதலிய விருக்ஷங்களும் உண்டாகின்றன. மலைகளில் யானைகள் விசேஷமா யிருக்கின்றன.

இந்த ராஜ்யத்தின் முக்கிய பட்டணம் திருவநந்தபுரம். மகாராஜாவால் ஏற்படுத்தப்பட்ட இரண்டு காலேஜுகள் இங்கே இருக்கின்றன. கோல்லம் ஒரு துறைமுகப் பட்டணம். இதிலிருந்து காப்பிக்கொட்டை, தேயிலை, ஓடுகள்; மரம் முதலியவை ஏற்றுமதியாகின்றன. ஆலப்

பிழையும் ஒரு துறைமுகப் பட்டணம். நாகர்கோவில் கோட்டயம் கிறிஸ்தவர்கள் இருக்கும் பட்டணங்கள்.

கோச்சி ராஜ்யம் மலையாளத்துக்கும் திருவாங்கூருக்கும் நடுவில் உள்ளது. மேற்குப்பக்கம் மலைகளும் கிழக்குப் பக்கம் சமவெளியும் இருக்கின்றன. முக்கியமான மலை ஆனை மலை. இந்த ராஜ்யத்தின் தெற்கில் பெரியாறும் வடக்கில் பொன்னாணியும் ஓடுகின்றன. மழை அதிகமாகையால் சீதோஷ்ணஸ்திதி மிதமாயிருக்கிறது. நெல், தென்னை, காப்பிக்கொட்டை, அவுரி, பாக்கு, வாசனைத்திரவியங்கள் முதலியன விளைகின்றன. காடுகளில் தேக்கு அதிகம். போக்குவரவு, படகுகள் மூலமாயும் மாட்டு வண்டிகள் மூலமாயும் நடக்கிறது. சென்னையிலிருந்து கள்ளிக்கோட்டைக்குப் போகும் இருப்புப்பாதையில் சோரனூரில் இருந்து ஒரு கிளை பிரிந்து எர்ணாகுளம் வரையில் செல்கிறது. இதன் ஜனத்தொகை 9லக்ஷம். பேசும் பாஷை மலையாளம். இது ஒரு ராஜாவால் ஆளப்படுகிறது. எர்ணாகுளம்—இந்த ராஜ்யத்தின் ராஜதானி. இதற்குக் கிழக்கே 6 மைல் தூரத்தில் திருப்பூந்துறை என்ற ஊரில் ராஜா வசிக்கிறார். திருச்சூர் வியாபாரப் பிரசித்தியுள்ள ஒரு பெரிய பட்டணம்.

## பாடம் 40

## சுதேச ராஜ்யங்களும் ஜமீன்களும்:—3

புதுக்கோட்டை ஒரு சிறிய ராஜ்யம். திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம், மதுரை ஆகிய ஜில்லாக்களுக்கு இடையில் உள்ளது. நெல்லும், புன்செய்த் தானியங்களும் முக்கிய விளைபொருள்கள். ஜனத்தொகை 4 லக்ஷத்துக்கதிகம். இந்த ராஜ்யத்தை ஆளுகிற அரசர்களுக்குத் தொண்டைமான் என்ற பெயர் உண்டு. புதுக்

கோட்டை முக்கிய பட்டணம். இங்கே ராஜாவால் ஏற்படுத்தப்பட்ட காலேஜ் ஒன்று இருக்கிறது.

பங்கனபல்லி என்னும் சிறிய ராஜ்யம் கர்நூல் ஜில்லாவில் உள்ளது. 255 சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. வழங்கும் பாஷை தெலுங்கு. ஜனத்தொகை 37,000. இதை யாளும் அரசர்களுக்கு நவாப்பு என்ற பட்டப்பெயர் உண்டு.

சுண்டூர் (சாந்தூர்) மைசூர் ராஜ்யத்துக்கும் பல்லாரி ஜில்லாவுக்கும் இடையில் ஒரு பள்ளத்தாக்கில் இருக்கிறது.

சுதேச அரசர்களுக்கு எல்லாவித அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவர்கள் நாடுகள் ஒவ்வொன்றிலும் ஆங்கிலேயப் பிரதிநிதி ஒருவர் இருக்கிறார். அவருக்கு ரஸிடெண்ட் என்று பெயர். இவரோடு ஆலோசனை செய்யாமல் முக்கிய காரியங்களைச் சுதேச வரசர்கள் செய்யக்கூடாது.

இந்த ராஜதானியில் உள்ள முக்கிய ஜமீன்கள் ஆவன:—கஞ்சம் ஜில்லாவில் பர்லாகமிடியும், விசாகபட்டணம் ஜில்லாவில் ஜயபுரம், விஜயநகரம் பொப்பிலியும், கிழக்குக் கோதாவரியில் பித்தாபுரமும், மேற்குக் கோதாவரியில் போலவரமும், நெல்லூரில் வெங்கடகிரியும், ராமநாதபுரத்தில் ராமநாதபுரம் சிவகங்கையும், திருச்சிராப்பள்ளியில் உடையார்பாளையமும், சித்தூரில் காளஹஸ்தி கார்வேட்நகரமும், திருநெல்வேலியில் எட்டையாபுரமும் இந்த ராஜதானியில் உள்ள முக்கிய ஜமீன்கள்.

மேற்கூறியவைகளோடு அன்னிய ஐரோப்பிய நாடுகளும் ஆங்காங்கே நம்முடைய இராஜதானியில் சில இருக்கின்றன. அவை காரைக்கால், புதுச்சேரி, ஏனம், மாஹி. இவை பிரஞ்சுக்காரரைச் சேர்ந்தவை.

பாடம். 41.

## சென்னை ராஜதானியில் உள்ள முக்கிய பட்டணங்கள்.

1. தேவாலயங்கள் உள்ளபட்டணங்கள். இவைகளில் முக்கியமானவை மதுரை, திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம், தஞ்சாவூர், கும்பகோணம், சிதம்பரம், காஞ்சீபுரம், திருப்பதி, ராமேசுவரம் ஆகியவைகளேயாகும்.

2. மலைகளின் மீதுள்ள பட்டணங்கள். இவைகளில் கோடைகாலத்தில் உத்தியோகஸ்தர்களும் தனவான்களும் சுகத்திற்காகப்போய் வாசஞ்செய்கிறார்கள். இவைகளில் முக்கியமானவை உதகமண்டலம், குன்னூர், கோடைக்கானல், ஏர்க்காடு முதலியவைகள்.

3. சரித்திரப்பிரசித்தியுள்ள பட்டணங்கள் சென்னை, ஆற்காடு, வந்தவாசி, செஞ்சி, திருச்சிராப்பள்ளி, விஜயநகரம் (ஹம்பி) ஆகியவை.

4. கடற்கரைப்பட்டணங்கள்.

சென்னை ராஜதானியில் கடற்கரை நீண்டிருக்கிறது. இயற்கையாய் அமைந்துள்ள துறைமுகங்கள் இல்லை. மேற்கு, கிழக்குக்கரையில் சமுத்திரம் ஆழங் குறைவாயிருப்பதால் கரைக்குக் கொஞ்ச தூரத்திலேயே நடுச்சமுத்திரத்தில்கப்பல்கள் தங்கிச் சாமான்களைப் படகுகளில் ஏற்றவோ அல்லது இறக்கவோ செய்ய வேண்டியிருக்கிறது. கிழக்குச் சமுத்திரக் கரையோரத்தில் இருக்கும் பட்டணங்கள் களிங்கபட்டணம், பிமிலிபட்டணம், விசாகபட்டணம், காக்கிநாடா, மசூலிபட்டணம், சென்னபட்டணம், புதுச்சேரி, கூடலூர், நாகபட்டணம்,

தனுஷ்கோடி, தூத்துக்குடி ஆகியவை. காக்கிநாடாவில் இருந்து கோதாவரி கிருஷ்ண அரங்கங்களில் விளையும் பொருள்களை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. புதுச்சேரி யிலிருந்து மணிலாக்கொட்டைகளைப் பிரஞ்சு தேசத் துக்கு ஏற்றுமதி செய்து அனுப்புகிறார்கள்.

மேற்குக் கடற்கரையில் உள்ள பட்டணங்கள்:— கோல்லம், ஆலப்பிழை, கோச்சி, வேம்பூர், கள்ளிக்கோட் டை, தலைச்சேரி, கண்ணனூர், மங்களூர், ஆகியவை மேற் குக்கரைச் சமவெளியில் கிடைக்கும் தேங்காய், கயிறு, மிளகு, முதலியவையும் மலைகளில் கிடைக்கும் காப்பிக்கொட்டை, தேயிலை, ஏலக்காய், தேக்கு முதலியவையும் பம்பாய், இலங்கைத்தீவு, ஐரோப்பா முதலிய நாடுகளுக்கு ஏற்று மதி செய்து அனுப்புகின்றன.

5. ரெயில்வே ஜங்ஷன் பட்டணங்கள்:—

செங்கற்பட்டு, அரக்கோணம், ரேணிகுண்டா, குண்டக்கல், பெஜவாடா, கூடூர், தர்மாவரம், பாக்கலா, காட்பாடி, விழுப்புரம், கூடலூர், மாயவரம், திருவாரூர், தஞ்சை, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், மதுரை, மணி யாச்சி, திருநெல்வேலி, ஈரோடு, போத்தனூர், பெங்க ளூர், ஜோலார் பேட்டை முதலியவை.

# வினாக்கள்.

## 1. பொது விஷயங்கள்.

1. பூமியின் உருவம் என்ன? அது எப்படி?

2. பகல் இரவு எவ்வாறு உண்டாகின்றன? 'சூரிய கிரஹணம்' என்றால் என்ன? அது எவ்வாறு உண்டாகிறது?

3. கோடைகாலம் மாரிகாலம் எவை?

4. 'தேய்பிறை, வளர்பிறை' என்றால் என்ன? சந்திர கிரஹணம் உண்டாவது எப்படி?

5. 'மலைத்தொடர்' 'பள்ளத்தாக்கு' என்றால் என்ன? மலையின் உபயோகங்கள் எவை?

6. பூமியின் நிலப் பிரிவுகளையும் நீர்ப் பிரிவுகளையும் சொல்லு.

7. 'சீதோஷ்ணம்' என்றால் என்ன? பூமியின் சீதோஷ்ண மண்டலங்கள் எவை?

8. நிலக்காற்று கடற்காற்று எவ்வாறுண்டாகின்றன?

9. மழை எப்படி உண்டாகின்றன? பூமியின் எப் பாகங்களில் மழை விசேஷம்? பெய்த மழையின் அளவை எவ்வாறு அளந்து கண்டுபிடிப்பது?

10. நதிகள் எவ்வாறு உண்டாகின்றன? 'உபநதிகள்', 'கிளைநதிகள்' என்றால் என்ன? நதம் என்று எதற்குச் சொல்வது?

11. கழிமுகங்கள் யாவை? நதியின் உபயோகங்கள் யாவை? ஏரிகள் எதற்கு உபயோகமானவை?

12. மனித ஜாதியார் எத்தனை வகை? அவர்கள் எவ்வகையாகப் பிரிக்கப்படுகிறார்கள்?

## இந்தியா.

13. இந்தியாவின் எல்லைகளும் இயற்கைப் பாகங்களும் எவை? இந்தியா எவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன?

## சென்னை ராஜதானி.

14. இந்த ராஜதானியின் இயற்கையான பாகங்கள் எவை? இந்த ராஜதானியின் ஜனத்தொகை என்ன?

15. இந்த ராஜதானியில உள்ள தீவுகள், மலைகள், சமவெளிகள் எவை? அவைகளின் பெயர் என்ன?

16. சென்னை ராஜதானியில் உள்ள புண்ணிய நதிகள் யாவை? அவைகளின் உற்பத்தி ஸ்தானங்களும் அவை செல்லும் பிரதேசங்களும் எவை?

17. 'நீர் வீழ்ச்சிகள்' என்றால் என்ன? இந்த ராஜ தானியில் உள்ள நீர் வீழ்ச்சிகளும் அவைகளின் இருப் பிடங்களும் எவை?

18. இந்த ராஜதானியில் உள்ள ஏரிகள் எவை?

## சீதோஷ்ணமும் மழையும்.

19. ஓரிடத்தின் சீதோஷ்ணத்தை எவ்வாறு அறிய லாம்? ஓரிடத்தில் உள்ள உஷ்ணம் எக்காரணங்களால் குறைவுபடும்?

20. பருவக்காற்று என்றால் என்ன? இந்த ராஜ தானியில் உள்ள பருவக்காற்று எவை? மேற்குக்கரைப் பிரதேசங்களில் ஏன் அதிக மழை பெய்கிறது?

21. மழை குறைவான பிரதேசம் எது? ஏன் அங்கு மழை குறைவு?

## பாய்ச்சல் ஆதாரங்களும் விளை பொருள்களும்.

22. சென்னைராஜதானியில் பாய்ச்சல் ஆதாரங்கள் எவை? முக்கிய அணைகள் எவை? அவைகளின் உபயோ கங்கள் எவை?

23. 'ப்ராஜக்ட்' என்றால் என்ன? முக்கிய ப்ராஜக்ட் கள் எவை? அவைகளின் உபயோகங்கள் யாவை?

24. நம்முடைய ராஜதானியில் உள்ள சமவெளி களில் விளையும் வஸ்துக்கள் எவை? பின்வரும் வஸ்துக்கள் எவ்விடங்களில் கிடைக்கின்றன:—கரும்பு, புகையிலை, கம்பு, அவுரி, கோதுமை, பருத்தி.

25. மேற்சொல்லப்பட்ட வஸ்துக்கள் பயிராவதற்கு வேண்டிய சௌகரியங்கள் எவை? ராஜதானிப் படமொன்று வரைந்து இந்த வஸ்துக்கள் விளையும் ஜில்லாக்களைக் குறிப்பிடுக.

26. மலைப்பிரதேசங்களில் விளையும் வஸ்துக்கள் எவை? பின்வரும் வஸ்துக்கள் எங்கே கிடைக்கின்றன? படமெழுதி இடங்களைக் குறிப்பிடுக—காப்பிக்கொட்டை, தேயிலை, மிளகு, ஏலக்காய், குயினு.

27. சென்னை ராஜதானியில் உள்ள காட்டுப் பிரதேசங்கள் எவை? அவைகளில் விளையும் பொருள்கள் யாவை?

28. இந்த ராஜதானியில் கிடைக்கும் முக்கிய உலோகங்களையும் அவைகள் அகப்படும் இடங்களையும் சொல்லு.

## வியாபாரமும் போக்குவரவு சாதனங்களும்.

29. நம்முடைய ராஜதானியில் உள்ள முக்கிய தொழில்கள் எவை? 'ஏற்றுமதி', 'இறக்குமதி' என்றால் என்ன? முக்கிய ஏற்றுமதிகள் எவை?

30. நம்முடைய ராஜதானியில் கிழக்குக் கரையில் உள்ள துறைமுகப் பட்டணங்கள் எவை? அவைகளினின்று ஏற்றுமதியாகும் வஸ்துக்கள் யாவை?

31. சென்னை ராஜதானியில் போக்குவரவு சாதனங்கள் எவை? முக்கிய இருப்புப் பாதைகள் எவை?

32. ஒருவன் சென்னையிலிருந்து பெங்களூருக்கும் வேறொருவன் சென்னையிலிருந்து ராமேசுவரத்துக்கும் போகவேண்டுமானால் வரிசையாக அவர்கள் இருவரும் கடக்கவேண்டிய ரயில்வே ஜங்ஷன்கள் எவை?

33. போக்குவரவு சாதனங்களாக உபயோகப்படும் கால்வாய்கள் எவை? அவை எவ்வாறு உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன?

## ஜில்லாக்களும் முக்கிய பட்டணங்களும்.

34. தக்ஷிண பீடபூமியில் உள்ள ஜில்லாக்கள் எவை? அவைகளில் உள்ள முக்கிய பட்டணங்கள் எவை?

35. பின் வரும் இடங்கள் உள்ள ஜில்லாக்களையும் அவ்விடங்களின் விசேஷங்களையும் சொல்லுக:—

கரூர், திண்டுக்கல், தூத்துக்குடி, ஆதோனி, இந்துபுரம், கள்ளிக்கோட்டை, உடுப்பி, எல்லூர், தவளேசுவரம், பந்தர், மதனபள்ளி, திருப்பூர், கிருஷ்ணகிரி, நாகபட்டணம்.

## சுதேச ராஜ்யங்களும் ஜமீன்களும்.

36. சென்னை ராஜதானியில் உள்ள சுதேச ராஜ்யங்கள் எவை? அவைகளின் பெயரென்ன?

37. சென்னை ராஜாங்கத்தாருடைய ஆதீனத்தின்கீழ் உள்ள ராஜ்யங்கள் எவை? கொல்லம், கோட்டயம், எர்ணுகுளம், திருச்சூர்—இவை எதற்காகப் பேர்பெற்றவை?

38. முக்கிய ஜமீன்கள் இருக்கும் ஜில்லாக்களை ஒரு இராஜதானி படம் வரைந்து காட்டு.

39. நம்முடைய ராஜதானியில் வழங்கும் முக்கிய பாஷைகள் எவை? தெலுங்கு, கன்னடம், இவை எந்த ஜில்லாக்களில் பேசப்படுகின்றன?

---

Printed at the Easen Printing Works, Madura:—38

# புதிய பிரசுரங்கள்.

| | |
|---|---|
| அமெரிக்காவின் மூன்று பெருமக்கள் | 0—10—0 |
| மனோன்மணீயம் | 0—10—0 |
| மும்பெரும் நண்பர்கள் | 0— 8—0 |
| இராமநுஜர் சரித்திரம் படங்களுடன் | 0—10—0 |
| தம்பிரான்றோழர் | 0—10—0 |
| மணிமேகலை | 0— 8—0 |
| அபிமன்னன் வெற்றி | 0— 6—0 |
| கதைமணிக் கோவை | 0— 5—0 |
| பண்டைச் சிறு கதைகள் | 0— 6—0 |
| தமிழ்ப் புலவர் வரலாறு முதல் பகுதி | 0—10—0 |
| ஷை 2ம், 3ம் பகுதி தனித்தனி | 0— 8—0 |
| ஸ்ரீ கிருஷ்ணன் தூது வசனம் | 0— 4—0 |
| பாண்டியமன்னர் சரித்திரம் முதல்பாகம் | 0—10—0 |
| ஷை இரண்டாம் பாகம் | 0— 8—0 |
| மேகநாதன் அல்லது உத்தம புத்திரன் | 0— 8—0 |
| பாண்டவ வீரர்கள் | 0— 8—0 |
| அறிவு விளக்கக் கதைகள் முதல் பாகம் | 0— 8—0 |
| ஷை இரண்டாம் பாகம் | 0— 6—0 |
| ஷை மூன்றாம் பாகம் | 0— 7—0 |
| சுந்தரர் | 0— 5—0 |
| சாவித்திரி தேவி | 0— 5—0 |
| பத்மினி | 0— 3—0 |
| மனோரமை | 0— 5—0 |
| நளன் சரிதை | 0— 4—0 |
| சிறுவர் பொக்கிஷம் | 0— 4—0 |
| கதாமணி மகுடம் | 0— 4—0 |
| சிறுவர் கதைகள் | 0— 4—0 |
| மௌரிய சக்கரவர்த்தி | 0— 7—0 |
| நமது நாட்டுக் கதைகள் | 0— 5—0 |

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

புத்தக வியாபாரம்,

ஸ்ரீ கோபால் மஹால், வடக்குச் சித்திரை வீதி, மதுரை.